# தமிழ் மண்ணின் தந்தை

[திருவருட்பிரகாச வள்ளல் சிதம்பரம் இராமலிங்க சாமிகள்]

ஞான பாரதி

*This e-book can be downloaded for free from*
*http://www.vallalar.org*



*வள்ளலார்*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அணிந்துரை

**த**மிழ் மண்ணின் தந்தை என்று வள்ளல் பெருமான் இராமலிங்கசாமிகளின் வரலாற்று நூலான இந்நூலை எழுதி சன்மார்க்கம் என்ற மிகப்பெரிய தயவுமார்க்கத்தைச் சார்ந்த அறிவு சார்ந்த பெரியோர்களுக்கும் , தமிழ் மக்களுக்கும் அர்ப்பணம் செய்த இந்நூலாசிரியரை என் மனதாரப் பாராட்டுகின்றேன் .

**இ**ந்நூலாசிரியர் இந்நூலில் கையாண்ட சொற்கள் , வாக்கியங்கள் , பகுதிகள் தமிழ் மக்கள் மிகவும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எளிய நடைமுறையில் எடுத்துரைத்திருக்கின்றார் . முக்கியமாக இதுவரை வள்ளல் பெருமான் வரலாற்றுக் காவியங்கள் , நூல்கள் , சரித்திரச் சுருக்கங்கள் அனைத்திற்கும் மேலாக அனுபவ முறையில் இவருடைய இந்நூலில் பல செய்திகளை உதாரணங்களோடும் சான்றுகளோடும் உண்மை விளக்கங்களோடும் , மிகவும் தைரியமாக எடுத்துக் கையாண்டிருக்கிறார் . இதற்காக இந்நூலாசிரியர் பலகாலம் தமிழ் மண்ணில் , பல பெரியவர்கள் , அனுபவம் பெற்ற சாதுக்கள் , சந்நியாசிகள் ஆகிய உண்மை தெரிந்த பெரியோர்களிடம் பழகி அவர்கள் சொல்லக் கேட்டதை பல சான்றுகளோடு இந்நூலில் சுட்டிகாட்டியிருக்கின்றார் . அதே சமயம் , சமயவாதிகளும் , மதவாதிகளும் , சாதிகள் அமைப்பை சார்ந்தவர்களும் மற்றும் விஷமிகளும் இந்த சன்மார்க்க வழிதுறைகளில் அவர்களின் மறைமுகமான அடாத செயல்கள் செய்வதை மிகவும் துணிச்சலுடன் கண்டிக்கிறார் என்பதை பார்க்க முடிகின்றது .

**மு**க்கியமாக இவர் இந்நூலை கையாண்டிருக்கும் விதம் மிகவும் வியப்பாகவும் , ஆச்சரியமாகவும் இருக்கின்றது . குறிப்பாக தமிழ் நாட்டுக்கும் , தமிழ் நாட்டு மக்களுக்கும் , தமிழ்மக்களுக்கும் வள்ளல் பெருமான் வழிகாட்டியாகத் திகழ்ந்ததுபோல் இந்நூலாசிரியரும் இத்தமிழ் மக்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் ஒருமிகப்பெரிய மார்க்கத்தின் பல உண்மைகளை அச்சமின்றி இந்நூலில் தெரிவித்து ஒரு சன்மார்க்க அனுபவம் மிக்க வழிகாட்டியாகத் திகழ்கின்றார் .

**ஞா**ன பாரதி என்னும் இந்நூலாசிரியர் தமிழகத்தில் பிறந்தார் என்றாலும் இவர் மலேசியா நாட்டில் குடியேறி மலேசியத் தமிழ் மக்களுக்கு இவரும் இவருடைய குடும்பமும் தமிழ்த் தொண்டின் மூலம் மிகவும் அறிமுகமாகி இருக்கின்றதும் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் .

**ஆ**க தாம் பிறந்த மண்ணுக்கும் , தோன்றிய தமிழ் இனத்துக்கும் , தம் முன்னோர்கள் பெற்ற நித்திய மெய்வாழ்வாகிய சாகாக்கலையைப் பின்பற்றிய வள்ளல் இராமலிங்க சாமிகளின் வழிவழித் தொண்டராக இருந்து வருகின்ற ஞானபாரதி என்னும் இந்நூலாசிரியர் இன்னும் பல சன்மார்க்கப் படைப்புகளை வெளியிட வேண்டும் என்று வேண்டுகிறேன் .

அன்புடன்

*வடிவேல் பரதேசி*

# முன்னுரை

**அ**ருள் நெறி என்ற ஒரு திருநெறி நமது தமிழ் மண்ணில் பல காலமாக வேரூன்றி வந்திருக்கின்றது . அந்த நெறியானது காலத்தின் சுழற்சி காரணமாக பலரால் பல பெயர் கூறப்பட்டாலும் அதன் தன்மை மட்டும் மாறாமல் இருந்து வருகின்றது . அந்நெறியை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள் நம் தமிழ் முன்னோர்களாகிய சித்தர் பெருமக்களே ஆவார்கள் . தமிழ் மக்களின் முறையான ஒழுக்கமான வாழ்க்கை நடைமுறையின் பயனாக அந்த தவ நெறியை பெற்று வாழ்ந்ததற்கு வரலாற்றுச் சான்றுகளும் சின்னங்களும் இன்று வரை சாட்சியாக இருக்கின்றது . தமிழ் மண்ணில் நீண்ட காலம் நிலவி வரும் இந்நெறிக்கு இவர்தான் முதல் ஆசிரியர் என்று யாரையும் அறுதியிட்டுக் கூற முடியாது . காரணம் இக்கலையை நடைமுறைப்படுத்தி தங்கள் வாழ்க்கையில் வெற்றியும் கண்டவர்கள் தமிழ் மக்கள் .

**இ**ந்த சூழ்நிலையில் தமிழ் மண்ணில் தமிழ் மக்கள் பீடுநடை போட்டு இயற்கையோடு இயற்கையாக நெறி பிறழாது வாழ்ந்ததைக்கண்ட மற்ற மற்ற மதத்தவர்களும் , சமயங்களைச் சார்ந்தவர்களும் ஊடுருவியதன் காரணமாகவும் , அவர்களின் கொள்கைகளை தமிழ் மக்களிடையே புகுத்திய காரணத்தாலும் தமிழ் மண்ணில் மக்கள் அறியாமையில் சிக்கி அதன்காரணமாக ஆச்சாரத்திற்கும் , வழிபாடு பக்தி இவைகளில் மனதை பறி கொடுத்துவிட்டதால் , இடை இடையே அருள் நெறியை மறந்து தவறிப் போனார்கள் . இச்சமயங்களில் பல திருவருள் வல்லபம் பெற்ற பெரியோர்கள் தோன்றி அக்குற்றத்தை நீக்கி அக்காலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு அருள் நெறியாகிய செந்நெறியை அதன் தன்மை மாறாது மக்களிடையே எடுத்துச் சொல்லி வெற்றியும் பெற்றார்கள் . சென்ற பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தமிழ் மண்ணில் லேசாக இருள் என்னும் அஞ் ஞானம் படரலாயிற்று . அவ்விருளை அகற்றி மெய் ஞானத்தை எடுத்து மக்களிடையே போதித்து , இத்தமிழ் மக்களிடையே மீண்டும் செம்பொருளாகிய உண்மைப் பொருள் விளங்க சுத்த சன்மார்க்க நன்நெறியை நம் தமிழ் மண்ணின் தந்தையாகிய இராமலிங்க சாமிகள் எடுத்துரைத்தார்கள் .

**ஒ**ருவருடைய உள்ளத்தில் உள்ள உணர்வுகளை நாம் உணர அவர் எழுதிய நூல்கள் , இயற்றிய பாடல்கள் இவைகளே துணையாக இருக்கின்றது . இதே போன்று இக்கலையை நம் இராமலிங்க சாமிகள் தான் முதன்முதலில் பெற்று அதன் விளக்கமாக சத்திய தருமச்சாலை , சித்தி வளாகத் திருமாளிகை போன்றவைகளை ஏற்படுத்தி இத்தமிழ் மக்களையும் மெய்வழியாகிய ஜீவகாருண்ய வழியில் நடக்கச் செய்து ஒரு வரலாற்றுக் காவியமாக வாழ்ந்து காட்டினார்கள் .

**அ**வ்வாறு வரலாற்றுக் காவியமாக வாழ்ந்த நம் இராமலிங்க சாமிகளின் நித்தியமெய் வாழ்வாகிய பேரின்ப சித்திப் பெருவாழ்வு என்ற செந்நெறியானது இன்று இத்தமிழ் மக்களால் எவ்வாறு பின்பற்றப்படுகின்றது என்பதைப் பார்க்கும் சமயம் எனது எண்ணத்தில் ஒரு வெளிச்சம் சுடர்விட்டது .

**அ**ச்சுடரில் எழுந்த எனது எண்ணக் கிடக்கைகளும் , நான் இக் கலையைப் பற்றித் தெரிந்துகொள்ள தமிழ் மண்ணில் பல பகுதிகளில் அலைந்து திரிந்து உண்மை தெரிந்த சன்மார்க்கப் பெரியோர்கள், நித்திய வாழ்க்கையை கைப்பற்றி மெய் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் , மற்றும் பல சன்மார்க்கச் சங்க சாதுக்கள் , பரதேசிகள் , போன்றவர்களை நேரில் சந்தித்து காலம் , இடம் , நாள் போன்றவைகளை சான்றுகளாக கூடிய வரையில் இன்றைய அளவில் வள்ளல் பெருமான் இராமலிங்க சாமிகள் எடுத்துச் சொல்லிய சாகாக் கலையாகிய மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவர்கள் , பெற முயற்சி செய்கிறவர்கள் பெற்றதாகச் சொல்லித் திரிபவர்கள் , அதை வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரையும் , பார்த்து பலகால் பழகியதின் காரணமாக இந்நூலை இத் தமிழ் உலகத்திற்கு சமர்ப்பிக்கின்றேன் .

*அடியேன்*

***ஞானபாரதி .***

# அ

----

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**அ**ருள் வெளியாம் ஆகாயம் என்று விளங்கி வரும் தில்லை திருத்தலத்திற்கு அருகே திருமருதூர் கிராமத்தில் கணக்கர் உத்தியோகம் பார்த்த சிவனேயச் செல்வர் இராமையா, சின்னம்மையார் தம்பதிகட்கு ஐந்தாவது பிள்ளையாக இத்தமிழ் மண்ணில் **திருஅருளின் விளக்கமாக** பிறந்தவர்கள் இராமலிங்க அடிகள் .

**ந**ம் அருளாளர்களாகிய சித்தர்பெருமக்கள் நமக்கு சுட்டிக் காட்டியபடி கிடைப்பதற்கு அரிதாகிய இந்த மானிட தேகப் பிறப்பானது பக்குவ உற்பத்தி அபக்குவ உற்பத்தி என்னும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இதில் பக்குவ உற்பத்தியில் உயர்ந்த பிரிவில் கருவானது உருவாகி பூமியில் அருள் துணையுடன் நடம் புரிந்தார்கள் இராமலிங்க அடிகள் . நம் தமிழ் மக்கள் நடைமுறை வாழ்க்கையில் நம் பிள்ளைகளைப் பற்றி பேசும் சமயம் நான் தவம் இருந்து பெற்ற பிள்ளை என்பதைச் சொல்ல கேள்விப்படுகிறோம். தமிழ் மக்கள் சொல்லும் செயலும் அருளாளர்கள் வழியில் வந்தவர்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது . அருளாளர்கள் எல்லாம் பல காலம் தவமிருந்து இவ்வுலக மக்கள் நல்வழியாம் இறவாப் பேறு பெற ஒருவர் தமிழ் மண்ணில் தோன்ற வேண்டும் என்ற நோக்கத்தின் படியே இராமலிங்க அடிகள் தோன்றினார்கள் .

**ந**ம் அடிகள் தோன்றிய சில காலத்தில் தந்தையார் இராமையா அவர்கள் மறைவு எய்தினார்கள் . பின்னர் தாயார் சின்னம்மையாருடனும் சகோதரர் சகோதரிகளுடனும் அடிகள் தம் தாயாரின் பிறப்பிடமாகிய சென்னைக்கு அருகே உள்ள சின்னக்காவனம் எனும் சிற்றூர் சென்று வாழ்ந்து வந்தார்கள். ஒரு வருடம் சென்ற பின்னர் இராமலிங்க அடிகளின் தமையனார் சபாபதி அவர்கள் , தாயுடனும் , தம்பி இராமலிங்கம் மற்றும் சகோதர சகோதரிகளுடனும் சென்னை பட்டணம் என்னும் நகரத்தில் குடியேறி ஆசிரியத் தொழில் மற்றும் புராணப் பிரசங்கம் செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள் . அது சமயம் சபாபதி , தம்பி இராமலிங்கத்திற்கு கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு தம் ஆசிரியராகிய காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி என்னும் சான்றோரிடம் கல்வி பயில அனுப்பினார் .

**இ**ராமலிங்கம் ஆசிரியராகிய சபாபதி என்னும் சான்றோர் வசம் உலகியல் வாழ்க்கைக் கல்வியாகிய வயிற்றுப் பிழைப்புக் கல்வியைப் புறக்கணித்து அருள் கல்வியாகிய **சாகாக் கல்வி**யில் நாட்டம் சென்று அதற்குரிய கல்வியைக் கற்கத் தொடங்கினார்கள் . இதை அறிந்த சான்றோராகிய மகாவித்வான் சபாபதி அவர்கள் இராமலிங்கத்தின் அருளாற்றல் நிறைந்த அருள் கல்வியைக் கண்டு வியந்து போற்றி , என்னால் போதிக்கக் கூடிய இலக்கண இலக்கியக் கல்வியானது உன்னுடைய **அருட்கல்விக்கு ஒருபோதும் ஈடாகாது** என்று வாழ்த்தி இராமலிங்கத்தை திருப்பி சென்னைக்கே அனுப்பிவிட்டார்கள்.

**அ**ன்று முதல் இராமலிங்கம் அவர்கள் இவ்வுலகையும் , இவ்வுலக உயிர்களையும் மானிடதேகம் பெற்ற மக்களையும் உற்றுநோக்கத் தொடங்கினார்கள் . அவர்கள் வந்த வேலை நடக்கத் தொடங்கிவிட்டது. அது சமயம் அவர்கள் வயது ஒன்பது .

**உ**லகம் தோன்றிய விதமும் , அதில் உயிர்கள் இயக்கமும் உயிர்களைப் பெற்ற உடல்கள் இயங்குகின்ற விளக்கங்களையும் கண்டறிந்தார்கள் இராமலிங்க அடிகள்.

**இ**வ்வுலகமாகிய பரவெளி முழுவதும் அருள் விளக்கமாகிய கடவுள் விளக்கம் இயற்கை நிறைவாகி நிறைந்து விளங்கினாலும் அது மானிட தேகம் பெற்ற உயிர்களிடத்தே சாட்சியாக விளக்கம் பெறுகின்றது என்பதை அருளால் அறிந்த இராமலிங்கம் இவ்வுயர்ந்த பிறப்பாகிய மானிட தேகத்தை பெற்ற மக்கள் அதன் பெருமையை மகத்துவத்தை அறியாது வீண்போகின்றார்களே என்று வாட்டமுற்றார்கள்.

**அ**கத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது நம் தமிழ்

மக்களின் நடைமுறைச் சொல் . அகம் என்ற ஆன்மாவின் அக்கினியாகிய வெளிச்சம் மானிட தேகத்தின் முகத்தில் ஜீவனாகி புறத்தில் நின்று ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது என்பதே இதன் உட்பொருளாகும்.

**இ**ந்த அக்கினிக் கலைகளான வெளிச்சமானது ஜீவனாகி தத்துவங்களின் கூட்டமைப்பால் அதற்கு அடிமையாகி தத்துவங்களோடு சேர்ந்து உலக மாயை என்று சொல்லக்கூடிய தோன்றி அழிந்து போகும் போக போக்கிய ஆசையில் சிக்கிச் சுழன்று ஒளியானது மங்கி குறைந்து முடிவில் ஜீவனாகிய வெளிச்சம் ஆனது தேகத்தை விட்டு நீங்கி தேகம் கீழே விழுந்து அழிந்துபோய் விடுகிறது என்பதை அருளால் உணர்ந்த இராமலிங்க அடிகள் நம் தமிழ் மண்ணின் அருளாளர்களாகிய சித்தர் பெருமக்களைப் பார்க்கிறார்கள்.அவர்கள் பெற்ற பேறுகளையும் அடைந்த சன்னதங்களையும் , மரணம் தவிர்த்த நிலையும் ,நம் தமிழ் மண்ணிலே நீண்ட நெடுங்கோடிக் காலம் வாழ்ந்து வருகின்ற நம் முன்னோர்களையும் அவர்கள் பெற்ற அருள் வாழ்க்கையையும் அனைவரும் பெறவேண்டும் என்ற ஆண்டவர் வேண்டுதலின்படி இவ்வுலகில் தோன்றினேன் என்று தோற்ற பேரிகை முழக்கம் செய்தார்கள்.

**இ**ங்கே நாம் ஒன்று சிந்திக்க வேண்டும் . அருளாளர்களாகிய சித்தர் பெருமக்கள் தங்களுக்கென்று வழி வழியாக சீடர்களை உருவாக்கி அவர்கள் வழியாக இந்த உலக மக்கள் நன்மை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் , வைத்தியம், வாதம் ,யோகம் , ஞானம் என்ற நால்வகை நெறிகளைப் போதித்தார்கள் . காலத்திற்கு ஏற்றவாறு அவர்கள் தங்களின் வல்லமைகளையும் அருட்செயல்களையும் மக்கள் பெறுகின்ற வண்ணம் இவ்வுலகில் சாட்சி சொரூபமாக அமர்ந்து நித்திய மெய்வாழ்வாகிய சாகா வரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் .

**ஆ**னால் நம் இராமலிங்க அடிகள் தனக்கென்று வழிவழியாக சீடர்களை உருவாக்கவில்லை என்று பலர் சொல்வதை நாம் கேட்கின்றோம் . பலர் அறியாமை என்னும் இருளில் இருகின்ற காரணத்தால் இவ்வாறு புலம்புவதை நாம் கேட்க முடிகின்றது.

**ந**ம் சித்தர் பெருமக்கள் அன்றைய கால சூழ்நிலைக்குத் தகுந்தவாறு சீடர்களை உருவாக்கினார்கள். ஆனால் நம் இராமலிங்க அடிகளோ மானிட தேகத்தைப் பெற்றுக்கொண்ட அனைத்து உயிர்களும் நித்திய மெய் வாழ்வு என்ற மரணம் தவிர்த்த நிலையைப் பெறவேண்டும் என்று தயவினால் , இரக்கத்தினால் , இந்த சாகா கலையை சாமானிய மக்களாகிய மாயையில் மூழ்கியிருக்கும் மக்களிடையே எப்படி கொண்டு செல்வது என்று தீர்மானித்து அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டு இருந்தார்கள். அது சமயம் அவர்கள் வயது பன்னிரண்டு.

**சா**தாரண உலகியல் வாழ்க்கை முறையில் தப்பும் தவறுமாக எது சரி எது தவறு என்று கருதாது அனைத்திற்கும் ஒரு நியாயம் கற்பித்து ஒழுக்க நெறி தவறி கருவி கரணங்களின் வழியே சென்று துக்கத்திலும் துயரத்திலும் வாழ்கின்ற சாமான்ய மக்கள் அருளாளர்களை என்ன பாடு படுத்தி இருக்கிறார்கள் என்பதை அறிந்த இராமலிங்க அடிகள் அருள் வல்லபத்தை பெற்றால் ஒழிய இந்த மக்களை ஒருபோதும் திருத்த முடியாது என்று நினைத்து அதற்குரிய வழியில் இறங்கினார்கள்.

**அ**ருள் வல்லபமாகிய தனித்தவப்பேறு என்ற சதா ஆத்ம விசாரணையில் இருந்த இராமலிங்க அடிகளின் தீவீரதர வைராக்கியத்தை அறிந்த , இயற்கை உண்மை பெரும் பதியாகிய அருட்பெருஞ்ஜோதி , அற்புதசொரூபத்தை , சதா கலந்து அருளமுதம் அருந்தி நித்திய மெய் வாழ்வு பெற்ற ஜீவன் முக்தர் ஒருவர் இராமலிங்க அடிகளை தன்னோடு இணைத்துக் கொண்டார்கள் . அன்றுமுதல் அடிகளின் தவ வாழ்க்கை தொடங்கியது.

**த**ன் குருநாதராகிய ஞான ஆசிரியரை தொடர்ந்து பின்பற்றிக் கொண்டு மழை, வெயில் , இரவு, பகல் பாராது தமிழ் மண்ணிலே நித்திய மெய் வாழ்வு பெற்று என்றும் அழியாது விளங்கும் அருளாளர்களாகிய சித்தர் பெருமக்கள் நிறைந்து இருக்கும் எல்லா இடங்களுக்கும் சென்று தவச்செயலை வளர்த்துக் கொண்டே ,அதே நேரம் இந்த மண்ணிலே உயிர்கள் படுகின்ற வருத்தமும் துன்பமும் கண்டு வாடிப்போனார்கள் அடிகள் . அதைக் கண்டு கலங்கிய இராமலிங்க அடிகளின்

குருவான ஞான ஆசிரியர் அடிகளை நோக்கி இவ்வுலகில் பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் கூறாக இருக்கும் சமயம் கலக்கத்தை தவிர்த்து உலகின் மானிட தேகத்தைப் பெற்ற சாமானிய மக்கள் மெய்நெறி பெற வேண்டும் என்று தான்விரும்புகின்றதானால் அந்த நித்திய மெய்வாழ்க்கையை கைப்பற்றி என்றும் இவ்வுலகம் உள்ளளவும் சாகா வரம் பெற்று மரணம் தவித்த பெருவாழ்க்கையை பெற வேண்டும் , அதை தான் முதலில் பெற்றுக் கொண்டால் ஒழிய மற்றவர்களை அத்தவ வாழ்க்கையில் மெய்நெறியில் ஈடுபடுத்த முடியாது என்று போதனை செய்து அன்று முதல் அதற்குரிய வழி துறைகளை இராமலிங்க அடிகளுக்கு சுட்டிக்காட்டி ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல **பன்னிரண்டு வருடம் கடுந்தவத்தில் ஈடுபடுத்தினார்கள்.**

**ப**ன்னிரண்டு வருட கடுந்தவத்தில் இருந்த சமயம் குருபிரான் ஆனவர் இராமலிங்க அடிகளுக்கு , உலகியல் வாழ்க்கையில் மக்கள் படுகின்ற துன்பம் ,துயரம் , பசி , பிணி ஆகியவற்றின் தன்மைகளையும் அவை ஏன் மக்களை வாட்டி வதைக்கின்றன என்ற காரண காரியத்தையும் விளக்கித் தான் பெற்ற மகனைப் போல் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்தார்கள் . தனக்காக தன் தந்தையாகிய குருபிரான் பட்ட பாடுகளையும் , செயல்களையும் கண்டு இராமலிங்க அடிகள் பட்ட துன்பம் எல்லையற்றது. அத்துடன் அடிகள் பனிரெண்டு ஆண்டுகள் செய்த கடுந்தவத்தில் ஏற்பட்ட துன்பங்கள் துயரங்கள் எண்ணில் அடங்காது. இதுவரை நம் அருளாளர்கள் பெற்ற அனைத்து வல்லபங்களையும் , சன்னதங்களையும் , பெற்று விளங்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு ,வாதம் , வைத்தியம் , யோகம் , ஞானம் , என்ற பலபடிகளை குருபிரான் அடிகளுக்கு முறையாய் போதனை செய்தார்கள் .

**உ**ண்ண உணவின்றி உடுத்த உடையின்றி இருக்க இடமின்றி இயற்கையோடு இயற்கையாக பன்னிரண்டு ஆண்டு காலம் இராமலிங்க அடிகளின் கடுந்தவம் முடிந்து இவ்வுலகை நோக்கி உற்றுப் பார்க்கின்ற சமயம் முதலில் தன்னுடைய குருபிரானையே பார்த்தார்கள்.

**அ**து சமயம் குருபிரானான ஞான ஆசிரியர் , இராமலிங்க அடிகளின் தீட்சன்யமான அக்னி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் கண்களின் ஒளியிலிருந்து விலகி மகனே என்னை நேருக்கு நேர் பார்க்காதே என்று கூறினார்கள் . அந்த அளவுக்கு இராமலிங்க அடிகளை கண் கொண்டு பார்க்க முடியவில்லை . உடம்பே அக்கினி மயமாக நெருப்பாக மாறி இருந்தது. அடிகளின் தேகம் மாற்றுக் குறையாத பொன் உருவமாக மாறிப்போனது . குருபிரான் **அடிகளை நோக்கி மகனே நீ எக்காலத்தும் அழியாது விளங்கும் திருமேனியை பெற்றுக் கொண்டு விட்டாய்** . உன்னுடைய இந்த தேகமானது யாராலும் தீண்டப்படாதது , பஞ்ச பூதங்களால் பரிசிக்க முடியாது , பசி,தாகம் போன்றவை எக்காலத்தும் இருக்காது . மண்ணால் தீண்டவும் , நெருப்பால் தகிக்கவும் முடியாது. மாற்றுக் குறையாத சுவர்ண தேகமாக மாறிபோனதால் ஒருக்காலும் கூற்றுவனுக்கு இடமில்லை . ஐந்தொழில் ஆற்றும் இயற்கை உண்மை பெரும் பதியாகிய எல்லாமுடைய அருட் பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளின் பிள்ளையாகி விட்டாய் என்று சொல்லி இவ்வுலக மாந்தர்களின் பக்குவா பக்குவங்களுக்கு ஏற்ப இக்கலையை போதனை செய்து எமனிடமிருந்து மக்களை மீட்டு நித்திய மெய் வாழ்வு வாழ்ச் செய் என்று இராமலிங்க அடிகளை இப்பூவுலகில் மீண்டும் உலவவிட்டார்கள் . அது சமயம் நம் அடிகளுக்கு வயது இருபத்துநான்கு .

**இ**ன்றைய மாந்தர்கள் , இராமலிங்க அடிகள் தன் குருவானவர் யார் என்று இவ்வுலகுக்கு சொல்லவில்லை என்றும் ஞானசம்பந்தரையே குருவாகக் கொண்டார் என்றும் , திருமந்திரத்தையும் திருவாசகத்தையும் வழி நூலாக கொண்டார் என்றும் , தேவர் குறளை முதன்மையாகக் கொண்டார் என்றும் பலவிதமாக எழுதியும் பேசியும் வருகின்றார்கள் . இராமலிங்க அடிகள் தன் குருவானவர் யார் எப்படிப்பட்டவர் என்ன நிலையில் உள்ளவர் என்பதை தனது திருவருட்பாவிலே குறியிட்டுக் காட்டியிருக்கின்றார்கள் . பனிரெண்டு ஆண்டு காலம் கடுந்தவத்தில் இருந்த சமயம் , தாய் போலும் தந்தை போலும் கண்ணின் மணி போன்றும் , காத்து வளர்த்த மெய் ஞானத் தங்கமாம் தன் குருபிரானை சாதரண மானிடர்க்கு

இருக்கின்ற ஒரு பெயர் சொல்லி அழைக்க அடிகள் விரும்பவில்லை .

**ஏ**க வெளியில் இயற்கை இன்பமாகி நிறைந்து பரிபூரண நிலையை பெற்றுக் கொண்ட இராமலிங்க அடிகள் மீண்டும் இவ்வுலக மாந்தர்களை நோக்குகின்றார்கள் . மாந்தர்கள் படுகின்ற துயரமும் துன்பங்களையும் கண்டு வருந்துகின்றார்கள். பசியினாலும் நோயினாலும் மனிதர்கள் சாவது கண்டு இதில் இருந்து இம்மாந்தர்களை எவ்வாறு மீட்பது என்று சிந்தனை செய்தார்கள் . இங்கே நமது அன்பர்கள் ஒன்று கேட்பார்கள் . இவ்வளவு வல்லமையைப் பெற்ற இராமலிங்க அடிகள் இவ்வுலக மாந்தர்களைக் கண்டு ஏன் மனம் வருந்த வேண்டும் என்பதே ஆகும் . காரணம் இத்தேகமானது நல்வினை, தீவினை என்னும் புண்ணிய பாவங்களின் கூறாக வந்த தேகம் என்று நம் அருளாளர்களும் , சித்தர் பெருமக்களும் அறுதியிட்டுக் கூறுகின்றார்கள் . அவரவர்கள் செய்த வினைகளின் படியே தேகம் கிடைக்கிறது . அத் தேகத்திலும் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி சொரூபம் கருணையினால் அந்த ஜீவனுக்கு வெகு அல்ப சுதந்திரம் கொடுக்கப்பட்டிருப்பதாலும் அந்தந்த உயிர்களே முயன்று முயன்று நல்லொழுக்கம் , தயவு , ஜீவகாருண்யம் போன்றவைகளை கடைப்பிடித்தால் சாகா வரம் பெற்று கடவுள் நிலை அடையலாம் என்பதை நம் அடிகள் அறிந்து அதைச் செயல்படுத்தும் விதத்தை ஆராய்ந்து மக்களின் பக்குவத்துக்கு ஏற்றவாறு இதை எடுத்துப் போதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு மக்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன மன நிலையில் வாழ்கிறார்கள் என்பதற்கு ஏற்றவாறு எளிமையான நடைமுறையில் அருட்பாக்களை உலகிற்கு அள்ளிக் கொடுக்க திருவுளம் கொண்டார்கள்.

**அ**து நேரம் தமிழ் மண்ணிலே மக்கள் வாழ்கின்ற வாழ்க்கை முறையும் அவர்கள் வாழ்க்கையில் சமயங்கள் எந்த அளவு பின்னிப் பிணைந்து கொண்டு இருக்கின்றது என்பதைக் கண்டு மனம் நொந்தார்கள் . **சமயவாதிகளின் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் இம்மக்கள் பக்தி என்ற போர்வைக்குள் நுழைந்துகொண்டு வீண்போய்கொண்டும்** ஆசாரம் உள்ளவர்களுக்கு அடிமைப்பட்டும் சற்றும் உலக அறிவு கூட இல்லாமல் தத்தளித்துக் கொண்டு இருந்தார்கள் .

**இ**த் தமிழ் மண்ணில் ஒரு காலத்தில் சமயங்களும் மதங்களும் சாதிகளும் இருந்ததாக வரலாறு கிடையாது . நம் தமிழ் மக்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து இயற்கையையே வழிபட்டார்கள் . இயற்கையின் நியதிக்குக் கீழ்படிந்து இறை சொரூபத்தை இயற்கையாகவே வழிபட்டார்கள் . கலை இலக்கியமும் , சமுதாய சீர்திருத்தம் பண்பாடு நாகரீகம் உடைய ஒழுக்கம் உள்ள மனிதர்களாகவே அவர்கள் வாழ்க்கைமுறை இருந்தது .

**கா**லப்போக்கில் மற்ற மதங்களையும் சமயங்களையும் சார்ந்த மக்கள் வடக்கில் இருந்து நம் மண்ணில் நுழைந்து ஆச்சாரம் , மூடபக்தி , நாட்டியம் , நாடகம் , கூத்து என்ற அநாகரிக செயல்களுடன் வாழ்ந்து வந்தார்கள் . அதை கண்ட நம் மக்கள் அவர்களின் செயல்களுக்கு சிறிது சிறிதாக இடம் கொடுத்து முடிவில் அவர்களுடைய சமயங்களுக்கும் செயல்களுக்கும் அடிமைப்பட்டு தங்கள் வாழ்க்கை முறையை மறந்து நம் தமிழ் மண்ணின் நடைமுறை வாழ்க்கையிலிருந்து கீழ் நிலைக்கு மாறிப்போனார்கள் . **அன்று அடிமைப் பட்ட நம் தமிழ் மக்கள் படும் துன்பத்தை நம் இராமலிங்க அடிகள் கண்டு வேதனை அடைந்தார்கள் .**

**இ**த்தமிழ் மண்ணில் ஆறு சமயங்கள் தோற்றம் பெற்றன. ஆறு சமயங்களுக்கும் ஆறு சமயத் தலைவர்கள் தோற்றுவிக்கப்பட்டனர் . இதிலிருந்து பல கிளைச் சமயங்கள் தோன்றியது . சமயத் தலைவர்கள் உருவங்களை தெய்வமாக சித்தரித்து நம் மக்களிடையே பக்தி வழிபாடு என்ற போர்வையில் புகுத்தி விட்டார்கள் . சமயவாதிகள் செய்த மிகப் பெரிய சூழ்ச்சிக்கு நம் மக்கள் உடன் பட்டுப்போனார்கள் .

**இ**ந்த ஆறு சமயங்களுக்கும் அடிக்கடி உட்பூசல்களும் , சண்டை சச்சரவுகளும் ஏன் போர்கள் கூட நடந்ததாக புராணங்களும் கதைகளும் நமக்குப் புலப்படுத்துகின்றது . ஆக **இச்சமயங்களை உருவாக்கியவர்கள் நம் தமிழ் மக்கள்**

**இல்லை .** உருவாக்கியவர்கள் ஒரு புறம் இருக்க அவர்களால் உருவாக்கிய கற்பிக்கப்பட்ட தெய்வங்களை வழிபாடு செய்தார்கள் நம் தமிழ் மக்கள் . ஆக நம் மக்கள் நம் மண்ணிலேயே அடிமைப்படுத்தப் பட்டார்கள் .

**இ**ந்த ஆறு சமயங்களில் இரு சமயங்கள் மட்டும் இரு துருவமாக இருந்தன . ஒரு சமயம் கடவுளை மனிதனாக சித்தரித்து வளர்க்கப்பட்டது . ஒரு சமயம் மனிதனை கடவுளாக சித்தரித்து வளர்க்கப்பட்டது . சமயங்கள் மனிதர்களை மனிதர்களாகவே வாழ தோற்றுவிக்கப் பட்டது . சமயங்கள் எதுவானாலும் மனிதர்கள் அன்புள்ளவர்களாக ஒழுக்கம் உள்ளவர்களாக இரக்கம் உள்ளவர்களாக வாழ வேண்டுமென்று புறத்தில் போதனை செய்துவிட்டு மறைமுகமாக தாங்கள் வயிறு வளர்க்க **கடவுள் பெயரால் மனிதர்களை மிருகமாக மாற்றிவிட்டனர் சமயவாதிகள்** .

**இ**வ்வாறு சமயங்களிலும் சமய நெறிகளிலும் ஊறிப்போன நம் மக்களை இச்சமயங்களை உருவாக்கியவர்கள் தங்கள் சுயநலத்திற்காக சாதிகளை புகுத்தி அடிமைப் படுத்தினார்கள் . தங்களை உயர் இனத்தவர் என்றும் மற்றவர்களை தாழ்ந்த குலத்தவர் என்றும் பிரித்து சூழ்ச்சி செய்து தங்கள் இனத்தையும் தங்களால் உருவாக்கிய சமயத்தையும் சாதிகளையும் வளர்த்துக் கொண்டார்கள் . உயர்ந்த குலத்தவர் என்று சொல்லுகின்றவர்களை சாமி என்றும் ஆண்டே என்றும் ஐயா , ஐயர் என்றும் அழைத்து தங்களை தாங்களே அடிமைப் படுத்திக் கொள்கின்ற அளவுக்கு சமயவாதிகள் சூழ்ச்சிகளை செய்து வெற்றியும் பெற்றார்கள் .

**உ**லகத்திற்கே நாகரீகத்தையும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுத்த நம் தமிழ் மக்கள் இவ்வாறு அவல நிலைக்கு தள்ளப்பட்டு வேத ஆகம விதிகளுக்கும் , சமய நெறிகளுக்கும் அடிமைப்பட்டு சொர்க்கம் நரகம் என்றவைகளை நம்பி வீண்போய்க் கொண்டிருப்பதை கண்ணுற்ற நம் அருளாளர்களாகிய சித்தர் பெருமக்கள் நம் தமிழ் மக்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றார்களோ அதே நெறிமுறையில் சென்றுதான் நம் மக்களை மாற்ற வேண்டும் என்று திருவுளம் கொண்டு ஆங்காங்கு மனித தேகமே ஆலயம் என்ற உண்மையை எடுத்துச் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தில் ஆங்காங்கு மக்களின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு உருவங்களை உண்டாக்கி தாங்களே சமாதிகளிலிருந்து மக்களை நன்நெறிப் படுத்த முயன்றார்கள் . அவ்வாறு உருவாக்கப் பட்டதே இன்று தமிழ் மண்ணில் இருக்கின்ற திருத்தலங்கள் ஆகும் . இத் திருத்தலங்களிலும் ஆகம வேதியர்களும் ஆசாரமுள்ளவர்களும் சமயவாதிகளும் கைப்பற்றிக் கெண்டு அங்கும் அவர்கள் மொழியை மந்திரங்களாகச் சொல்லி அதையே நம் தமிழ் மக்களையும் திரும்பச் சொல்லச் சொல்லி மந்திரத்திற்கும் , திருநீற்றுக்கும் உத்தராட்சத்திற்கும் உடன் படுத்திவிட்டார்கள் .

**சி**த்தர் பெருமக்கள் நம் மக்கள் நன்மை அடையும் பொருட்டு தாங்கள் பெற்ற அகமுக சான்றுகளையும் , அனுபவங்களையும் , மனிதர்கள் பெற வேண்டிய பேறுகளாகிய **இறவாப் பெருநெறியையும் , திருநெறியின் திருவருள் வல்லப சித்தி முறைகளையும் ஏடுகள் மூலமாக எழுதி விட்டு** சமாதியில் அமர்ந்து விட்டார்கள் .

**ஆ**க நம் சித்தர்கள் நமக்கு எடுத்துரைத்த அருள் வல்லப அகமுக அனுபவங்களே இன்று வரை நம் மக்களில் பலர் பின்பற்றி வருகின்ற ஒன்றாகும் . ஆக அவர்கள் அனைவருமே இத்தமிழ் மண்ணிலே தோன்றியவர்களே . சரியை , கிரியை , யோகம் , ஞானம் என்றும் தாசமார்க்கம் , சற்புத்தரமார்க்கம் , சகமார்க்கம் , சன்மார்க்கம் என்றும் சமய வாதிகளால் பெயரிடப்பட்ட வைகளுக்கு நம் சித்தர் பெருமக்கள் முறையே வைத்தியம் , வாதம் , யோகம் , ஞானம் என்று முறைப் படுத்தினார்கள் . இதை சரியாகப் புரிந்து கொள்ளாத பலர் மருந்து என்றும் , தங்கம் செய்யும் முறை என்றும் , மூச்சுப் பயிற்சி என்றும் , பகுத்தறிவு என்றும் அவரவர்கள் தங்கள் மனம் போன போக்கில் சொல்லித் திரிகிறார்கள் .

**ச**ரியாகப் பார்க்கின்ற போது இந்நான்கும் , நம் சித்தர்கள் சரியான முறையில் தெளிவு படுத்தி இருக்கின்றார்கள் . உடம்பும். உடலில் உள்ள இந்திரியங்களும் , கரணங்களும் ஆக தொன்னூற்றாறு தத்துவங்களின் கூட்டமைப்பும் அவை தொழில் படுகின்ற விதமுமே **வைத்தியம்** என்று

உரைத்தார்கள். இத் தத்துவங்கள் சரியான முறையில் அதன் அமைப்புகளுக்கு ஏற்றவாறு கூடுதல் குறைவு இல்லாத அணுக்களின் சீரான போக்கில் இந்த உடல் நிலைத்திருக்க **வாதம் என்ற கற்பத்தை** உரைத்தார்கள் . அடுத்து ஜீவனாகிய உயிர் சூரியன் , சந்திரன். அக்கினி கலைகளாக உள் உடம்பில் விளங்கும் வகையை , இயங்கும் விதத்தை **யோகம்** என்று சொன்னார்கள்.

**அ**டுத்த படியாக ஜீவனாகிய இந்த உயிரானது தத்துவங்களின் கூட்டமைப்பில் இருந்து விடுபட்டு தனித்து நின்று ஆன்மாவோடு இரண்டறக் கலந்து வேறுபடாமல் சுயஞ்ஜோதியாக எந்நாளும் எக்காலமும் நிறைந்து விளங்கிக் கொண்டிருப்பதை ஞானம் என்று சொன்னார்கள் .

**ஆ**க இந்த அனுபவங்களைத் தெரியாத குருமார்களும்,பிரசங்கிகளும் , மூலிகைகள் தாதுப்பொருள்கள் என்று **செத்துப் போன தாவர தாதுப் பொருள்களை மருந்து என்றும் கற்பம் என்றும்** மூக்கின் வழியாக விடும் **சுவாசத்தை யோகம் என்றும்** அதை **நிறுத்தி வயிறு வீங்கித் துன்பப் படுவதை வாசியோகம் என்றும் ஞானம் என்றும் ,** நெற்றியில் , மூச்சுவரும் மூக்கின் மேல்பாகத்தில் உள்ள இடத்தில் உள்ள மத்தியை புருவமத்தி என்றும் அங்கு **தோலால் அடைக்கப்பட்ட மூன்றாவது கண்ணாகிய ஞானக் கண்ணை திறந்து அதோடு ஐக்கியமாவதே கடவுள் நிலை என்றும்** பிறரை ஏமாற்றித் தன்னையும் **ஏமாற்றிக் கொண்டு வயிற்றுப் பிழைப்பு** நடத்திக் கொண்டிருக்கிறார்கள் .

**இ**தை கண்ணுற்ற இராமலிங்க அடிகள் உடலை எடுத்துக் கொண்ட உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு வருந்தி மக்கள் வீண் போகின்றார்களே என்று சமயவாதிகளும் மதவாதிகளும் உண்மையை உணராமலும் ,உண்மை தெரியாமலும் ஒன்று கிடக்க ஒன்றை உளறி மக்களிடம் அறியாமையாகிய மூடபக்தியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்களே என்று நினைத்து இம் மனித குலத்தை நல் வழிப் படுத்தவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு தாம் வந்த வேலையைத் தொடங்கினார்கள் .

**இ**ன்றைய நாட்களில் பன்னிரு திருமுறைகளை கோவில்களிலும் மடங்களிலும் ஓதிக் கொண்டிருந்த சைவ நெறிக்கு மாறுபடாமல் உண்மைச் சைவநெறி , ஒளி நெறி விளங்க பல பாடல்களை பாடி அருளினார்கள் அடிகள் . அவைகள் முறையே தத்துவத் தலைவர்கள் , தலைவிகள் பற்றியே தெளிவு படுத்தப் பட்டிருக்கிறது . அப்பாடல்கள் அன்றைய நாட்களில் இராமலிங்க அடிகள் உடன் இருந்த அன்பர்கள் அவைகளைக் கோர்வையாக நேர்படுத்தினார்கள் . அந்தப் பாடல்கள் அன்று சுவடிகளில் எழுதப் பட்டிருந்தது . அந்த பாடல்கள் அனைத்தும் முறையே சைவத் திருமுறைகளை ஓரளவு சார்ந்தே இருந்தது . அதற்கு மாறாகவோ எதிராகவோ இராமலிங்க அடிகள் கையாளவில்லை .

**அ**ன்றைய சமயங்கள் இரண்டும் மிக வேறுபாடாக நிலவியிருந்தது . அந்த முக்கியமான இரண்டு சமயங்களிலும் தமிழ் மக்கள் மயங்கிக் கிடந்தார்கள் . ஒரு சமயம் தமிழ் மண்ணிலும் ,மற்றொரு சமயம் தமிழ் மண்ணின் வட பகுதியிலும் தோன்றியிருந்தது . இதை தமிழ் மக்களிடத்தே சமயம் பார்த்து புகுத்தியவர்கள் திறமை வாய்ந்த ஆசார சீலர்களாகிய இம்மண்ணில் சமயத்தையும் மதத்தையும் தமது சுயநலத்திற்காக பரப்பிய வடக்கே இருந்து வந்த ஆடு மாடு மேய்த்தவர்கள் என்பது மறுக்க முடியாத வரலாறு ஆகும் . அதை அப்படியே ஏற்றுக் கொண்டவர்கள் சோம்பேறிகளாகிய தமிழ் மண்ணின் கைலாய பரம்பரை என்று சொல்லக்கூடியவர்கள் . **வடக்கே இருந்து வந்தவர்கள் இதிகாசத்தை எழுதி அதைத் தமிழ் மக்கள் மயங்கிடும் படி நம்ப வைத்தார்கள்.** அவர்களுக்குத் துணைபோன இங்கே இருந்த சைவர்கள் புராணம் என்ற ஒன்றை எழுதி , 63 (அறுபத்து மூன்று) பெயர்களைக் குறிப்பிட்டு மக்களிடையே உலவ விட்டார்கள் . இவ்வாறு சமயங்களிலும் மதங்களிலும் சமயவாதிகளும் மதவாதிகளும் மலிந்து மயங்கித் திரிந்த நேரத்திலே எரியும் வீட்டில் கிடைத்தது லாபம் என்ற பழமொழி போல் மேற்கத்திய நாடான யூதேயா என்ற தேசத்தில் தோன்றிய கிறிஸ்தவ மதமும், அதிலிருந்து ஆபிரகாம் என்று அழைக்கப்பட்ட இப்ராஹிம் மகன் இஸ்மாயில் சார்பாக தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாம் சமயமும் மார்க்கங்கள் என்ற பெயரில் இந்தியாவின் தமிழ் மண்ணில் நுழைந்தது .

**வேதியர்களாலும் , ஆதீனங்களாலும் , சமயவாதிகளாலும் அடிமைப் படுத்தப்பட்டு உழைத்து உழைத்து ஏழையாகிப்போன தமிழ் மக்களை இந்த இரண்டு மார்க்க வாதிகள் தங்கள் மதங்களில் மிக எளிமையாக சேர்த்துக் கொண்டார்கள்** . ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு தொக்கு என்ற பழ மொழிக்கு இணங்க அவர்கள் தமிழ் மண்ணிலே தங்கள் கொள்கைகளையும் அதிகாரத்தையும் செலுத்தி இஸ்லாமியர்களாகவும் , கிறிஸ்தவர்களாகவும் நம் தமிழ் மக்களை அடிமைப் படுத்தினார்கள் . அன்று தமிழ் மக்கள் இயற்கை இறையான்மையையும் , கொள்கைகளையும் பறிகொடுத்து தங்கள் சமூகம் , கலாச்சாரம் , நாகரீகம் எல்லாவற்றையும் மறந்து மேலை நாட்டு நாகரீகத்திற்கு விரைந்து சென்றார்கள் . உலகில் ஒழுக்கம் உயிரைவிட உயர்ந்தது என்று முரசு கொட்டிய தமிழர் திருவள்ளுவர் நெறியிலிருந்து விலகிப் போய் தவறிப் போனார்கள் தமிழ் மக்கள்.

**இ**வை அனைத்தையும் கண்ட இராமலிங்க அடிகள் பதறிப்போனார்கள் . ஒரு புறம் சாதிச் சண்டை , மற்றொருபுறம் சமயபூசல் , மதங்களால் விரோதம் போன்றவைகளை மக்களிடையே புகுத்தி ஆச்சாரம் உள்ளவர்களும் , சமயவாதிகளும் தமிழ் மக்கள் உடைமைகளையும் சொத்து சுகங்களையும் ஏன் பெண்டு பிள்ளைகளையும் கூட அடிமைப் படுத்தி விட்டார்கள் **வடக்கே இருந்து** வந்த ஆரியர்கள் என்று சொல்லப்பட்ட மக்கள் **நாடோடிகளாக** இந்தியாவுக்குள் நுழைந்து ஆடு மாடுகளை குதிரை போன்ற வாயில்லா ஜீவராசிகளை கொன்று அக்கினிக்கு **பழியிடுகிறோம் என்று** சொல்லிப் படைத்து அதையே தின்று வயிற்றுப் பசியை போக்கிக் கொள்கிறேன் என்று மாமிசத்தை தின்று பழகிப் போனவர்கள் **அதையே நம் தமிழ் மக்களிடம் புகுத்திவிட்டார்கள்.**

**வ**யல் வெளி தோப்பு , சோலை , போன்றவற்றில் உழைத்து விளையாடித்திரிந்து தாவரங்களாலேயே உணவாக உண்டு வளர்ந்த நம் மண்ணின் மக்கள் மாமிசம் தின்னும் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனார்கள் .

**த**மிழ் மக்கள் ஒரு போதும் காடுகளிலும் , குகைகளிலும் வாழவில்லை . ஆனால் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த ஆசாரம் உள்ள ஆரியர்கள் வயல்வெளிப் பகுதிகளிலே வாழ்ந்த நம் மக்களை அடிமைப் படுத்தி உருவத் தெய்வங்களை மலைகளிலும் , குகைகளிலும் உண்டாக்கி வழிபடச் செய்து அவர்கள் வயிறு வளர்த்தார்கள் . இயற்கையையே உண்மையான அறிவுப் பொருளாகப் போற்றிப் பணிந்து வழிபாடு செய்த நம் மக்கள் கலைகளிலும் கற்பனைகளிலும் சிக்கி உருவத் தெய்வங்களின் அழகிலும் , அச்சத்திலும் தங்கள் மனதைப் பறிகொடுத்து விட்டார்கள் . நம் மக்களை வாக்கால் மனதால் பேரம் பேச வைத்து மக்களுக்கும் உருவாக்கப் பட்ட தெய்வங்களுக்கும் நடுவில் சமயவாதிகள் இடைத் தரகர்களாக ஆகிவிட்டார்கள் . உழைத்து உழைத்து ஆசாரமுள்ள அந்தணர்களுக்கும் , சமயவாதிகளுக்கும் தானம் தர்மம் கொடுக்கவே நம் மக்களுக்கு நேரம் போதவில்லை . அந்த அளவுக்கு நம் **மக்கள் வீண்போய்க் கொண்டிருந்தார்கள்** . உழைப்பவன் ஒருவன் உண்பவன் ஒருவன் .

**இ**தென்ன கொடுமை ! நடுங்கிப் போனார்கள் இராமலிங்க அடிகள் , இவ்வாறு பலதரப்பட்ட சூழ்நிலைகளில் அடிமைப் பட்டுக்கிடக்கும் இத்தமிழ் **மக்களை எப்படி நெறிப்படுத்துவது** என்ற எண்ணத்துடன் இராமலிங்க அடிகள் தமது நெடிய பயணத்தை சென்னையை விட்டு தெற்கே நோக்கித் தொடர திருவுள்ளம் கொண்டார்கள் .

5.10.1823 ம் நாள் திருஅவதாரம் செய்த நம் இராமலிங்க அடிகள் தமது பனிரெண்டு வயதில் (1835) முறையான ஞான வாழ்க்கையில் ஈடுபட்டு 1847 ம் வருடம் தம் தவ வாழ்க்கையில் எல்லாம் வல்ல இயற்கைச் சித்தி வல்லபம் பெற்று உலக மக்கள் நன்மை அடையும் பொருட்டு சென்னையில் புறத்தே தோன்ற ஆரம்பித்தார்கள் அது காலம் சென்னையில் சிறு வயதில் அடிகளின் உடன் இருந்த அன்பர்களோடு திருவொற்றியூர் மற்றும் திருத்தணி போன்ற பகுதிகளிலும் நடைபோட்ட வண்ணம் அன்றைய கால சூழ்நிலைக்கு தக்க வண்ணம் **மக்களின் மனநிலைக்குத் தக்கபடி தமது எண்ணங்களின் தொகுப்பை பாடல்களாக வெளியிட்ட**

**வண்ணம் இருந்தார்கள்** . மிக உயர்ந்த இந்த சாகாக் கல்வியை தான் பெற்ற பெறும் பேற்றை சாமானியர்கள் அடையவேண்டும் என்பதே இராமலிங்க அடிகள் எண்ணமாக இருந்தது .

**அ**து சமயம் அடிகள் சென்னையில் வாழ்ந்த போது தனது இருபத்தாறாவது வயதில் 1849 ம் வருடம் தொழுவூர் வேலாயுதம் என்பவர் அடிகளைச் சந்தித்து சில பாடல்களைக் கொடுத்து இவை சங்க காலப் பாடல்கள் என்னிடம் கிடைத்தது என்று சொல்ல அடிகள் அதைப் பார்த்துவிட்டு இவை சங்க காலப் பாடல்கள் அல்ல சாதரண இலக்கணம் இலக்கியம் இல்லாத பாமரனின் பாடல்கள் என்று திருப்பிக் கொடுத்துவிட்டார்கள் . காரணம் அதில் ஏகப்பட்ட பிழைகள் இருந்தன . சங்க காலப்பாடல்களாக இருந்தால் பிழைகள் இருக்காது என்று சொன்னவுடன் தொழுவூர் வேலாயுதம் அடிகளிடம் மன்னிக்க வேண்டும் , என்று கூறி தான் தங்களை சோதிப்பதற்காக நானே சில பாடல்களை எழுதி சங்க காலப் பாடல்கள் என்று கொடுத்தேன் என்று ஒப்புக்கொண்டு அன்று முதல் அடிகளின் தாராள மனத்தையும் பொருத்தருளும் பண்பையும் கண்டு தன்னை தங்களின் மாணவராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என வேண்டினார்கள் . தொழுவூர் வேலாயுதம் அவர்களின் கல்விச் செருக்கின் செயலைக் கண்டு மாறுபடாமல் அடிகள் அவரைப் பொருத்தருளி தன்னோடு இணைத்துக் கொண்டார்கள் .

**உ**லகக் கல்வி கற்றவர்களின் நடைமுறை வாழ்க்கையைக் கண்டு அடிகள் மனம் நொந்தார்கள் . தொழுவூர் வேலாயுதம் வடமொழியான சமஸ்கிருதத்தில் ஆராய்ச்சியும் , சைவத்தில் மிகுந்த ஈடுபாடும் உள்ளவர்கள் . சாத்திரங்களிலும் , புராணங்களிலும் பெரும் புலமை மிக்கவர் . இவர் புலமையின் சிறப்பைக் கண்டு அடிகள் இவருக்கு உபயகலாநிதி பெரும் புலவர் என்ற பெயரை இட்டார்கள் .

இராமலிங்க அடிகளின் சென்னை வாழ்க்கையில் அன்பர்களாகிய தொழுவூர் வேலாயுதம் , சோமு , லெட்சுமணன், திருமீழிசை கந்தசாமி தம் மூத்த சகோதரர் சபாபதியின் மருமகப் பிள்ளை பொன்னேரி சுந்தரம் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் . இவர்கள் அடிகளிடம் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள் . மேற்கண்ட அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் வீட்டிலும் அவர்களின் தொடர்புடைய அன்பர்கள் வீட்டிலும் வள்ளல் பெருமான் போக்கு வரவு புரிந்தார்கள் . மற்ற மற்றவர்கள் போல் தனக்கென்று ஒரு இடம் , தனித்தன்மை இவைகளை அடிகள் மேற்கொண்டதில்லை .

**செ**ன்னை நரசிங்கபுரம் வீராசாமி , பொன்னேரி சுந்தரம் , சீனிவாச வரதாச்சாரி , காயாறு ஞானசுந்தரம் , ஆறுமுகம் போன்றவர்கள் அடிகளின் மாணவரானார்கள் . இவர்கள் அனைவரும் அடிகளிடம் கற்ற கல்வியானது சைவத்தையும் வைணவத்தையும் சார்ந்தே இருந்தது இவர்களின் தரத்திற்கு தகுந்தவாறு இவர்கள் விருப்பத்தையே அடிகள் நிறைவேற்றினார்கள் . இவர்கள் மனம் ஏனோ சாகாக் கல்வியாகிய உண்மைக் கல்வியில் நாட்டம் செல்லவில்லை . விநாயக புராணம் என்னும் மிகப் பெரிய சமயக் கல்வியை அடிகளிடம் ஆறுமுகம் ஐயா பாடங்கேட்டுக் கொண்டார்கள் .

தமிழ் மண்ணில் உள்ள பண்டிதர்களும் , வித்துவான்களும் , தம்பிரான்களும் , அடிகளிடம் தாங்கள் தங்கள் சமயங்கள் ஆசாரங்கள் மதச் சம்பிராதயங்களில் உள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவடைந்தார்கள் . இவர்களில் ஒருவர் கூட நித்திய மெய் வாழ்க்கையைப் பற்றி கேட்கவோ , பேசவோ , சிந்திக்கவோ இல்லையே என்று அடிகள் வருந்தினார்கள் .

**அ**டிகளிடம் கந்தசாமி என்பவர் தன்னுடைய வறுமையை போக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதி சில பொருள் உள்ளவர்களுக்கு சீட்டுக் கொடுங்கள் என்று வேண்டிக் கேட்க அடிகள் நாம் கேட்டால் எல்லாமுடைய ஆண்டவரைக் கேட்போம் அல்லாது உலக மாந்தர்களிடம் கேட்கமாட்டோம் , நீயும் ஆண்டவரையே கேட்டுப் பெற்றுக் கொள் என்று உரைத்தார்கள் . அடிகள் உழைக்காமல் உயிர் வாழும் சோம்பேறிகளை ஒருபோதும் ஆதரிக்கவில்லை . அக்காலம் சென்னை வாழ் அன்பர்களிடத்தின் இல்லங்களிலும் ,சில இடங்களிலும் அடிகள் பிரசங்கம் செய்துவந்தார்கள் . அது சமயம்

அதற்கு ஏற்பாடு செய்தவர்கள் பொருள் கொடுக்கும் சமயம் அப்பொருளை வாங்கிக்கொண்டு சில தூரம் சென்றதும் பட்டினிகிடக்கும் யாருக்காவது கொடுத்துவிடுவார்கள் அல்லது வீதியில் எரிந்து விடுவார்கள் . இதை அறிந்த பிரசங்கம் ஏற்பாடு செய்தவர்கள் அடிகளிடம் பொருளை கொடுக்காமல் அவர் அண்ணார் சபாபதி அவர்களிடம் உணவுக்கு வேண்டிய காய்கள் , அரிசி போன்றவைகளை கொடுத்தார்கள் .

**அ**டிகள் தனக்கு கொடுத்த பொருளை , தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ ஒருபோதும் கொடுக்கவில்லை . இன்றோ பொருள் மேல் இச்சை இல்லாதவர் என்றும் , சித்தர்களின் வாரிசு என்றும் , துறவி என்றும் சொல்லிக்கொள்ளும் பலர் , குடில் , அறக்கட்டளை , ஆசிரமம் , மன்றம் , சங்கம் என்ற பல பெயரில் பல நிறுவனங்களை அமைத்து தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் வாழ வைத்துக்கொண்டு , கடவுள் பெயரால‌ும் , சாதுக்கள் சித்தர்கள் பெயராலும் வயிறு வளர்த்துக்கொண்டு வருவதைப் பார்க்கின்றோம் . இவர்கள் எப்போதும் தமிழ் மண்ணில் பிறந்தவர்களாகவே இருக்க முடியாது .

**அ**டிகள் அன்பர்களால் கொடுக்கப்படும் பொருள்களை ஒருபோதும் ஏற்றுக் கொண்டதே இல்லை . பொருள் மீது அவர்களுக்கு ஆசையும் இல்லை . பொருள் உள்ளவர்களைக் கண்டு ஒதுங்கியே வாழ்ந்தார்கள் . இவ்வாறு அழிகின்ற பொருளை நித்தியமான பொருள் என்று எண்ணிக்கொண்டு அதற்கென்று காலமெல்லாம் பாடுபட்டுத் தேடி முடிவில் விட்டுவிட்டுப் போகின்ற இந்த மண்ணின் மக்களைக் கண்டு கவலையுற்றார்கள் . சதா சலசலப்பும் ,சந்தடியும் ,பொருளிலே நாட்டமும் உடைய மக்கள் வாழ்கின்ற சென்னையை விட்டு சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் அடிகளைத் தூண்டிக்கொண்டே இருந்தது .

**அ**க்காலத்தில் சென்னையில் தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த வைணவர்களே அதிகம் வாழ்ந்தார்கள் . நம் சித்தர் பெருமக்களில் ஒருவராகிய போகர் என்பார் அக்காலத்தில் சீனா , வியட்நாம் , லாவோஸ் , கம்போடியா , தாய்லாந்து , மலாக்கா போன்ற நாடுகளில் அங்குள்ள மக்களுக்கு அருள் புரிந்து விட்டு தமிழ் மண்ணுக்கு திரும்பும் சமயம் இலங்கைக்கு வந்து அங்கு கதிர்காமம் என்ற இடத்தில் தவத்தில் ஈடுபட்டிருந்தார்கள் . அச்சமயம் அவர்கள் எண்ணத்தில் தோன்றிய சடாட்சரம் என்று ஒரு மெய்பொருளை அக்கினியில் பிரயோகம் செய்து அங்குள்ள மக்கள் பயன் அடையும் படி அவ்விடத்தில் நிலைநிறுத்திவிட்டு தமிழ் மண்ணில் **பழநி என்ற குன்றில் ஒன்பது விதமான தாதுப்பொருட்களை ஒன்று சேர்த்து ஒரு உருவமாகச் செய்து அதற்கு நம் சித்தர் பெருமக்களின் முதல் சித்தராகப் போற்றப்பட்ட அகத்தியரின் குருவாகிய சுப்ரமணியரின் திருப்பெயரை இட்டார்கள்** . அதே சமயம் தனது சீடராகிய கொங்கணவரிடம் இதே போன்று ஒரு உருவத்தை தமிழ் மண்ணின் வடக்கு எல்லையில் ஒரு உருவத்தை குன்றின் மேல் உருவாக்கி அதற்கு சுப்ரமணியர் என்று பெயர்வைத்து அம்மலைக்கு சந்திரகிரி என்று பெயர் சூட்டச் சொல்லி மக்கள் நல்வழிப்பட ஏற்பாடு செய்தார்கள் . அவ்வாறு உருவாக்கப்பட்ட அகத்தியரின் குருவாகிய சுப்ரமணியரை ஓர் உருவமாக நிர்மானித்து மக்களின் அறியாமையைப் போக்க கொங்கணவரே சமாதியில் அமர்ந்து இருந்த குன்றை ஏழுமலை என்றும் , திருவேங்கடம் என்றும் , திருவேங்கடம் உடையான் என்றும் , ஏழுமலையான் என்றும் , **திருப்பதி வெங்கிடாஜலபதி என்றும் மாற்றியவர்கள் தெலுங்கு தேசத்தில் இருந்து வந்த வைணவ ஆச்சாரமுடையவர்களே ஆகும்** . அன்றே தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் .

**இ**ன்றும் அந்த சமயத்தைச் சார்ந்தவர்களே தமிழ் மண்ணில் தமிழ் மக்களை ,சித்தர் பெருமக்களின் பெயரைச் சொல்லியும் ,சாதுக்கள் சந்நியாசி பெயரைச் சொல்லியும் , ஏன் நம் இராமலிங்க அடிகள் பெயரைச் சொல்லியும் கூட ,உபதேசம் தீட்சை , மந்திரம் , வழிபாடு போன்றவற்றைச் செய்து பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் . நினைத்த மாத்திரத்தில் ஐந் தொழில்களையும் செய்யும் ஆற்றல் படைத்த நம் சாதுக்கள் , சித்தர்கள் பெயரால் இவர்கள் செய்யும் சூழ்ச்சிக்கு அப்பாவி தமிழ் மக்கள் அடிமையாகித் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள் . காரணம் இவர்களுக்கு பொருள்

மேல் உள்ள ஆசையும் பற்றுமே காரணம் . இவ்வளவும் நிறைந்த சென்னையில் வாழ்ந்த நம் அடிகளின் மனம் எவ்வாறு துடித்திருக்கும் .

இப்படிப்பட்ட காலச் சூழ்நிலையில் அடிகளின் வாழ்க்கையில் குடும்பம் வாழ்க்கைத்துணை என்ற உலகத்தவர்களின் தூண்டுதல்கள் ஆரம்பமாயின . தமையனார் , தமக்கையார் , தாயார் போன்றவர்களின் வேண்டுகோளை எப்படி புறக்கணிப்பது ? அடிகளின் தமக்கையாராகிய உண்ணாமுலையம்மாளின் அருமை மகள் தனக்கோட்டி அம்மாளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்தை எப்படி மறுப்பது என்பன போன்ற எண்ணத்தில் , உலகத்தவர் வாதனை நம்மையும் பிடித்துக் கொள்ள விரும்புகிறதே என்று தமது குருபிரானின் இசைவின் படி தாம் நடந்து கொள்வதாக தமது குடும்பத்தார்க்கு வாக்குத் தந்தார்கள்.

ஒரு காலத்தில் நம் தமிழ் மக்கள் வாழ்க்கை முறையில் அன்பும் , வீரமும் , விவேகமும் நிறைந்திருந்தது . தமிழ் மக்கள் யாகத்தையும் , யோகத்தையும் , அஸ்திரங்களையும் ஒரு போதும் பார்த்ததில்லை , பயன்படுத்தியதும் இல்லை . இயற்கையாகிய வெட்ட வெளியையே வழிபட்டு வந்தார்கள் . வேலும் ஈட்டியும் அவர்கள் ஆயுதங்களாகவே இருந்தன . நம் திருமண முறை அன்பும் வீரமும் நிறைந்திருந்தது . மணமகன் வீரமுள்ளவராகவும் அதே சமயம் விவேகம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் . தன் தகப்பனுடைய சகோதரியின் மகள், தன் தாயின் சகோதரன் மகள் இவர்களையே திருமணம் முடிப்பது என்பது வழக்கமாக இருந்தது . வடக்கே இருந்து வந்த ஆடு மாடு மேய்த்து மாமிசம் உண்ணும் பழக்கம் உடைய ஆச்சாரமுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் வேதியர்களாகிய தாய் வழி சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நம்மிடையே புகுத்திவிட்ட திருமண முறையே சகோதரி மகளை திருமணம் செய்கின்ற முறையாகும் . நம் மக்கள் இதையும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் . இன்னும் இந்த அடாத செயல் தமிழ் மண்ணில் நடந்து கொண்டிருக்கிறது . சகோதரரின் மகள் நம் மகள் அல்லவா ? சகோதரியின் மகள் நம் மருமகள் அல்லவா ? எப்படி தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொண்டார்கள் . கதை , கற்பனைக்காவியம் , புராணம் மூலம் நம் தமிழ் மக்களை நம்ப வைத்துவிட்டார்கள் ஆசாரமுள்ள வேதியர்களும் , சைவர்களும் .

இவ்வாறு கால சூழ்நிலையால் ஏற்படுத்தப் பட்ட சம்பிரதாயங்களை அடிகள் புறக்கணிக்கவும் முடியவில்லை , ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை . அதே சமயம் தன் சகோதரி உண்ணாமலை அம்மாளின் மகள் தனக்கோட்டி அம்மாளின் எண்ணம் , நினைவு , செயல் , சிந்தனை எல்லாம் தன்னை தீண்டுவதற்கு தனது தாயின் சகோதரராகிய என் மாமாவுக்குத் தான் உரிமையுண்டு , அவரைத் தவிர மற்றவரை நான் மனதாலும் தீண்டேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு தன்னுடைய நினைவாகவே இருந்து வருவதும் அடிகளுக்கு தெரியவந்ததால் தன் குரு பிரானின் வேண்டுகோளுக்கும் குடும்பத்தார்களின் எண்ணங்களுக்கும் செவி சாய்த்து திருமணத்திற்கு உடன் பட்டு ஒரு நாளில் திருமணம் நடைபெற்றது . 1850 ஆம் ஆண்டு தனது இருபத்தேழாவது வயதில் இல்லறம் என்ற நல்லறத் தொடக்கமாகிய திருமணத்தை ஏற்றுக் கொண்டார்கள் அடிகள் . தனக்கோட்டி அம்மாளின் எண்ணம் நிறைவேறியது .

ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவு ஒன்றாக இருந்தாலும் பெண்ணிற்கு பேதை குணம் உண்டு . அந்த பேதை குணம் ஒரு ஆணின் துணை ஏற்படும் போதுதான் நீங்கும் என்பது நம் சித்தர் பெருமக்களால் சுட்டிக்காட்டப் பட்ட செயல் . அன்று முதல் நாள் . ஒரு அறையில் அடிகளும் அவர்களின் துணைவியாராகிய தனக்கோட்டி அம்மாளும் உலக வழக்கின் இல்லறமாகிய தொடக்க நாள் அன்று அடிகள் கரத்தில் திருவாசகம் . அம்மையார் கண்களில் ஆனந்தக் கண்ணீர் . நேரம் சென்றுகொண்டே இருந்தது .

திருவாசகம் என்னும் நூலின் அரிய அனுபவ ஞானத்தை அடிகள் சொல்லிக்கொண்டே இருந்தார்கள் . முடிவாக திருவாசகத்தின் முடிந்த முடிவாகிய உயிர் அடையும் நிலை , உயிரின் இருப்பிடம் , உயிர் நடம் புரியும் விதம் ஆகிய உண்மை விளக்கமாகிய திருவாசகத்தின் முடிந்த முடிபான ஞானத்தாழிசை என்னும் அரிய பொக்கிசத்தை தனது

துணைவியாராகிய தனக்கோட்டி அம்மாளுக்கு எடுத்துரைத்து, தான் கற்ற கல்வியும் தனது நிலையும் நீயும் பெற வேண்டும் என்று அம்மையாரை அன்று முதல் திருவருள் தவ வாழ்க்கையில் ஈடுபடச் செய்தார்கள் . உலக வழக்கு ஒருவாறு அடிகளை விட்டு அகன்றது .

**அ**டிகள் தன் தமையனார் சபாபதியின் மருமகனும் புராணப் பிரசங்கம் செய்யும் திருபொன்னேரி சுந்தரம் என்பார் தனது வறுமையை தீர்க்கவேண்டும் என்று அடிகளை வேண்ட தில்லை அம்பலவாணனிடம் முறையிட்டு வேண்டியதைப் பெற்றுக்கொள்ளச் சொன்னார்கள் .மற்றொரு சமயம் தன் சிறிய தமையனார் பரசுராமனின் மகனாகிய வடிவேலை பாடம் சொல்லும் சமயம் பொன்னேரி சுந்தரம் அடித்தார் என்று கேள்விப்பட்டு உலகக் கல்வி சொல்லிக் கொடுப்பதற்காக அடிப்பது கூடாது என்மீது ஆணை என்று கடிதம் மூலம் ஒரு பாடல் எழுதிக் கொடுத்தார்கள் . உலகக் கல்வி கற்றவர்கள் கல்வியின் செருக்கால் மாணவர்களைத் துன்புறுத்துவதும் தன் அகங்காரத்தால் வறுமையால் வாடுவதையும் கண்டு அடிகள் வருந்தினார்கள் .அடிகள் தன் 28 ம் வயதில், 1851 ஆம் வருடம் ஐப்பசி மாதம் சீர்காழி கண்ணுடைய வள்ளல் என்னும் ஞான தேசிகரால் இயற்றப்பட்ட உண்மைத் துறவின் இலக்கணமாகக் கருதப் பட்டு நம் முன்னோர்களால் போற்றப்பட்டு வந்த ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்கள் .இக் காலத்தில் தான் தெய்வமணி மாலையும் கந்தர் சரணப் பத்தும் வெளியிடப்பட்டது . இதைக் கண்ணுற்ற அடிகளின் இளவயது உலகக் கல்வி ஆசிரியராகிய மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி என்பார் தன்னுடைய எண்ணத்தில் தோன்றிய ,உலகில் பண்டிதரும் பாமரரும் புரிந்து படித்துப் பயன்பட்டு ஒருவரையொருவர் அன்போடும் தயவோடும் இரக்கத்தோடும் ஆன்ம நேய சகோதரதத்துவ உணர்வோடும் வாழும் வகையில் ஒரு உரை நடை நூலை இவ்வுலகிற்கு எழுதி அருளும்படி வேண்டினார்கள் . அடிகள் பதிப்பாசிரியராக ஒழிவில் ஒடுக்கத்தைப் பதிப்பித்தது போல் எல்லோரும் எளிமையாக புரிந்து கொள்ளும்படி வசன நடையில் **மனுமுறை கண்ட வாசகம் என்னும் மனுநீதிச் சோழன் வரலாற்றை உரைநடை நூலாக ஒரே வரியில்** இடையில் பகுதி விகுதி இல்லாமல் தடை இல்லாமல் எழுதி உலகிற்கு உரைநடை ஆசிரியராகவும் திகழ்ந்தார்கள் . 1854 ஆம் வருடம் ஜூன் மாதம் மனுமுறை கண்ட வாசகம் சென்னை சாஸ்திர விளக்க சங்கத்தாரால் வெளியிடப்பட்டது . இதைக் கண்ட சமயவாதிகள் மனதில் பொறாமைத் தீ எழுந்தது .காரணம் அந்நூலில் மனுநீதிச் சோழ மன்னன் தன் மகன் வீதிவிடங்கன் தேரில் ஏறி ஆடம்பரமாக தியாகேசப் பெருமானை வழிபடச் செல்லும் சமயம் பசுமாட்டின் கன்றுக்குட்டியானது ஓடிச்சென்று தேரின் சக்கரத்தில் விழுந்து இறந்து போக , பசுமாடானது மன்னன் அரண்மனையின் வாயிலில் கட்டியிருக்கும் நீதி கேட்கும் ஆராய்ச்சி மணியை தன் கொம்பினாலசைத்து ஒலி எழுப்ப , மந்திரிகள் மூலம் நடந்தவற்றை அறிந்த மன்னன் கலங்கி இது போன்ற ஒரு சம்பவம் நடக்க நான் முன் பிறவியில் என்ன பாவம் செய்தேனோ என்று நாற்பத்து மூன்று பாவச் செயல்களைச் செய்து விட்டேனோ என்று கலங்கித் தவிப்பது போல் எழுதி இருந்தார்கள் .

**அ**தில் எழுதியிருந்த அத்தனை குற்றச் செயல்களும் அன்றைய நாளில் நம் தமிழ் மண்ணில் வாழ்ந்துவந்த சமயவாதிகளும் மதவாதிகளும் தமது வாழ்க்கை நடைமுறையாகக் கொண்டிருந்தார்கள் . ஆக இப்படிப் பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அடிகளின் உரைநடை நூலைக் கண்டு எங்கே நம் பிழைப்புக்கு இடையூறு வந்துவிடுமோ என்று பயந்து மறைமுகமாக பல சூழ்ச்சிகளைச் செய்ய முன் வந்தார்கள். உண்மை தெரிந்த பெரியோர்கள் என்றும் இம் மண்ணுக்கு நாங்களே சொந்தக்காரர்கள் என்றும் , இம் மண்ணின் மைந்தர்களுக்கு நாங்களே வழிகாட்டி என்றும் சொல்லிக் கொள்கின்றவர்களின் நிலை கண்டு அடிகள் அறியாமையால் இவ்வாறு நடக்கிறார்களே என்று எண்ணம் கொண்டு இவர்களை எப்படி நல்வழிப் படுத்துவது என்று சிந்தனை செய்தார்கள் .

**இ**தே காலம் சென்னைக்கு பட்டினப் பிரவேசம் என்ற பெயரில் சனாதன தர்மம் என்னும் பிராமண நெறியை புகட்டிவரும் சங்கர மடத்தைச் சார்ந்த சங்கராச்சாரியார் என்ற பிராமணர் அடிகளைச் சந்தித்து வேதங்களில் உள்ள ஒரு பகுதிக்கு விளக்கம் கேட்க எண்ணி அடிகளை நோக்கி ஆரிய

மொழியில் வல்லவரானால் விளக்கம் சொல்லுங்கள் என்று கேட்க , அந்த பகுதியை அடிகள் வாங்கிப் பார்த்துவிட்டு அன்பர் வேலாயுதம் கையில் கொடுத்து விளக்கம் செய்வித்து அருளினார்கள் . **அடிகளுக்கு சமஸ்கிருதம் என்ற ஆரிய மொழியில் உள்ள புலமையையும் அறிவாற்றலையும் கண்டு வியந்து போனார் சங்கராசாரியார்** . அடிகளின் அருளாற்றல் சென்னைவாழ் பிராமணர்களையும் வியப்படையச் செய்தது .

**இ**து சமயம் அடிகளின் அன்னையார் இவ்வுலக வாழ்வை நீத்து இறை நிலை அடைந்தார்கள் . தன் மூத்த சகோதரர் பரசுராமன் தேகம் மெலிவுற்று பிணியில் வருந்துவது கண்டு அவர் விருப்பப்படி தில்லை நடராஜப் பெருமானை தரிசனம் செய்து வைக்க எண்ணி சென்னையை விட்டுப் புறப்பட்டார்கள்.

**ப**ல நண்பர்கள் , அன்பர்கள் உடன் வர அடிகள் கால்நடைப் பயணமாகவே புதுவை என்று சொல்லக்கூடிய பாண்டிச்சேரி என்னும் ஊரை அடைந்தார்கள் . அடிகள் வந்த செய்தியை அறிந்த புதுவை அன்பர்களும் , பிரமுகர்களும் , தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களை கேட்டுத் தெளிவு பெற்றார்கள் . அவரவர் தகுதிக்கு தக்கவாறு அவர்கள் கொண்டுள்ள சந்தேகங்களை அடிகள் தீர்த்து அருளினார்கள் .

**சி**ல நாள் சென்று அங்கு இருந்து புறப்பட்டு வழியில் பல அன்பர்களோடும் சகோதரர் பரசுராமனோடும் அம்பலவாணர் ஆனந்தத் தாண்டவம் பயிலும் சிதம்பரத்தை அடைந்து சகோதரரின் விருப்பத்தை நிறைவேற்றி சிற்சபா நாதரைச் தரிசனம் செய்து வைத்தார்கள் . பின் சிதம்பரம் வடக்குப்புரம் வீதியில் ஒரு அன்பர் வீட்டில் குடிக்கூலி கொடுத்து தங்கி இருந்தார்கள் . இக் காலத்தில்தான் அடிகள் நான்காம் திருமுறையை இயற்றி அருளினார்கள் . அது சமயம் கிழக்குப் புற வீதியில் கோடக நல்லூர் சுந்தர சாமிகள் என்பவர் தங்கியிருக்க அவரைச் சென்று பார்க்க விருப்பம் ஏற்பட்டு அடிகள் அன்பர் ஒருவரை அனுப்பி பார்க்க தகுந்த சமயம் யாது என்று பார்த்து வரச் சொன்னார்கள் . இதை அறிந்த சாமிகள் நாமே வந்து அடிகளை காண்கின்றோம் என்று உடன் வந்த அன்பர்களோடு புறப்பட்டு வடக்குப் புற வீதிக்கு வந்து அடிகளைக் கண்டு மூன்று நாட்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் பலவகையான விஷயங்களையும் ஞானாதி விளக்கங்களையும் பேசிக் கொண்டு இருந்தார்கள் .

**அ**டிகளிடம் உரையாடிய மூன்று நாட்களிலும் சுந்தர சாமிகள் அளவுகடந்த பக்தியும் அன்பும் உடையவராய் தனது அன்பர்களுடன் விடைபெற்றுக் கொண்டார்கள் . சிறிது தூரம் சென்ற பிறகு சுந்தர சாமிகளிடம் அன்பர்கள் , அடிகளுக்கு எதிரில் அமர்ந்து தாங்கள் உரையாடாமல் பக்கத்திலிருந்து பேசியதன் காரணம் என்ன என்று கேட்ட சமயம் , **எதிர் அமர்ந்து பேசுவோர் ஆற்றலை இழுத்துக் கொள்ளும் சக்தி உடையவர்கள் அடிகள் என்று பதில் உரைத்தார்கள் .**

**சு**ந்தர சாமிகள் விடைபெற்றுச் சென்றதும் இராமலிங்க அடிகள் கண்களில் கண்ணீர் ததும்பியது . உடன் இருந்த அன்பர்கள் பதறிப் போய் அடிகளிடம் தாங்கள் வருந்த யாது காரணம் எனக்கேட்க ,நம்முடன் அளவலாவிய சுந்தர சாமிகள் தேகம் இன்னும் ஆறுமாதத்தில் கீழேவிழும் , மறைந்து விடுவார்கள் என்று சொல்ல உடன் இருந்த அன்பர்களும் வருந்த , அடிகள் எல்லாம் திருவருட் செயல் என்று கூறி சுந்தரசாமிகளை ஓர் இரவு நடுநிசியில் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள் . அதற்கு பின்பு சுந்தரசாமிகள் பல ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்து முடிவில் இறையருளைப் பெற்றார்கள் . அடிகள் புரிந்த அற்புதங்களில் இதுவே நிலையானது . அடிகளின் பார்வையின் பயனால் சுந்தரசாமிகள் நீண்ட ஆயுள் பெற்று அவரின் தகுதிக்கும் தரத்திற்கும் ஏற்றவாறு புண்ணியப் பேறு பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும் .

**சி**தம்பரத்தில் அடிகள் தங்கியிருக்கும் சமயம் அடிக்கடி பக்கத்தில் உள்ள அன்பர்களின் வேண்டிகோளுக்கு இணங்க அருகில் உள்ள சீர்காழி என்னும் திருத்தலத்தை அடைந்து அங்கு அருள் பரவசமாக அடிகள் மிகப்பெரிய பிரசங்கத்தை அருளினார்கள் . சீர்காழி கண்ணுடைய வள்ளல் பிறந்த இடத்தை அடிகள் மிகவும் உயர்வாக நேசித்துப்போற்றினார்கள்

**பி**ன்னர் அடிகள் அங்கிருந்து புறப்பட்டு வைத்தீசுவரன் கோவில் என்னும் திருத்தலத்தை அடைந்தார்கள் . அதுசமயம் அத் திருத்தலத்தின் தருமகர்த்தா , வித்துவான் உலகநாதத் தம்பிரான் என்பார் தம்முடைய பெயரை இணைத்து அங்கு எழுந்தருளி இருக்கும் வைத்தீசுவரன் பெயரில் பதிகம் ஒன்று திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்றார்கள் . பனிரண்டு பாடல்கள் அடிகள் பாடினார்கள் . அப் பாடல்களிலிருந்து அன்றைய தர்மகர்த்தாக்கள் ,தம்பிரான்கள் ஆதீனங்கள் எப்படிப் பட்ட வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பது தெரிய வரும் .

**த**மிழ் மண்ணில் தோற்றுவிக்கப் பட்ட மிகப் பெரிய சைவசமயத்தின் புறக்கைலாயப் பரம்பரையில் வந்தவர்கள் , பிற்காலத் தம்பிரான்கள் அனைவரும் வேதாந்திகள் போலப் பேசியும் ,பழகியும் தமிழ் மக்களை நம்ப வைத்தார்கள் . நம்பிக் கெட்டவர்கள் தமிழர்கள் .பாவம் , புண்ணியம் , நன்மை , தீமை எங்களுக்கு இல்லை என்று சொல்லிக்கொண்ட இந்த மடத்துப் பண்டார சன்னதிகளாகிய தம்பிரான்கள் , உண்பது , உடுப்பது , உறவுகொள்கின்றது , உறங்குவது போன்ற வேலையே வாழ்க்கை என்று கங்கணம் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள் . சிவபெருமானின் மறுதோற்றமாகவே தமிழ் மக்கள் இவர்களை எண்ணிக் கொண்டு தங்களின் உழைப்பையும் , உடைமைகளையும் இந்த மடத்து தம்பிரான்களுக்கு இலவசமாக எழுதி வைத்தார்கள் . பிறன் மனை நயவாதவனே பேராண்மை மிக்கவன் என்று சொன்ன திருவள்ளுவர் தோன்றிய இத்தமிழ் மண்ணில் இந்த தம்பிரான்கள் , மடாதிபதிகளின் செயல்களைக் கண்டு எள்ளி நகையாட வேண்டியதாயிற்று . ஆக உலகநாதத் தம்பிரான் பெயரை இணைத்து வைத்தியநாதப் பதிகம் பன்னிரெண்டு பாடல்கள் பாடி தீய நெறியில் வாழ்ந்த தம்பிரானை திருத்தி நன்னெறியில் உய்வித்து அருளினார்கள் அடிகள் . தீது செய்வாரையும் நல்லவராக்கி இவ்வுலகில் போற்றும் படி வாழ வைத்தார்கள் அடிகள் .

**பி**ன்பு அடிகள் அங்கிருந்து முதன்முறையாக தமிழ் வளர்த்த மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள் .மாணிக்க வாசக சாமிகள் தோன்றிய திருவாதவூர் , வாழ்ந்த திருப்பெருந்துறை ஆகிய பகுதிகளைப் பார்த்துவிட்டு மீண்டும் தம் சகோதரர் பரசுராமன் அவர்கள் தங்கியிருந்த கருங்குழி என்னும் கிராமத்தை அடைந்தார்கள் . அதே நேரம் தனது சகோதரர் பரசுராமன் இறைநிலை அடைந்தார்கள் . அது சமயம் சென்னையில் உள்ள திருமயிலை என்னும் திருத்தலத்தில் தன் சகோதரர் சபாபதி , ஆண்டவர் திருவடி அடைந்ததை யாரும் உரைக்காதபோதே திருவருளால் உணர்ந்து அடிகள் அமைதியாக இருந்தார்கள் . இயற்கையின் நியதிதான் என்ன ! இதில் அகப்படாதவர் எவர் ? பிறப்பு , இறப்பு இடையில் ஒரு வாழ்க்கை ! சாமானியர்களுக்கு இவ்வுலகம் ஒரு மாயா சொரூபம். அடிகளுக்கு இந்த உலக மாயை அவர்களின் ஒன்பது வயதிலேயே அகன்று விட்டது . இறப்பையும் , பிறப்பையும் இவ்வுலக மாந்தர்கள் தவிர்த்துக் கொள்வது எப்படி என சிந்தனை செய்தவண்ணம் அடிகள் கருங்குழியை விட்டு கிளம்புஞ் சமயம் அவ்வூர் வேங்கடம் என்பவர் தமது வீட்டிலேயே தங்குதல் வேண்டும் என்று வேண்டிக்கொள்ள அடிகள் அவ்வூரிலேயே தங்கினார்கள் . அடிகள் தங்கியிருந்த இல்லமே தற்கால தண்ணீரால் விளக்கெரித்த இல்லம் என போற்றப் பட்டு வருகின்றது . நீரில் நெருப்பும் , நெருப்பில் ஒளியுமாக ஆண்டவர் விளங்கிக் கொண்டிருக்கின்றார் என்று அன்றே அடிகள் இவ்வுலக மக்களுக்கு நீரால் விளக்கெரித்துக் காட்டினார்கள் என்பது மிகப் பெரிய அருளுபதேசம் என்றால் மிகையாகாது .

**ஒ**ரு சமயம் திருச்சிற்றம்பல ஞானியார் என்பார் அடிகளின் அருமை பெருமைகளையும் அருளாற்றலையும் கண்டு காலில் விழுந்து தனக்கு அருளுபதேசம் தரவேண்டும் என கேட்க , அடிகள் துறவு நிலை ஏற்றுக்கொண்ட தாங்களுக்கு துறவி அல்லாத நான் உபதேசம் செய்தல் கூடாது என மறுமொழி சொல்லியும் , அவர் மீண்டும் கேட்க ஒரு வெண்பாவை வரைந்து கொடுத்து பெற்றுக்கொள்ளும் என்று சொல்லி அனுப்பினார்கள். துறவிகளுக்கு அடிகள் சான்றாகவும், சிற்சொரூபமாகவும் , ஒளிமயமாகவும் , அருள் ததும்பும் நோக்கத்தோடும் உபதேசம் செய்து வைத்தார்கள் . திருச்சிற்றம்பல ஞானியாராகிய அந்த அன்பர் மதுரை திரு ஞான சம்பந்த சாமிகள் ஆதீன மடத்துக்கு சென்று விட்டார்கள்.

**க**ருங்குழி புருசோத்தமன் என்பார் வீட்டில் வருத்தம்

ஏற்பட்டு மதுரை திருஞானசம்பந்த சாமிகள் ஆதீன மடத்துக்கு சென்றுவிட்டதை அறிந்த அடிகள் தமது அன்பராகிய திருச் சிற்றம்பலஞானியார் ,மதுரை ஆதீனத்தில் இருப்பதாக அறிந்து அவருக்குக் கடிதம் ஒன்றை சாதாரண நடையில் எழுதி புருசோத்தமனை திருப்பி கருங்குழிக்கு அனுப்பி விடவும் என்று கோரினார்கள் .

**அ**க்கடிதம் , திருச்சிற்றம்பல ஞானியார் , கணக்கில் அவதானி , அதாவது ஆதீன சொத்து விபரங்களை எழுதி வரவு செலவு பார்க்கும் சேதுபதிச் சீமை தேவிபட்டிணம் முத்துசாமியுடன் உரையாடிக் கொண்டிருக்கும் சமயம் போய்ச் சேர்ந்தது . அக்கடிதத்தைப் படித்துப் பார்த்த முத்துசாமி , பெரிய மேதாவி எழுதிய கடிதம் ஒரு இலக்கண இலக்கியம் கூட இல்லாமல் வந்திருக்கின்றதே என ஞானியைக் கேட்க , ஞானியார் அடிகள் பேசிக்கொண்டிருந்த காலங்களில் சிந்திய இலக்கணமே இவ்வுலகில் பரவி இருக்கின்றது என்ற மறுமொழி சொல்ல , அதற்கு முத்துசாமி அப்படியாயின் இலக்கண இலக்கியத்தோடு கூடிய ஒரு கடிதத்தை வரவழையுங்கள் எனச் சொல்ல , அதன்படியே ஞானியாரும் அடிகளுக்கு இலக்கண இலக்கியத்தோடு கூடிய கடிதம் ஒன்று அனுப்புமாறு பதில் கடிதம் எழுதினார்கள் . அக்கடிதத்தைக் கண்ட அடிகள் அதை பிச் என்று சொல்லி கீழே வைத்துவிட்டார்கள் . உடனிருந்த அன்பர்கள் ஆற்றாமையால் அடிகளிடம் வினவ , அடிகள் ஒரு தாளில் இரண்டு வரிகள் எழுதி அதனைப் பூர்த்தி செய்து தொழுவூர் வேலாயுதம் மூலம் அனுப்பி வைத்தார்கள் . இக்கடிதம் மதுரை திருஞான சம்பந்த சாமிகள் ஆதீனத்தில் உள்ள சிற்றம்பல ஞானியாரிடத்தில் கிடைத்து அதை அவர் கணக்கில் அவதானி தேவிபட்டிணம் முத்துசாமி கையில் கொடுத்தார் . அந்த கடிதத்தை அவர் பல முறை படித்துப் பார்த்தும் பொருள் விளங்காத காரணத்தால் , வேண்டுமென்று ஒரு வித்துவான் பூட்டுப் போட்டால் , அந்த வித்துவான் தான் அதை திறக்க வேண்டும் என்று கூற , அது கேட்டு ஞானியார் புன்னகையுடன், அப்படியாயின் தாங்களும் ஒரு பூட்டுப் போடுங்கள் பார்ப்போம் என்றார் . அவதானியாரும் நான்கு வரிகளில் ஒரு கவியினை எழுதி அடிகளுக்கு அனுப்பினார்கள். அதைக் கண்ட இராமலிங்க அடிகள் அக்கவிக்கு உரிய உரையினையும்,முத்துசாமி அவர்கள் உணராத மற்றோர் தத்துவ உரையினையும் வரைந்து அனுப்பினார்கள் .

**இ**ராமலிங்க அடிகள் எழுதிய உரையைக் கண்ட தேவிபட்டிணம் கணக்கப்பிள்ளை முத்துசாமி அதைப் பார்த்து ஒன்றும் புரியாதவராய் உடன் புறப்பட்டு கருங்குழிக்கு வந்து , அவ்வீதியின் கோடியிலேயே கரங்களை சிரமேல் குவித்துக் கீழே விழுந்து விழுந்து வணங்கிக் கொண்டே அடிகளின் காலில் வந்து விழுந்து யான் செய்த பிழையை பொருத்தருள வேண்டும், என அழுது அரற்றி வித்துவான் என நினைத்தேன் ஆனால் இன்று பரிபூரண ஞானி என்று நேரில் கண்டு உணர்ந்து கொண்டேன் என்றார் . அடிகளும் அவரை வேற்றுமை பாராட்டாது தம் அன்பராகவே ஏற்றுக் கொண்டார்கள் .

**5.10.1854** அன்று முத்துச்சாமிக்கு அடிகள் எழுதிய கடிதத்தின் பொருள் இன்றுவரை இவ்வுலக வித்துவான் களுக்கு விளங்கவில்லை . அடிகள் வித்துவான்களாக இருந்தவர்களையும் கல்விச் செருக்கில் உயர்ந்தவர்களையும் கூட தன் அருள் ஆற்றலினால் இலக்கணம் இலக்கியம் எல்லாம் அருள் முன்னிலையில் பயனற்றுவிடும் என்று உணர்த்தினார்கள் . அது காலம் கருங்குழியிலும் அதன் பக்கம் உள்ள பகுதிகளில் இருந்தும் நோயால் துன்பம் அடைந்த மக்கள் பலர் அடிகளை கேள்விப்பட்டு தங்கள் துன்பங்களை நீக்கிக் கொண்டார்கள் . அக்காலத்தில் குஷ்டம் என்ற அங்கக் குறைவுநோய் மிகவும் கொடுமையானது . கைவிரல் , கால்விரல், முகம் போன்ற பகுதிகள் எல்லாம் கிருமியால் தாக்கப்பட்டு கோரமான நிலையில் அந்த நோய் தொற்றிக்கொண்டவர்கள் மக்களால் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்ட நோய் பீடிக்கப்பட்ட கருங்குழி பாலு என்பவர் அடிகளிடம் விண்ணப்பித்து தம் நோயை குணப்படுத்த வேண்டி நிற்க அடிகள் வெண்மையான திருநீரு போன்ற ஒரு பொருளைக் கொடுத்து வெகு விரைவில் குணப்படுத்தினார்கள் . இதிலிருந்து கற்பம் என்று நம் சித்தர் பெருமக்களால் சொல்லப்பட்ட குரு மருந்தாகிய நோய் நீக்கும் மருந்தை உடல் பிணிக்கு அடிகள் கையாண்டார்கள் என்பது புலனாகின்றது . மற்றும் கருங்குழியில் வாழ்ந்த மிகப்பெரிய

செல்வந்தர் என்று சொல்லக்கூடிய முத்து நாராயணன் என்பார் , தனது கண்கள் திடீரென்று பார்வைகுறைவு ஏற்பட்டு வெகு விரைவில் பார்வை முழுவதும் இல்லாமல் போனது கண்டு , அடிகள் அவருடைய கண்களில் சில துளிகள் நீர் போன்ற ஒரு பொருளை விட்டு சரியாக மூன்று நாட்களில் முழுபார்வையும் தெரியவந்தது . பார்வை தெரிந்த முத்து நாராயணன் தன்னுடைய செல்வங்களை எல்லாம் அடிகளுக்கு எழுதி வைத்து விடுகிறேன் என்று சொல்லி வேண்டிக் கேட்க , அடிகள் கருங்குழியில் உள்ள சீனிவாசப் பெருமாள் கோவிலுக்கு தரும சொத்தாக எழுதி விடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள் . அடிகள் செல்வந்தர்களிடம் சென்று பொருள் விரும்பு கின்றவராகவோ , பொருளுக்காக அவர்களுக்கு ஏற்றவாறு சொல்லிலும் செயலிலும் புறம்பாக நடக்கவோ ஒருபோதும் எண்ணம் கொண்டதில்லை . அப்பகுதியில் வாழும் மக்கள் தீராத கொடிய பிணிகளை எல்லாம் வெகு விரைவில் தீர்த்து குணம் அடைந்து கொண்டார்கள் .

**அ**துசமயம் அடிகளுக்கு மிகப்பெரிய உண்மை புரிந்தது இவ்வுலக மக்கள் ஏன் பிணியிலும் நோயிலும் துன்பப் படுகின்றார்கள் என்றால் அதற்கு அவர்களின் உணவுப் பழக்க வழக்கமே காரணம் என்று கண்டு கொண்டார்கள் . வடக்கே இருந்து வந்த ஒரு கூட்டத்தார் தங்களின் மாமிசம் உண்ணும் பழக்கத்தை தமிழ் மண்ணின் மக்களுக்கு புகுத்தி தமிழ் மக்கள் மது , மாமிசம் போன்ற கொடிய பழக்கத்திற்கு ஆளாகிப் போனதால் கொடிய நோய்களுக்கும் ஆளாக்கப்பட்டு விட்டார்கள் என வருத்தமுற்று கொலை செய்து அதை உண்டு வினையைப் பெருக்கி பிறந்து இறந்து வீண்போய்க் கொண்டிருக்கின்ற இத் தமிழ் மக்களின் செயல்களை எவ்வண்ணம் மாற்றுவது என்று சிந்தனை வசப்பட்டார்கள் . உயிரைப் பெற்ற அனைத்துத் தேகங்களும் கடவுள் இருக்கின்ற ஆலயம் என்ற உண்மைக் கருத்தை மக்களுக்கு எடுத்துரைத்து கடவுளால் ஆளப்படுகின்ற உடல்களைக் கொன்று தின்று சண்டாள சரீரங்களைப் பெற்று வீண் போகாதீர்கள் என்று அறிவுறுத்தினார்கள் . ஆடு மாடு பறவை இனங்களை கடவுள் பெயரால் அன்றைய காலக்கட்டத்தில் பலி கொடுத்து உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்த நம் மக்களை எவ்வளவு மாற்றி அமைக்க வேண்டுமோ அவ்வளவு சிரமத்துடன் மாற்றி அமைத்து அதில் வெற்றியும் காண முற்பட்டார்கள் . அதே சமயம் வடக்கில் இருந்து தெற்கே வந்த வேதியர்கள் தமிழ் மக்கள் இயற்கைத் தாவரத்தை உண்பதைப் பார்த்து அவர்கள் தங்கள் மாமிசப் பழக்கத்தைப் புகுத்தி விட்டு , நம் மக்கள் உணவு பழக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் . ஆனால் வடக்கில் தங்கிய வேதியர்கள் இன்று வரை மாமிசத்தையும், மீனையும் தவிர்க்காது உண்டு வருகின்றார்கள் .

**வே**தியர்களுக்கு இணையாக தங்களை எண்ணிக் கொண்ட மக்களின் ஒரு பகுதியாகிய சைவர்கள் என்று அழைக்கப்படும் புறக்கைலாயப் பரம்பரையின் பின் வழிவந்த சைவப்பிள்ளைமார்களும் , மாமிசம் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் . இவர்களால் இயற்றப்பட்ட நாயன்மார்களின் புராணத்தில் சைவ சமயத்தின் கடவுள் பிள்ளைக் கறிக்கு ஆசைப்பட்டார் என்றும் , மாமிச உணவு படைக்கப்பட்டது என்றும் பன்றியைக் கொன்று சுட்டு இவருக்கு கண்ணப்பன் என்பார் படைத்தார் என்றும் எழுதிய உண்மைப் பொருள் தெரியாமல் மாமிசம் உண்ணும் பழக்கத்தை இன்று வரை கையாள்கின்றார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும் . இதைக் கண்ணுற்ற சைவர்களில் ஒரு பகுதியினர் வீர சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு சைவம் தோற்றுவிக்கப் பட்ட தமிழ் மண்ணிலிருந்து கன்னட நாட்டுக்குச் சென்றுவிட்டார்கள் . மற்றும் ஒரு பகுதியினர் மேற்கத்திய நாட்டிலிருந்து 2000 ம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய , கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் மதத்திற்கு மாறிப்போய் விட்டார்கள் . இதற்குக் காரணம் மடாதிபதிகளாகிய ஆதீன கர்த்தர்கள் தங்களுக்கு உரிய சைவத்தை வளர்க்காது உண்பதிலும் , உறங்குவதிலும் , உறவு கொள்வதிலும் சொத்துக்களை சேகரிப்பதிலும் மற்ற பொழுது போக்குகளிலும் காலத்தைச் செலவிட்டதாலும் நம் தமிழ் மக்களிடையே உயர்ந்த சாதி , தாழ்ந்த சாதி என்று பிரித்தாளும், சூழ்ச்சியைக் கையாண்டதாலும் தமிழ் மக்கள் மற்ற மதங்களில் சேர்ந்து அந்நெறியைக் கடைப்பிடித்து உயர்ந்த சைவ நெறியைக் கைவிட்டு விட்டார்கள் மதத்தாலும் சமயத்தாலும் மக்கள் ஏமாற்றப் பட்டு ஒழுக்க நெறி தவறி மாமிசம் உண்ணும் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனார்கள் . இது கண்ட அடிகள்

மனம் உருகிப் போனார்கள் .

இதே மன நிலையில் அடிகள் திரும்பவும் தெற்கு நோக்கிப் புறப்பட்டு மதுரை மற்றும் பல பகுதிகளில் கால்நடையாகவே நடந்து பல தரப்பட்ட பழக்க வழக்கங்களுடன் வாழ்கின்ற இத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை கண்டு வாடி மீண்டும் சிதம்பரம் வந்து சில காலம் தங்கியிருந்தார்கள் . இதற்கிடையே தொண்ட மண்டல சதகம் என்னும் ஒரு நூலை 1855 ல் பதிப்பித்தார்கள் . இரண்டு வருடம் கழித்து 1857 ல் சின்மயத் தீபிகை என்ற நூலையும் பதிப்பித்தார்கள் .

**1858** ம் வருடம் கருங்குழியில் மணியக் காரர் புருசோத்தமன் என்பவர் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் வீட்டிலேயே தங்கிக் கொண்டு சிதம்பரம் சென்று வரும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள் . இக்காலத்தில் தான் அடிகளின் திருவருட் பெருமையைக் கேள்விப்பட்டு மக்கள் திரளாக வந்து பார்த்து நன்மை பெற்றனர் . இக்காலத்தில் அடிகள் செய்த அற்புதங்கள் ஒன்றா , இரண்டா ? எண்ணிலடங்காத அற்புதங்களை அடிகள் நிகழ்த்திக் காட்டினார்கள் . பத்தாண்டு காலம் அடிகள் கருங்குழி வாசத்தை மேற்கொண்ட சமயம் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம், ஏராளம் .

இன்று உலகம் முழுவதும் அற்புதம் என்றால் என்ன என்றே தெரியாமல் , சித்தர்கள் மகான்கள் பெயரை தன்னுடைய புனைப்பெயராக வைத்துக் கொண்டு சித்தர்கள் , தேசிகர் , சிவராஜயோகி , மரணம் தவிர்த்த பெருமான் என்ற பெயரால் செப்பிடு வித்தை முதலியவைகளைச் செய்து காட்டி மக்களை பல பேர் ஏமாற்றி வயிறு வளர்த்துக் கொண்டு இருக்கின்றார்கள் . மக்களும் இவர்களை கடவுளின் அவதாரம் என்றும் மகான்கள் என்றும் நம்பி ஏமாந்து கொண்டு இருக்கின்றார்கள் .

அடிகளின் வாழ்க்கையும் அன்றாட செயல்களுமே அருள் அற்புதங்களாக நடந்து கொண்டிருந்தது . நோயுற்றவர்கள் புலவர்கள் , வித்துவான்கள் , சாஸ்திரிகள், பண்டிதர்கள் , பாமரர்கள் , அனைவரது எண்ணங்களுக்கும் கேள்வி களுக்கும் அவர்கள் அடிகளை கேட்கும் முன்பே பதில் அளித்தார்கள் . இது கண்டு எங்கே தங்கள் பிழைப்புக்கு குந்தகம் ஏற்பட்டு விடுமோ என்று தில்லை வாழ் தீட்சிதர்களும், ஆதீனகர்த்தர்களும் , வித்துவான்களும் பொறாமை கொண்டு நிலை குலைந்து போனார்கள் .உண்பதும் , உறங்குவதும் , உடுத்துகின்றதும் , உறவு கொள்ளுகின்றதும் முடிவில் பாடை மேல் படுத்து மயானம் செல்கின்றதும் உடைய இவர்கள், அடிகளைப் பற்றியும் அவர்கள் தோன்றிய விதம் பற்றியும் தெரிந்தும் தெரியாதது போல் இருந்தும் , சூரியனைப் பார்த்து குரைக்கின்ற சுணங்கன் போல் எப்படி எந்தச் சமயத்தில் குரைக்கலாம் என்று தருணம் எதிர்பார்த்திருந்தார்கள் .

முக்கால ஞானமும் , ஐந்தொழில் இயற்றும் வல்லமையும் கைவரப் பெற்ற அடிகள் , இவையெல்லாம் தெரிந்திருந்தும் ஒரு சாதாரண பாமரரைப் போல் எல்லோரிடத்திலும் சகசமாகப் பழகியும் பேசியும் வந்தார்கள் . அதே சமயம் அடிகள் எண்ணமெலாம் தான் கற்ற சாகாக் கல்வியையும் ,தான் கைவரப் பெற்ற நித்திய மெய்வாழ்வு நிலையையும் சாதாரண பாமரமக்களும் பெற்றிட வேண்டும் என்பதே நோக்கமாக கொண்டிருந்தார்கள் .

இத்தருணத்தில் இறுக்கம் இரத்தினம் என்பார் அடிகள் மீது அளவு கடந்த அன்புடனும் , பணிவுடனும் கருங்குழி வந்து அன்பரானார்கள் . அடிகள் தான் கைப்பட 31.05.1858 முதல் 20.08.1868 முடிய 39கடிதங்கள் (முப்பத்து ஒன்பது திருமுகங்கள்) இறுக்கம் இரத்தினத்திற்கு எழுதியுள்ளார்கள் . இதே காலம் புதுவை என்று சொல்லக் கூடிய பாண்டிச்சேரி வேலு என்பாருக்கு 7 (ஏழு திருமுகங்கள்) கடிதங்கள் எழுதியுள்ளார்கள் . இக் கடிதங்களை உற்றுக் நோக்கும் சமயம் அடிகள் எவ்வளவு உயர்ந்த விஷயங்களை எளிமையாக எழுதியிருக் கின்றார்கள் என்பது விளங்கும் .

இவைகளை எல்லாம் கண்ணுற்ற சமயவாதிகளும் மத வாதிகளும் , மடாதிபதிகளும் , தில்லையில் வாழ்கின்றவர்களும் அடிகளின் அருளாற்றலையும் பெருமைகளையும் கண்டு மனம் பொறாதவர்களாய் தாங்கள் தகாத காரியங்களை செயல்படுத்தத் துவங்கினார்கள் . அடிகள் நம் தமிழ் நாட்டு சித்தர்கள் பாரம்பரியத்திலே வந்தவர்கள் . நம் தமிழ் நாட்டின் சைவ சித்தாந்த நெறியிலே தோன்றிய அப்பர் , ஞானசம்பந்தர் ,

சுந்தரர் போன்றவர்கள் இறைவன் மீது பாடிய தேவார பதிகங்களை திராவிட வேதம் என்றும் , ஞான சம்பந்தரை திராவிடக் குழந்தை என்று அக்காலத்தில் சங்கரமடத்தைச் சார்ந்த சங்கராச்சாரியார் சொல்லியதை ஏற்றுக் கொண்ட ஆதீன கர்த்தர்களும் மடாதிபதிகளும் அன்றே வடக்கே இருந்து வந்த ஆச்சாரமுள்ளவர்களுக்கு தாங்களும் அடிமையாகி தங்கள் வழி வந்த மக்களையும் அடிமைப்படுத்தி தங்களையும் உயர்ந்தவர்கள் எனக் காட்டிக்கொண்டார்கள் . இவ் வழி வந்த திருவாடு துறை ஆதீனத்தைச் சேர்ந்த மகாவித்வான் திரிசிர புரம் மீனாட்சிசுந்தரம் என்பார் (திருச்சிராப்பள்ளி என்ற பெயரில் பள்ளி என்பது சமணர்கள் தங்கும் இடத்தை குறிப்பதால் திரிசிரபுரம் என்று எழுதிக் கொண்டவர். ஞானசம்பந்தப் பெருமானே சிராப்பள்ளி மேவிய தயுமானவன் என்னும் , சிவபெருமானே என்று தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார் ) தனது மாணவராகிய மாயூரம் வேதநாயகம் என்பவர் எழுதிய நீதி நூலுக்கு சாற்றுக்கவி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இருவரும் கருங்குழி வந்து அடிகளிடத்தில் வேண்டிக் கொண்டார்கள் . மீனாட்சி சுந்தரமோ மகாவித்துவான் என்ற பட்டம் பெற்றவர் .இவர் பாடிய பாடல்களோ கணக்கில் அடங்காது . அடிகளோ அருட் கல்வி கற்றவர் . இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள் . மீனாட்சி சுந்தரமோ ஒன்றும் விளங்காது விழித்துக் கொண்டிருந்தார் . இனி நாம் சொல்லுவது தொழுவூர் வேலாயுதத்திற்கும் விளங்காது என்று சிலவற்றைச் சொல்லி நிறுத்திக் கொண்டார்கள் . மீனாட்சி சுந்தரமோ இவ்வளவு உயர்ந்த கருத்துக்களும் விளக்கங்களும் சங்ககால நூல்களில் கூட இல்லையே என்று இந்தக் கல்வியை அடிகள் எங்கு எப்படி யாரிடம் கற்றார் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் , அடிகள் கற்றேன் சிற்றம்பலத் தந்தையாரிடத்தில் என்று சொல்லி மீனாட்சி சுந்தரம் வேண்டிய சாற்றுக்கவி கொடுத்து உபசரித்து அனுப்பி வைத்தார்கள் . அடிகளின் அருளாற்றலினை நேரில் கண்ட வித்துவான் மீனாட்சிசுந்தரம் மனதில் தான் கற்ற கல்விச்செருக்கின் எண்ணத்தால் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது .

**1867** ம் வருடம் ஜனவரி மாதம் முதல் நாள் அடிகளின் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனை ஏற்பட்டது . திருப் பாதிரிப்புலியூர் என்னும் திருத்தலத்தை அடுத்த தென்பெண்னை ஆற்றங்கரையில் உள்ள சாவடியில் ஓர் கோவில் திருவிழா ஒன்று நடக்க இருந்த சமயம் பிரம்ம சமாஜத்தைச் சார்ந்த ஸ்ரீதரன் என்பார் அவ்விடம் வந்து உருவவழிபாடு செய்யக்கூடாது என்றும் தவறானது என்றும் அங்குள்ளவர்களிடம் வாதம் செய்து கொண்டிருந்தார்கள் . பல இடங்களில் பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளைப் பிரசங்கம் செய்து உருவ வழிபாட்டை எதிர்ப்பவராகத் திகழ்ந்தவர்கள் பிரம்மசமாஜத்தார் . அது நேரம் அவ்வழியே அடிகள் வருவதைக் கண்ட அங்கு இருந்தவர்கள் தங்கள் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள அடிகளை நோக்கி ஐயா பிரம்மத்தை நினைப்பதே உண்மை என்றும் தகுதி என்றும் உருவ வழிபாடு கூடாது என்றும் தகுதி யற்றதென்றும் பிரம்மசமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் என்பவர் எங்கள் முன்பாக பல தடவை பிரசங்கம் செய்து வருகிறார் , தாங்கள் எது நல்லது , தகுதியானது என்று எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர் . அது சமயம் அடிகள் பிரமத்தை அறியத் தொடங்கியவர்கள் அறிந்து கொள்ளுங்கள் என்றும் உருவ வழிபாடு செய்யத் தொடங்கியவர்கள் உருவ வழிபாடு செய்யுங்கள் என்றும் இந்த இரண்டு வகையுள்ளும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவை இரண்டும் என்றும் சொன்னார்கள் . இதைக் கேட்ட பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் என்பவர் வெகு ஆணவத்துடன் நிலை தடுமாறி கோபம் அடைந்து பொருமினார் . அது கண்ட அடிகள் அவரை சமாதானம் செய்து பிரம்மம் மனத்திற்கு புலப்படாது என்றும் , பிரம்மம் மாயாதீதம் என்றும், மனமும் மாயாதீதம் என்றும் , மனதிற்கு புலப்படுவது கண்களுக்கு புலப்படாது என்றும் , கண்களுக்கு புலப்படுவது மனதிற்கு புலனாகும் என்றும் பிரமத்தை ஆன்ம ஞானத்தால் அறியலாம் என்றும் அடிகள் சொல்லக் கேட்ட ஸ்ரீதரன் இன்னும் எட்டு தினத்திற்குள் நான் உங்களைச் சிரிக்க வைக்கிறேன் என்று கர்வத்துடனும் கோபத்துடனும் சபதம் செய்து கோபித்துப் போய்விட்டார்கள் . பின்பு இதன் விளக்கத்தை அங்கு இருந்தவர்களுக்கு அடிகள் விரிவாக விளக்கி அருளினார்கள் . வடக்கே இருந்து தோன்றிய மிகப் பெரிய இயக்கமாகிய ஆரிய சமாசம் , பிரம்ம சமாஜம், தமிழ் மக்களிடமும் , தன் விளையாட்டை ஆரம்பித்து , ஆரிய சமாஜ மானது தனது

அமைப்பை தமிழ் மண்ணில் நிலைத்து நிறுத்தி வேரூன்றி விட்டது . பிரம்ம சமாஜமானது அங்கும் இங்குமாக ஒரு சில இடங்களில் பேசப்படுகிறது . ஆரிய சமாஜம் விக்ர ஆராதனையாகிய உருவ வழிபாடு செய்யச் சொல்லி மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பது , பிரம்மசமாஜம் , சர்வமும் கடவுள் மயம் எல்லாம் வெட்ட வெளி பிரம்ம சொரூபமே கடவுள் என்ற கற்பனையில் மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பது . மேடம் பிளாவட்ஸ்கி அம்மையார் , கர்னல் ஆல்காட் , அன்னிப்பெசண்ட் அம்மையார் இவர்களால் வளர்க்கப்பட்ட ஜே. கிருஷ்ணமூர்த்தி என்பவர்களும் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களே . பிற்காலத்தில் உலகம் முழுவதும் பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பரப்ப அனுப்பப்பட்ட ஜே .கிருஷ்ணமூர்த்தி என்பார்பிரம்ம சமாஜத்தின் பீடமாகிய சென்னை அடையாறு இல்லத்தின் கட்டிடத்தில் ஒரு செங்கல் கூட இம்மண்ணில் இருக்கக் கூடாது இடித்துத் தள்ளுங்கள் என்று உத்தரவிட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும் .

**த**ற்காலத்தில் இந்த பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களே மனவளக்கலை , யோகம் ,பிராணாயாமம் , உபதேசம் , தீட்சை , மந்திரம் , தன்னை அறிதல் என்று தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள் . இவர்கள் தமிழ் மண்ணில் தோன்றியவர்கள் அல்லர் . தமிழ் மக்கள் என்று சொல்லிக் கொண்டு சித்தர்கள் பெயரில் பலவிதமான தீட்சைகள் என்றும் உபதேசங்கள் என்றும் மணிமந்திர வைத்தியங்கள என்றும் தமிழ் மண்ணில் தோன்றிய மக்களை மட்டும் அல்லாது தமிழ் மக்கள் எங்கெல்லாம் பிழைக்கச் சென்றார்களோ அங்கெல்லாம் சென்று ஏமாற்றி வயிறு வளர்த்துக் கொண்டு இருக்கின்றார்கள் . பாவம் இவர்கள் உண்மை சொரூபம் அறியாது திரைகடல் ஓடியும் திரவியம் தேடவந்த தமிழ் மக்களும் ஏமாந்து போய்க்கொண்டு இருக்கின்றார்கள் . ஒரு புறம் ஆச்சாரம் உள்ள வேதியர்கள் , மற்றொருபுறம் சமயவாதிகள் , மறுபுறம் இது போன்ற குதர்க்க வாதிகள் **இவர்களுக்குள்ளே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள்** . இம்மக்களை எப்படி ஒன்றுபடுத்துவது என்று அடிகள் சிந்தித்தார்கள். அடிகளின் சிந்தனை நிறைவேறியது . அதன் விளைவாக வறண்ட பகுதியாக இருந்த வடலூர் பெரு வெளியை தேர்வு செய்தார்கள் .

1867 ம் வருடம் பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள் அப்பகுதி மக்கள் 80 ஏக்கர் நிலத்தை அடிகளுக்கு கொடுத்து அடிகள் நினைத்திருந்த அற்புதச் செயலுக்கு உடன்பட்டார்கள் . 80 ஏக்கர் நிலத்தில் தென் கிழக்கு மூலையில் ஒரு கட்டிடத்தை கட்டிட முனைந்தார்கள் . அந்த கட்டிடத்தில் தான் முதன் முதலில் சன்மார்க்க சங்கம் என்ற ஒரு அமைப்பை அடிகள் சிறிய அளவில் தோற்றுவித்தார்கள் . அந்த கட்டிடத்திற்கு சாலை என்றும் , அங்கு அன்பர்கள் கூடி பழகுவதற்கு சங்கம் என்றும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி , பலர் கூடிப் பழகவும் , தயவுள்ளத்துடன் உடன்பட்டு பசித்தோர்க்கு சோறிடவும் அடிகள் ஏற்படுத்தினார்கள் . சாலைக்கு தருமச் சாலை என்றும், சங்கத்திற்கு சமரச சன்மார்க்க சங்கம் என்றும் அடிகள் பெயரிட்டார்கள் . சிதறிக்கிடந்த மக்கள் விழித்துக் கொண்டார்கள் . ஆசாரத்திலும் , மதங்களிலும் , சமயங்களிலும் மயங்கிப் போன மக்கள் விழிப்படைவதால் எங்கே நம் பிழைப்பு தடை பட்டுவிடுமோ என்று பதறிப்போன ஆசாரமுள்ள உயர்ந்த சாதிக்காரர்கள் அடிகள் வளர்ச்சியை தடுத்தே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு உடனே அநீதி புரிய ஆரம்பித்தார்கள் .

**ஒ**ரு விலை மாதுவை அழைத்து அந்த அம்மையாருக்கு நிறைய பொருள் கொடுத்து அடிகள் இருக்கும் இடத்தை தெரிவித்து எப்படியாயினும் அடிகளிடம் சென்று உன் வஞ்சக வலையில் அவரை வீழ்த்தி அவமானப் படுத்தி உலகறியச் செய்துவிடு என்று அனுப்பிவைத்தார்கள் . அந்த விலை மாதுவும் அடிகள் இருப்பிடம் வந்து அடிகளைக் கண்டவுடன் வேரற்ற மரம் போல் காலில் விழுந்து வணங்கி தான் அனுப்பப் பட்ட விபரத்தைச் சொல்லி தன்னை மன்னிக்குமாறு வேண்ட அடிகளும் அம்மையாருக்கு புத்திமதிகள் சொல்லி அனுப்பி வைத்தார்கள் . **வெட்கித் தலைகுனிந்தார்கள் அனுப்பி வைத்த வேதியர்கள்** . மீண்டும் அவர்கள் தங்களைச் சார்ந்த ஒருவரை அடிகள் போல் வேடம் புனையச் சொல்லி அவரிடம் ஒரு விலை மாதுவை அனுப்பி அடிகள் ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டார்கள் என்று தாங்களாகவே ஒரு வதந்தியைக் கிளப்பி தங்கள் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொண்டார்கள் . அடிகள் இதையும் பொருத்துக்கொண்டார்கள் . தமிழ் மண்ணில்

தோன்றிய அருளாளர்கள் இப்படியெல்லாம் சமயவாதிகளால் பழிவாங்கப்பட்டார்கள் .

அக்காலத்தில் வடலூர் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும் . அடிகள் வடலூரரை தேர்ந்தெடுத்து தருமச்சாலை தொடங்கியதன் நோக்கம் அப்பகுதி மக்கள் **வறுமையாலும் பசியாலும் பட்டினியாலும்** துன்பப்படாமல் இருப்பதற்காகவே தான் . சிதம்பரம் , குறிஞ்சிப்பாடி , விருத்தாசலம் , பண்ருட்டி ஆகிய நான்கு ஊர்களுக்கும் நடு நாயகமாக இருப்பது வடலூர். ஆக இந்த நான்கு ஊர்களுக்கும் போவோர் வருவோர் நலம் கருதி அந்த இடத்தை தேர்வு செய்தார்கள். 80 ஏக்கர் நிலம் வடலூர் மக்களால் கொடுக்கப்பட்டது. அதே சமயம் அடிகள் மூலம் நன்மை அடைந்தவர்களே நிலங்களை கொடுத்தார்கள். பசியினால் வருந்துகின்றவர்களுக்கு உணவு கொடுத்தும் பிணியினால் வருந்துகின்றவர்களுக்கு பிணியை நீக்கியும் மற்ற மற்ற அனைத்து தேவைகளையும் அடிகள் அம்மக்களுக்கு நிறைவு செய்த காரணத்தால்தான் வடலூர் மக்கள் நிலத்தை கொடுத்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மை . ஆனால் அடிகளோ **மிகப்பெரிய ஆன்மலாபத்தை கொடுக்கவந்தவர் என்பது ஏனோ அம்மக்களுக்கு புரியாது போயிற்று** . இச்சமயம் அடிகள் கருங்குழியில் வாசம் செய்வதும் வடலூரில் தருமச்சாலை திருப்பணியை பார்ப்பவராகவும் இருந்துகொண்டு சன்மார்க்க சங்கத்தையும் அன்பர்களுடைய பக்குவத்திற்கு ஏற்றவாறு நடத்திக்கொண்டிருந்தார்கள்.

இதுவரையும் அடிகள் ஓதிய பாக்கள் எல்லாம் அங்கும் இங்குமாக சிதறிக்கிடந்ததை ஒன்று சேர்த்து அடிகள் அனுமதியுடன் சென்னையில் உள்ள மயிலாப்பூர் சோமு என்பவரின் பொருள் உதவியுடன் அடிகளின் அன்பர் தொழுவூர் வேலாயுதம் முதல் 4 திருமுறைகள் அடங்கிய திருவருட்பா என்னும் முதல் பதிப்பினை 1867 ம் வருடம் பிப்ரவரி மாதம் வெளியிட்டார். அடிகள் திருவாய்மலர்ந்தருளிய பதிகங்கள் இத்தமிழ்மண்ணின் மக்களுக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் அளித்தது. திருவருட்பா முதல் திருமுறையில் மகாதேவ மாலையின் நூறு பாடல்கள் அனைத்தும் மிக உயர்ந்த அருள் அனுபவத்தை விளக்குவதாக இருந்தது . இதைக்கண்டு **வித்துவான்களும் புலவர்களும் வாயடைத்துப் போனார்கள்.** ஆனால் சமயவாதிகள் நெஞ்சமோ கனல் விட்டு எரிந்து கொண்டிருந்தது . அடிகள் எழுதிய நூலுக்கு திருஅருட்பா என்றும் அதன் உட்பகுதிகள் அடங்கிய பாடல்களுக்கு திருமுறை என்றும் பெயர் வைத்ததால் சமயவாதிகளால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அக்காலத்தில் பன்னிரு திருமுறை சம்பந்தபட்ட பாடல்களே ஆதீனங்களிலும் , மடங்களிலும் ஓதப்பட்டு வந்தது . ஆலயங்களில் ஆசாரம் உள்ளவர்களின் ஆதிக்கம் இருந்ததாலும் மூவர்களால் பாடப்பெற்ற திராவிட வேதம் என்று சொல்லப்பட்ட தேவார திருப்பதிகங்களை ஓதுவார்கள் ஓதிக் கொண்டிருந்தார்கள் . இவ்வாறிருக்க திருவருட்பா என்றும் திருமுறை என்றும் அடிகள் பெயரிட்டதை சமயவாதிகளும் ஆசாரம் உள்ளவர்களும் பொருத்துக் கொள்ள முடியாது அடிகள் மீது மிகுந்த பொறாமை கொண்டார்கள் . இச்சமயம் தருமச்சாலை சாதரண செங்கற்களால் கட்டப்பட்டு மேல்பகுதி கூரை போடப்பட்டு முடிவுற்றது . 1867 ம் வருடம் ஏப்ரல் மாதம் 25 ம் நாள் கடலூர் அப்பாசாமி என்பார் அடிகளின் அனுமதியுடன் தருமச்சாலை துவக்க விழாவுக்கான அழைப்பிதழை தமிழகம் எங்கும் அனுப்பினார் . 1867 ம் வருடம் மே மாதம் 23 ம் நாள் , வைகாசி மாதம் 11 ம் நாள் தருமச்சாலை துவங்கி , அன்றே சாலை விளம்பரம் வெளியிடப்பட்டது . தருமச் சாலையிலே சன்மார்க்க சங்க செயல்பாடுகளும் நடந்தேறியது . தமிழ் மண்ணின் மக்கள் அலை அலையாக, கூட்டம் கூட்டமாக தருமச்சாலைக்கு வந்து , சாலைக்கும் , சங்கத்திற்கும் தங்களை அற்பணித்துக் கொண்டார்கள்.

இக்காலத்தில் அடிகள் செய்த அற்புதங்கள் ஏராளமானவை . அடிகள் எழுதிய முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய திருவருட்பா என்னும் நூல் தமிழ் மக்களின் கையில் கிடைத்து . அதில் சொல்லப்பட்ட அற்புதமான விளக்கங்களும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுக் கொண்டிருந்தது . சாதி சமயம், மதம், இனம் எனும் வேறுபாடு இன்றி யார் வேண்டுமானாலும் இச்சங்கத்தில் சேரலாம். மாமிசம் உண்ணும்

பழக்கம் இல்லாதவர்களும் , சற்று தயவு உள்ளவர்களும் சாலைக்கு உரியவர்கள் ஆவர் என்று அடிகள் மூலம் விளம்பரம் வெளியிடப்பட்டது . இதைக் கண்டு ஆடிப்போனார்கள் சமயவாதிகள் . எங்கே நம் வழிபாட்டு நூலாகிய பன்னிரு திருமுறைக்கு குந்தகம் ஏற்பட்டு விடுமோ என்றும் அஞ்சினார்கள் . ஏற்கனவே தில்லையில் உள்ளவர்கள் தங்கள் பங்குக்கு அடிகள் மீது களங்கம் கற்பிக்க முயன்று தோற்றுப் போனார்கள் என்பதை அறிந்த சமயவாதிகள் தங்கள் பங்குக்கு களங்கத்தை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டார்கள் . ஏனோ இவர்களால் தொகுக்கப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் எட்டாம் ***திருமுறையாக திருவாசகமும், பத்தாம் திருமுறையாக திருமந்திரமும் இணைக்கப் பெற்றது அதிஷ்டவசமானது*** . இந்த இரண்டு நூல்களையும் சாதரண தோத்திரங்களாகவே இன்றுவரை இச்சமயவாதிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் . அடிகள் வெளியிட்ட முதல் நான்கு திருமுறைகளும் ஓரளவு சமயத் தெய்வங்கள் சார்பாகவே பாடப்பெற்றாலும் **அதன் உட்கருத்து சாகாக் கல்வியை** எடுத்துக் காட்டியது என்பது மறுக்க முடியாத உண்மை . ஆக இந்த நான்கு திருமுறைகளிலும் மனிதர்கள் ஒழுக்கத்துடனும் , இரக்கத்துடனும் இருக்கவேண்டிய மிக முக்கியமான இந்திரிய ஒழுக்கமும் கரண ஒழுக்கமுமே சொல்லப் பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை . இவைகள் எல்லாம் சமயவாதிகளுக்கு கடுகளவு கூட புரியவில்லை. அவர்கள் நோக்கம் எல்லாம் எப்படி திருமுறை என்றும் திருவருட்பா என்றும் பெயரிட்டு அழைப்பது என்பது தான். அந்நாளில் ஆதீனங்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஆலயங்களில் எல்லாம் பணிபுரிந்தவர்கள் அனைவரும் அந்தணர்கள் . இதில் சிலர் ஆதீன கர்த்தர்களாகிய சமயவாதிகளின் அடாத செயல்களைக் கண்டித்து தங்களுக்கென்று தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதுவே **கும்பகோணத்தில் உள்ள சங்கரமடம்** என்பது ஆகும் . இம்மடம் ***<u>ஆதிசங்கராச் சாரியாரால் தோற்றுவிக்கப் படவில்லை.</u>*** இம்மடத்திற்கு எந்தவிதமான வரலாறுகளும் இல்லை. ஒரு சமயம் இம்மடத்தைச் சார்ந்த சங்கராச்சாரியாருக்கும் ஆதீனகர்த்தருக்கும் இடையே யாரை யார் முதலில் வணங்குவது என்று ஒரு சர்ச்சை எழுந்தது. ஆதீன கர்த்தர் நேரில் பார்க்கும் சமயம் இருவருமே வணங்கிக்கொள்ளலாம் என்று தெரிவித்த கருத்தை ஏற்காத சங்கராச்சாரியார் தன்னையே ஆதீன கர்த்தர் முதலில் வணங்கவேண்டும் என்றும் , முதல் மரியாதை தனக்கே மற்றவர்கள் கொடுக்கவேண்டும் என்றும் சற்று ஆணவத்துடன் தெரிவித்தார் . அது கேட்ட ஆதீன கர்த்தர் அப்படியானால் யார் பெரியவர் என்றும் முதலில் வணக்கத்துக்கு உரியவர் யார் என்றும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அதற்கு ஒரு பரீட்சை நடத்தவேண்டும் என்றும் சொல்ல அதை சங்கரமடத்தை சார்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஆதீனகர்த்தர் பத்து மூடை அரிசியை வேக வைத்து இருவரையும் அமர வைத்து இருவருக்கும் சூடான சோறை தலையில் கொட்டி அன்னாபிசேகம் செய்து உடம்பை மறைத்துவிடுவது என்று ஏற்பாடாகி முதலில் ***சங்கராச்சாரியாரை அமரவைத்து வடித்த சோறை கொஞ்சம் தலையில் கொட்டியவுடனே சூடு தாங்காமல் எழுந்து ஓடிவிட்டார்.*** ஆதீனகர்த்தரோ பத்து மூடை சோறை தலையில் கொட்டியும் அவ்வளவு சூடும் தணியும்வரை எழுந்து வரவேயில்லை. பல மணி நேரம் கழித்து சோற்றை விலக்கிக்கொண்டு உயிருடன் வெளியே வந்தார்கள். அன்றைய காலங்களில் **<u>ஆதீனத்து மடாதிபதிகள் அவ்வளவு வல்லமையுடனும் அருள் வடிவத்துடனும் இருந்தார்கள்.</u>** ஆனால் தற்காலங்களில் அவர்கள் செயல்பாடுகள் கேலிக்குரிய சர்ச்சைகளாக நடந்துகொண்டிருக்கின்றன. பரீட்சையில் தோற்றுப்போன சங்கராச்சாரியார் கும்பகோண மடத்தை மாற்றிக்கொண்டு காஞ்சிபுரம் சென்ற காரணமே அவர்கள் ஆதீனகர்த்தர்களிடம் தோற்றுப்போனதுதான் என்பது வரலாற்று உண்மை . தற்கால சங்கரமடத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய மனுதர்மத்தை மறந்து பஞ்சமா பாதகங்களில் ஈடுபட்டு தற்கால ஆதீனகர்த்தர்களையும் மிஞ்சிவிட்டார்கள் என்பது வரலாற்று உண்மையாகிப் போய்விட்டது . ஆக ஆதீன கர்த்தர்களும் , அந்தணர்களும் , மற்ற மதத்தவர்களும் கூட அடிகள் மீது மிகுந்த பொறாமை உடையர்வர்களாக காணப்பட்டார்கள் . அடிகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள் .

இந்த சமயவாதிகளின் பொய் நெறிக்கு அடிமைப் பட்டுக்கிடக்கும் மக்களை செந்நெறிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அடிகளின் மனதில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருந்தது.

உலகக் கல்வியானது , அருட்கல்விக்கு ஒருபோதும் ஈடாகாது என்று அடிகள் கருதினாலும் ஓரளவு படிப்பறிவாகிய உலகக்கல்வியும் தெரிந்திருக்கவேண்டும் என்பது அடிகளின் எண்ணமாக இருந்தது . 1867 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாமரர்களும் உயர்கல்வியாகிய சாகாக் கல்வியை தெரிந்து அடைந்து கொள்ளவேண்டும் என்று கருதிய அடிகள் சன்மார்க்க போதினி பாடசாலை என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதில் முதியோர் , பாமரர் அனைவரும் கற்றுத் தேற ஏற்பாடு செய்தார்கள் . பாடம் நடத்தியவர் வேலாயுதம் அவர்கள். பாடம் கேட்டவர்களை பக்குவப்படுத்தியவர் தருமச்சாலை சமையல்காரர் சண்முகம் ஆவார்கள். வேலூரைச் சேர்ந்த சண்முகம் என்ற மிகத் தயவுள்ளம் கொண்டவரே தருமச்சாலையில் சமையல் பணி புரிந்து அடிகளின் மாறாத அன்புக்கு பாத்திரமானவர்கள் ஆவார் . இதே காலத்தில் அடிகள் சன்மார்க்க விவேக விருத்தி என்னும் பத்திரிக்கையையும் தொடங்கினார்கள் . அதேசமயம் தருமச்சாலையின் கிளைச் சாலைகளாக வைத்தியசாலை, சாத்திரசாலை, உபகாரசாலை, விருத்திசாலை, விரதச்சாலை, யோகசாலை, விவகாரச்சாலை போன்றவைகளையும் நிறுவ அடிகள் ஏற்பாடு செய்தார்கள் . இந்தக் காலத்தில்தான் 13.12.1867 ஆம் வருடம் வேட்டவலம் ஜமீனைச் சேர்ந்த சேது என்பவர் யாத்திரை செய்யும் காலம் அடிகள் தருமச்சாலையில் தங்கியிருந்ததை அறிந்து அடிகளைக் கண்டு வணங்கினார் . அன்றைய தினம் மார்கழி மாதம் திருவாதிரை தினம் . அடிகளின் கூட இருந்த அன்பர்கள் பலர் சமயப்பற்று அதிகம் உள்ளவர்களாக இருந்த காரணத்தால் பலர் காலையிலேயே சிதம்பரம் நடராஜப் பெருமானின் ஆருத்ரா தரிசனம் பார்க்கச் சென்றுவிட்டார்கள் . மற்ற அன்பர்கள் தருமச் சாலையிலேயே இருந்தாலும் அவர்கள் மனம் ஏனோ தில்லை நடராஜப் பெருமான் ஆருத்ரா தரிசன காட்சியின் நினைவாகவே இருந்தார்கள் . இதை அறிந்த அடிகள் அன்று சிதம்பர நடராஜன் ஆருத்ரா தரிசனம் நடக்கும் அதே சமயம் தருமச்சாலையில் ஒரு துணியை திரைபோல் கட்டி, அத்திரையில் சிதம்பரத்தில் நடந்த நடராசப் பெருமானின் அத்தனை நிகழ்ச்சிகளையும் , அபிசேகங்களையும் , ஆருத்ரா தரிசனத்தையும் இருந்த இடத்திலேயே காட்டினார்கள் . இதைக்கண்ட வேட்டவலம் ஜமீன்தார் மற்றும் பலரும் ஆச்சரியத்தில் அதிசயித்துப் போனார்கள் . அடிகள் இதுபோன்று பல அற்புதங்களை வெகு சுலபமாக செய்து காட்டினார்கள் . இதைக் கேள்விப்பட்ட சிதம்பரம் தீட்சிதர்கள் அடிகள் மீது பெரும் பொறாமையும் கோபமும் அடைந்தார்கள் . வேட்டவலம் ஜமீனுக்கும் அடிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது . வேட்டவலம் ஜமீனைச் சேர்ந்தவர்கள் அடிகளின் கருணையால் பல நன்மைகள் அடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது . வேட்டவலம் ஜமீன்தார் அடிகளை தரிசித்துவிட்டுச் சென்று சரியாக அடுத்தவருடம் 5.10.1868 அன்று ஜமீன்தாருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது . வாரிசு இல்லாத நிலையில் இரு மனைவிமார்களுடன் வாழ்க்கை நடத்திய வேட்டவலம் ஜமீன்தார் அக்குழந்தைக்கு அடிகள் அனுமதியுடன் சர்க்கரை (சர்க்கரையையா) என்று பெயர் வைத்து மகிழ்ந்தார். அடிகளின் கடைக்கண் நோக்கம் ஐந்தொழிலையும் செய்யும் ஆற்றல் மிகுந்தது என்பதை சாமானியராகிய வேட்டவலம் ஜமீன்தாரால் எவ்வாறு தெரிந்துகொள்ள இயலும். இக்காலத்தில் இவைகளை யெல்லாம் கண்டும் கேட்டும் ஆச்சரியமுற்றவரான ஆடூர் சபாபதி என்பார் அடிகளை பார்க்க தருமச்சாலைக்கு வந்தார் . இவர் வேதியர் மரபைச் சார்ந்தவர் என்று சொல்லப்படும் சிவாச்சாரியர் சமூகத்தை சார்ந்தவர் . இச்சமூகத்தவர் இன்றும் மாயூரம், சிதம்பரம் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள் . அடிகள் , சன்மார்க்க வாழ்வியல் முயற்சியில் மக்களை கொண்டு செல்லவேண்டும் என்று கருதிய போதெல்லாம் பெரும் இடையூறாகத் திகழ்ந்தவர் இச் சபாபதி என்பவரே ஆவார் . காரணம் இவரும் வடக்கே இருந்துவந்த ஆச்சாரமுள்ளவர்கள் என்று சொல்லக்கூடிய ஆரியக் கூட்டத்திலிருந்து வந்தவர் ஆவார் . அடிகளோ எவரையும் வேற்றுமை பாராட்டாது ஆன்ம நேயத்தோடு வாழ்கின்ற கொள்கையை பின்பற்றுபவர்கள் ஆதலால் சபாபதியிடமும் அன்புள்ளம் கொண்டவராகவே தன்னுடன் இணைத்துக்

கொண்டார்கள் . 1868-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள் சன்மார்க்க சங்க அன்பர்கள் சத்திய தருமச்சாலைக்கு பலரும் பலவிதமான நன்கொடைகள் அளித்தார்கள் . இப்பொருட்கள் எல்லாம் வரிசையாக யார் என்ன கொடுத்தார்கள் என்றவிபரம் வெளியிடப்பட்டது . இப்பட்டியலில் சென்னையைச் சேர்ந்த அடிகளின் அன்பர் இறுக்கம் இரத்தினம் என்பார் ஒரு ஆற்காடு ஜோடு ஒன்றை அளித்தார்கள் . அடிகள் காலில் காலணி அணியும் பழக்கம் உள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள் . அதே சமயம் காரணப்பட்டு கந்தசாமி என்னும் அன்பர் சந்தனமரத்தில் ஒரு பாதுகை செய்து அடிகளுக்கு கொடுத்து காலில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள அடிகள் மறுத்துவிட்டார்கள் . வருத்தமுற்ற காரணப்பட்டு கந்தசாமி மீண்டும் அடிகளிடம் விண்ணப்பிக்க , ஒரே ஒரு நாள் சில நாழிகை நேரம் மட்டும் காலில் போட்டுக்கொண்டு திருப்பிக்கொடுத்து விட்டார்கள் . இந்த சந்தனத்தால் ஆன பாதுகை கொடுத்த காரணப்பட்டார் என்று அழைக்கப்படும் கந்தசாமி என்பவரே அடிகள் காலத்தில் அடிகளுக்கு நெருக்கமானவராகவும் அடிகளின் அற்புத செயல்களையும் அனுபவ ஞானங்களையும் கேட்டு தெளிவு பெற்றவர் ஆவார்கள். இன்று சன்மார்க்க உலகில் பலர் அடிகளின் உண்மை அனுபவ நூலினைப் பெருவதற்கு இவரே பெரும் பேருதவியாக இருந்தவர்கள் . இவர் அடிகளுக்கு கொடுத்த சந்தனத்தால் ஆன பாதுகை காரணப்பட்டில் உள்ள இவருடைய ஜீவ சமாதியில் அன்பர்கள் பார்வைக்கும் வழிபாட்டிற்கும் வைக்கப்பட்டுள்ளது . காரணம் அடிகள் ஒரே ஒரு நாள் காலில் அணிந்து கொண்ட காரணத்தால் இன்று பலராலும் வணங்கக்கூடிய நிலையில் உள்ளது. இக்காலத்தில்தான் தமிழ் மண்ணின் நடு நாடு என்று அழைக்கப்படும் தற்கால விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்பட்டு என்னும் சிற்றூரில் அடிகளின் பெயரைத் தாங்கிய இராமலிங்கம் என்னும் இயற்பெயர் கொண்ட ஒரு அருளனுபவம் பெற்ற யோகியானவர் தவநெறியில் செல்லுவதற்காக தற்கால உளுந்தூர்பேட்டை என்ற ஊரில் மேற்பகுதியில் திருநறுங்குன்றம் என்ற ஊரில் சென்று ஒரு குன்றைத் தேர்ந்தெடுத்து தனது தவ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள் . இப்போது அந்தத் திருநறுங்குன்றம் என்ற பெயர் வழக்கில் மாறி திரு நறுங் கொண்டையாக அழைக்கப்பட்டு தற்சமயம் தின்ரங்கோட்டை என்று அழைக்கப்படுகின்றது . இக்குன்றில் ஒரு இடத்தில் அமர்ந்து தவ வாழ்க்கையில் ஈடுபெட்ட கல்பட்டு ஐயா என்பார் பகல் பொழுது மட்டும் ஊருக்குள் சென்று ஒரு வேளை உணவு உண்டுவிட்டு வருவார்கள் . அதே சமயம் தனக்கு ஒரு நல்ல அனுபவ ஞான ஆசிரியர் கிடைத்தால் உயர் நிலை அடையலாம் என்ற தீவிரதர எண்ணத்துடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள் . ஒரு நாள் கல்பட்டு ஐயா தனது சிந்தனையில் தோன்றிய எண்ணத்தை பலபேர் முன்னிலையில் இன்ன மாதம், இன்ன நாள், இத்தனை மணிக்கு என்னை ஆட்கொள்ள எனக்கு ஒரு ஞான ஆசிரியர், குருநாதர் வருவார் என்று திருவாய் மலர்ந்தார்கள் . உடன் இருந்த பல பேரும் அதை கேட்டு வியந்தார்கள் . அந்த நாளை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தார்கள் . அந்த நாளும் வந்தது . கல்பட்டு ஐயா தெரிவித்த அதே நாளில் அந்த அற்புதம் நடந்தது.

அடிகளின் திருமலரடிகள் திருநறுங்குன்றத்தின் பகுதிகளில் பதியலாயின . எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இன்புறும் அடிகளின் **பேரருள்** கண்கள் கல்பட்டு ஐயாவின் தவக்குடிலின் மேல் பதிந்திடலாயின. இரக்கத்தின் உருவான குருநாதன் வரவை எதிபார்த்திருந்த கல்பட்டு ஐயாவும் பலரும் தாங்கள் நினைத்த அதே நேரத்தில் அக்குடிலில் அடிகள் நுழைந்ததை எண்ணி மனம் உருகிப்போனார்கள் . அடிகளின் **அருள்கண்களில்** அருளொளியைக் கண்டு அடியற்ற மரம் போல் சாய்ந்திட்டார் கல்ப்பட்டு ஐயா அவர்கள் . தம் கண்ணீரால் அடிகளின் பாதங்களை அருச்சித்தார், அழுதார், விம்மினார். அடிகளின் தெய்வத்திருக்கைகள் கல்பட்டு ஐயாவை பற்றித் தூக்கி அணைத்துக்கொண்டது . நான் பண்ணிய பூசை பலித்தது, பாவியேன் தங்களை பணிகின்றேன், எண்ணியபடியே என்னை ஆட்கொண்டு அழைத்து செல்லுங்கள் என்று வேண்டி வணங்கினார் கல்பட்டு ஐயா அவர்கள் . அடிகளோ நாம் உத்தரவு தரும் போது தாங்கள் வரலாம் என்று திருவாய் மலர்ந்தருளி தருமச் சாலைக்குத் திரும்பி விட்டார்கள். அச்சமயம் அடிகளுடன் தொழுவூர் வேலாயுதனார், இறுக்கம்

இரத்தினம் என்பார், காரணப்பட்டு கந்தசாமி , கருங்குழி புருசோத்தமனார் போன்றவர்கள் உடனிருந்தும் காரணப்பட்டு கந்தசாமி என்பவரே வெகு தீவிரதர பக்குவத்தில் இருந்தார்கள். மெய்ஞான தேசிகரான அடிகளுக்கு தொண்டு செய்து அவர்களையே வழிபடு கடவுளாகக் கொண்டு வாழ்நாளெல்லாம் திருவருட்பாவில் தோய்ந்த காரணப்பட்டு கந்தசாமிக்கு அடிகள் முதன்முதலாக ஞானோபதேசம் செய்துவைத்தார்கள் . அடுத்தபடியாக அடிகளின் கடைக்கண் பார்வை தன்னையே எண்ணிக்கொண்டிருக்கும் தமது அன்பராகிய கல்பட்டு ஐயாவை நோக்கியது . அடிகள் நினைக்கவும் கல்பட்டு ஐயாவின் கால்கள் திருநறுங்குன்றத்திலிருந்து கருங்குழி நோக்கி நடந்தன . காலம் கனிய காத்துக்கிடந்த கல்பட்டு ஐயா ஞானப்பயிர் வளர்க்கும் ஞான சேவடிகளுக்கு ஈனமில்லாத பணி செய்திடும் திடத்தோடு கருங்குழி வந்தடைந்தார்கள் . அடிகளின் பெருங்கருணை திருமலரடிகளை கண்டு தொழுது அழுது மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த கல்பட்டு ஐயாவுக்கு மற்றும் ஒரு உத்தரவு வந்தது . ஆறு மாத காலம் சிதம்பரத்திலிருந்து பின் நம்மை வந்தடையுங்கள் என்று கட்டளையிட்டார்கள் அடிகள்.

**உ**ருவ சித்தி அல்லாது அருவ சித்தி இல்லை என்று உணர்ந்தவர் அடிகள் என்பதால் ஆறு மாத காலம் சென்று மீண்டும் கல்பட்டு ஐயாவை தருமச்சாலைக்கு அழைத்துக்கொண்டு சாலைக்கு கிழக்குப் பாகம் கிணற்றுக்கு அருகில் ஒரு ஓலைக் குடில் அமைத்து தங்கவைத்தார்கள் . தங்கவைத்த அன்றே கல்பட்டு ஐயாவுக்கு ஞானோபதேசம் செய்துவைத்தார்கள். ஒரு நாள் இரு நாள் அல்ல பல மாதங்கள் அக்குடிலை விட்டு அகலாது ஞானோபதேச நெறியிலேயே திளைத்திருந்தனர் கல்பட்டு ஐயா அவர்கள் . அது சமயம் அடிகள் , சுற்றி இருந்தவர்களிடம் அவருக்கு யாரும் இடையூறு செய்யாமலும் , தொல்லை கொடுக்காமலும் இருக்கும்படி கட்டளையிட்டு எழுந்து வரும்வரை பொருத்திருங்கள் என்று கட்டளையிட்டார்கள். தன்னை மறந்து பரவச நிலை எய்தினார் கல்பட்டார்.

**த**ருமச்சாலை , பிணிதீர்க்கும் மருந்தகம் ; பசிப்பிணி என்று ஒரு புறம் . அறியாமைப் பிணி மற்றொருபுறம் ; வருவார் வகை அறிந்து மருந்தளித்தார்கள் அடிகள். பசிப்பிணிக்கு ஆவண செய்தார்கள் , மற்றும் அறிவுப்பசியையும் கவனித்தார்கள் . அன்பர்கள் தரம் அறிந்து போதனை செய்தார்கள் . இத்தருணத்தில் தான் கல்பட்டார் தம் குடிலில் அமர்ந்திருக்கும் சமயம் நீ பெற்ற ஞான உபதேசம் யாரிடமிருந்து பெற்றாய் தெரியுமா என்ற குரல் ஒருபுறமிருந்து கேட்டது . திகைத்துப்போனார் கல்பட்டார் . சிறிது நேரம் கழித்து வள்ளல் இராமலிங்க சாமியிடமிருந்து பெற்றாய், அவருக்கு நீ மாணாக்கன் மட்டுமல்ல பிள்ளையும் ஆவாய் என்று மறுபுறம் ஒரு குரல் வெளிப்பட்டது . அன்று முதல் கல்பட்டு ஐயாவுக்கு தந்தையாக தாயாக குருவாக கடவுளாக நம் அடிகள் ஆனதால் வள்ளலார் என்று போற்றப்பட்டார்கள். நாமும் இனிமேல் வள்ளல் என்றே கூறுவோம். இதற்கு அடுத்தே தொழுவூரார் நம் இராமலிங்கசாமிக்கு அருட்பிரகாச வள்ளல் என்று பெயர் வைத்தார்கள். ஆக கல்பட்டு ஐயாவால் வள்ளலார் என்று முதன் முதலில் அழைக்கப்பட்டார்கள் நம் இராமலிங்க சாமிகள் வள்ளலார் போதனை செய்யும் காலங்களில் கல்பட்டாருக்கு தேவையான செய்திகள் வருமாயின் அவரை அழைத்து மெய் அமுதம் ஊட்டி மேன்மைக்கு வழி காட்டுவார்கள். மற்ற நேரங்களில் அன்பர்களின் தகுதிகளுக்கு ஏற்ப பசி , நோய் , பிணி , அறிவு இன்னும் மற்ற மற்ற அருளனுபவங்கள் அனைத்தையும் கைக்கொண்டு வள்ளல் தனிமையிலேயே விளங்கி வந்தார்கள்.

**ஒ**ரு சமயம் நம் ஐயா வள்ளலார் அவர்கள் சாலையில் கருத்து மாமழை பொழிந்து கொண்டிருந்தார்கள். அது சமயம் மழை பெய்தாலும் உழுது வைக்காத நிலத்தில் ஈரம் காக்காது அதைப் போல பக்குவம் அற்றவர்களுக்குச் சொல்வது எல்லாம் வீண் என்று கருதினார்கள் போலும் . அவர்கள் போதனை செய்து கொண்டிருக்கும் சமயத்தில் , இடையில் இதுகாறும் அறிவுறுத்தியும் நூற்றில் ஒருவரேனும் , ஆயிரத்தில் ஒருவரேனும் தேறவில்லையே என்று வருந்தி உரைத்திட்டார்கள். அது கேட்டு அருகில் இருந்த தொழுவூர் வேலாயுதனார் உட்பட அனைவரும் இடித்தபுளி போன்று எந்தவிதமான எழுச்சியும் சலனமும் இன்றி இருந்தார்கள் .

வள்ளல் பெருமானின் பார்வைபட்டு ஞான உபதேசம் பெற்ற கல்பட்டு ஐயா மட்டும் நடுங்கி உடல் படபடத்து ஆற்றொனாத் துயரத்துடன் சோர்ந்து விழுந்திட்டார்கள் . அதைபார்த்த மற்றவர்கள் யாரும் தம்மை அலட்டிக்கொள்ளாமல் ஏன் வீழ்ந்தார் என்று எண்ண முடியாது எந்த உணர்வும் அற்றவர்களாகவே இருந்தார்கள் . வள்ளல் பெருமான் கல்பட்டாரின் மன நிலை அறிந்தவர்கள் அல்லவா ? விரைவாக எழுந்து அவரை தூக்கி ஆசு வாசப்படுத்தி அயர்வினை நீக்கி உணர்ச்சியுறச் செய்து அவர் சுய நினைவு வந்ததும் , உம்மை சொல்லவில்லைங்காணும் என்று ஆறுதல் மொழி பகர்ந்தார்கள் . தலைமை சார்ந்த சாதகர் ஒருவர் தாம் தேறவில்லை என்று உணர்ந்தால் ஆருயிரைக்கூட விட்டுவிடத் தயங்கமாட்டார். அப்படிப்பட்ட தீவிரதர உத்தமப் பக்குவம் கைவரப் பெற்றவராகக் காணப்பட்டார் கல்பட்டார் அவர்கள்.

கல்பட்டார் மாறாமல் ஒளிரும் யோகத்தில் அமர்ந்து திளைத்த காரணத்தால் தாளாத வெப்பம் உடலில் ஏற்பட்டு உடல் முழுவதும் வெந்து புண்ணாகி அது குணம் அடைய நீண்ட நாட்கள் ஆயிற்று . வெந்து புண்ணாகிய சுவடுகள் வெளிப்பட்டதால் பிறர் கண்களுக்கு அது அசிங்கமாக தென்படுமே என்று கல்பட்டார் நினைத்த மாத்திரத்தில் வள்ளல் பெருமான் இருந்துவிட்டுப் போகட்டுங்காணும் அதனால் பாதகம் ஒன்றும் இல்லை என்று அறிவுறுத்தினார்கள். உடலில் தவக்கனல் ஏற்பட்டு வெப்பமானது வெளிப்படும் காலங்களில் கை, கால், விரல்கள் முகம் , மேல்தோல்கள் கூட மாறிப்போனவர்களை இன்றும் சன்மார்க்க கூட்டத்தில் பார்க்க முடிகின்றது.

இந்தத் தருவாயில் கல்பட்டாருக்கு வேளைக்கு உணவு கொடுக்குமாறு கட்டளை இட்டார்கள் . இடையில் வள்ளல் பெருமான் வெளியூர் செல்லும் சமயம் சாலை அன்பரை அழைத்து மறக்காமல் கல்பட்டாருக்கு உணவு கொடுக்குமாறு பணித்தார்கள் . சாலை அன்பர்கள் கல்பட்டாரை மறந்து விட்டனர் . உணவும் கல்பட்டாருக்குச் செல்லவில்லை . உண்ணுகின்றீர்களா என்று கேட்கவும் இல்லை. இப்படியே பல நாட்கள் சென்றுவிட்டது. வெளியூரிலிருந்து வள்ளல் பெருமான் தருமச்சாலைக்குத் திரும்பி கல்பட்டாருக்கு உணவு போயிற்றா என்று வினவினார்கள். எல்லோரும் கல்லாய் சமைந்து விட்டனர். என்னவென்று சொல்லுவார்கள் , வாயடைத்து நின்று விட்டனர். வள்ளல் பெருமானோ பிச்(பைத்தியம்), உணவு கொண்டு வாருங்காணும் என்று உணவை தாமே எடுத்துக்கொண்டு கல்பட்டாரின் குடிலுக்குச் சென்றார்கள். வள்ளல் பெருமான் வருவதைக் கண்ட கல்பட்டார் பதைபதைத்தவராகி உணர்ச்சி வசப்பட்டவராகி , அடியேனை அழைத்தால் அங்கு வரமாட்டேனா ? என்ன காரணம் தாங்கள் எழுந்தருளியதோ என்று ஏங்கி ஆற்றாமையுடன் அவதிப்பட்டுப் பணிந்தார்கள்.

அது கண்ட நம் வள்ளல் பெருமான் அடியார்களுக்குச் சிவ ஞானிகள் தொண்டு செய்வது உண்டுங்காணும் என்று திருவாய் மலர்ந்தருளி கல்பட்டு ஐயாவின் கரங்களில் தாமரை இலையை வைத்து சோற்றை உருட்டி உருட்டி வைக்க கல்பட்டார் வயிறு புடைக்க உண்டார்கள். தேவர்களும் மூவர்களும் ஒரு சிவ ஞானியைக் கண்டு வழிபடுவது அரிதினும் அரிதாக இருக்கையில் வள்ளல் பெருமானைப் போன்று ஒரு சிவ ஞானியின் தொடர்பு யாரோ சிலருக்குத்தான் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதிலும் சிவ ஞானப் பெருஞ்செல்வர் செய்யும் தொண்டினை ஏழைக் கல்பட்டார் ஏற்ற எளிமையை என்னவென்று சொல்ல முடியும். அன்பர்களுக்கு அன்பர்களாகவே நம் வள்ளல் பெருமான் விளங்கியதில் ஆச்சரியம் என்ன இருக்கின்றது.

இக்காலம் தருமச்சாலைக்கு பல ஊர்களிலும் இருந்து வள்ளல் பெருமானைத் தரிசித்து பயன் பெற பலரும் வந்த வண்ணம் இருந்தார்கள். தீராத நோய்கள்வாய்க்கப் பெற்றவர்கள், வினையினால் ஆட்பட்டவர்கள், பண்டிதர்கள், பாமரர்கள், வித்துவான்கள், வசதி படைத்தவர்கள், ஏழை எளியோர்கள் எல்லோரும் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். பெருமானின் கருணையால் பல நன்மைகள் பெற்றுக் கொண்ட வண்ணம் இருந்தார்கள். தருமச்சாலை ஒரு உணவுக் கூடமாகவே விளங்கிவந்தது. சாலைக்கு வள்ளல் பெருமானைக் காண வருபவர்களில் வசதி உள்ளவரும் உண்டு, ஏழை எளியோரும் உண்டு. அவர்களுக்கு எப்படி உதவுவது என்று எண்ணிய

வள்ளல் பெருமான் ஒரு நாள் கல்பட்டு ஐயாவையும் , சமையல் பணிபுரிந்த வேலூர் சண்முகனாரையும் அழைத்து **'ஒன்று உரைப்பேன் ஊன்றிச் செய்யுங்காணும்'** என்று உரைத்து, எவ்வகை ஆதரவும் இல்லாத ஏழையர் முகத்தை இங்குள்ள பலரும் எண்ணிப் பார்ப்பதில்லை. வெள்ளை வேட்டிக் காரர்களுக்கு வேண்டியது கிடைத்து விடும் . ஆதலின் அக்கறை வைத்து ஆதரவற்றவர்கள் பசி நீக்க கூழினை கண்ணும் கருத்துமாக வார்த்துவிடுங்கள்' என்று அறிவுறித்தினார்கள். அது முதல் கொண்டு கல்பட்டு ஐயாவும், சண்முகனாரும் போட்டி போட்டுக்கொண்டு கூழை வார்த்து ஏழையர் வயிற்றில் பற்றி எரியும் நெருப்பான பசியை தவிர்த்து வந்தார்கள்.

**ஆ**க ஏழைகளின் பசியையும் ஆதரவற்றவர்களின் பசியையும் நீக்கும் உத்தமமான பணியை உண்மை அன்பு, உண்மை இரக்கம், உண்மை நம்பிக்கையும் கொண்ட உரிமை தொண்டராம் கல்பட்டு ஐயாவுக்கும் சமையல் காரார் சண்முகம் பிள்ளைக்குமே கொடுத்து அருளினார்கள். கல்பட்டாரின் முன்னிலையில் வள்ளல் பெருமானின் கருணையாலும் இரக்கத்தாலும் வேலூர் சண்முகனார் உணவை அள்ளி அள்ளி வாரிக்கொண்டிருந்தார். தருமச் சாலையின் செயல்பாடுகள் வெளி உலகத்திற்கு தெரியவந்தது. ஒரு சமயம் வள்ளல் பெருமான் தனது அன்பராகிய கல்பட்டாரின் மடியில் தலையை வைத்து படுத்த வண்ணம் ஒரு வண்டியில் பயணம் செய்தார்கள். நம் பெருமானின் **திருமலர் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து** கல்பட்டாரின் தொடையை நனைத்து, பின்னும் வண்டிப் பலகையையும் நனைத்து பின்னும் வண்டி செல்லும் பாதையெல்லாம் நனைந்து போனது. பலமணி நேரம் கண்களில் நீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்ததைப் பார்த்த கல்பட்டார் மனம் ஒருமையில் அடங்குவதும் , பெருமான் மீண்டும் நீர் வடிப்பதும், கல்பட்டார் மனம் அடங்குவதுமாய் பல தடவை நிகழ்ந்து, கல்பட்டார் ஒருமை கலைந்து மனம் கலைந்து , ஒருமை மறந்து, நெஞ்சம் என்ன காரணம் என்று நினைக்கத் தொடங்கி விட்டது.

***அ***வர் நினைவை உணர்ந்திட்ட பெருமான் பிச் நீ நினைப்பது போல் இல்லைங்காணும். உலகமெல்லாம் இப்படி இருக்கிறதேங்காணும் என்று உரைத்திட்டார்கள். உலகமெல்லாம் அருள் நெறியாம் நித்திய மெய்வாழ்வு பெற்று துன்பம் நீங்கி பேரின்ப நிலையில் கலந்து அன்பில் ஒருமையுற்று வரும் நாள் என்னாளோ என்று எண்ணியே வள்ளல் பெருமான் கண்களில் நீரை வடித்திட்டார்கள். இந்தக் கவலை எத்தனை பேருக்கு இருக்கும் என்று எண்ணி எண்ணி அழுந்தினார் கல்பட்டார் அவர்கள். அந்தோ உயிர்களின் துன்பம் எல்லாம் ஓடி இன்பம் எல்லாம் சேரும் நாள் எந்த நாளோ என அயர்ந்து போனார் கல்பட்டு ஐயா அவர்கள். அது கண்ட வள்ளல் பெருமான் தருமச்சாலையின் முழு நேரப்பணியையும் கல்பட்டாரின் மேற்பார்வையிலேயே விட்டுவிட்டார்கள்.

***வ***ள்ளல் பெருமான் சீர்காழி கண்ணுடைய வள்ளல் எழுதிய ஒழுவில் ஒடுக்கம் என்னும் வேதாந்த சித்தாந்த சமரச நெறி காட்டும் ஞான நூலுக்கு விளக்கம் எழுதியவர்கள். ஆடூர் சபாபதி என்பார் , அந்நூலின் பாக்களை ஓதிக் கொண்டிருந்தார்கள் . அது சமயம் அவ் வழியே வந்த வள்ளல் பெருமான் சபாபதி படிப்பதைக் கண்டு நின்று என்ன புத்தகம் என்று வினவினார்கள். அதற்கு சபாபதி எழுந்து நின்று ஒழுவில் ஒடுக்கம் சாமி என்று பதில் அளித்தார் . இந்தப் புத்தகத்தை நெருப்பில் போட்டுக் கொளுத்துங்காணும் என்று சொல்லிக்கொண்டே வள்ளல் பெருமான் சென்று விட்டார்கள்.

**ச**பாபதியார் நெஞ்சம் ஆட்டம் கண்டு இதை பதிப்பித்த வள்ளல் பெருமானே இப்படிச் சொல்லுகின்றார்களே ! காரணம் எதுவாக இருக்கும் என்று தலையை பிய்த்துக்கொண்டு எண்ணிப்பார்த்தும் ஏதும் விளங்கவில்லை. உடனே கல்பட்டு ஐயாவின் நினைவு வந்து ஓடிப்போய் வள்ளல் பெருமான் கூறியதைச் சொல்ல கல்பட்டு ஐயா அவர்கள் நீர் அப்புத்தகத்தை தொடவே அருகதையற்றவர் என்ற உண்மையை விளக்கினார். அது கேட்ட சபாபதி என்பார் தாழ்மையான உணர்வுகளுடன் அவ்விடத்தை விட்டு முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்து சென்றார். இந்த சபாபதி என்பவரே வள்ளல் பெருமான் அமைத்த ஞான சபையில் பின்னாளில் ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் என்று அழைக்கப்பெற்று பெரும் சர்ச்சைகளை உருவாக்கியவர் ஆவார்.

இதே சமயம் ஆசாரம் உள்ளவர்கள் , அந்தணர்கள், ஆதீனகர்த்தர்கள், மதவாதிகள், சமயவாதிகள் அனைவரும் வள்ளல் பெருமானின் மிதமிஞ்சிய அருள் அனுபவம், அருள் அற்புதம், தருமச்சாலை பசித்தோர் பிணி, நோய் தீர்க்கும் மருத்துவப்பணி , இலக்கணம் இலக்கியம் நிறைந்த தமிழ்த் தொண்டு, சித்தர் பெருமக்களின் அனுபவ நிலை அறிந்து ஞான உபதேசம் செய்தல் என்ற பலதரப்பட்ட வகையிலும் தேர்ந்தவராக காணப்பட்டதால் மிகுந்த பொறாமை கொண்டனர். அக்காலத்தில் உயர் சாதிக்காரர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட நம் தமிழ் மக்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று பிற்படுத்தப்பட்டவர்களாலும் துன்புறுத்தப்பட்டனர். அதாவது நம் கை விரலை எடுத்து நம் கண்ணையே குத்திக்கொள்கின்ற கேவலமான நிலைக்கு நம்மை பக்தி என்ற பெயராலும் கடவுள் செயல் என்ற பெயரிலும் அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள் உயர் சாதி இந்துக்கள் என்ற வேதியர்கள்.

இப்படிப்பட்ட அறியாமையிலேயே வாழ்ந்து வந்த பிற்படுத்தப்பட்ட , தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களை உயர் சாதிக் காரர்களாகிய வேதியர்கள் ஆதீன கர்த்தர்கள் , மடாதிபதிகள் அனைவரும் திட்டமிட்டு வள்ளல் பெருமான் , செத்துப் போனவர்களை எல்லாம் உயிருடன் எழுப்பிக் கொடுக்கின்றார்கள் என்ற ஒரு பொய்யான தகவலை பரப்பினார்கள். அது கண்ட சாமானிய அறியாமையில் வாழ்கின்ற மக்கள் இறந்து போன தம் மக்கள் , ஆடு , மாடு, கோழி போன்றவைகளை யெல்லாம் வடலூருக்கு வள்ளல் பெருமான் முன் கொண்டு வந்து வைத்து இறந்த எம்மக்களை எழுப்பித்தாரும் என்று முறையிட்டார்கள். ஆடு, மாடு, பறவைகளையும் எழுப்பித் தரும்படியும் வேண்டினார்கள். உடன் வள்ளல் பெருமான் அது நேரம் அம்மக்களுக்கு ஆறுதல் சொல்லி ,செத்தார் எழுவார் எப்படி எனில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் முடியும் என்றும் ,வீண் வதந்தியை நம்பாதீர்கள் என்று ஒரு விளக்கப் பத்திரிக்கையையும் வெளியிட்டார்கள். இப்படி ஒரு பெரிய வதந்தியை ஆசாரமுள்ளவர்களும், சமயவாதிகளும் ,மதவாதிகளும் வள்ளல் பெருமான் மீது அள்ளி வீசினார்கள்.

பசியினால் உணவில்லாமலும், நீரில்லாமலும் தத்துவங்களெல்லாம் சோர்ந்து மயங்கி ஜீவன் வெளியேறி விடுமானால் ஒரு மனிதன் செத்துப்போய்விடுவான். அவ்வாறு போகாது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் கருணையின் வடிவமாக வள்ளல் பெருமான் உள்ளத்தில் நடம் புரிந்து அருள் உணவாக பசியில் வருந்து கின்றவர்களுக்கு தருமச்சாலையின் மூலமாக உணவு கொடுத்து ஜீவன் வெளியேறாது காப்பாற்றுவதையே செத்தார் எழுவார் என்றும் அருட்கருணை பார்வையான உணர்வாகி விளங்குகின்ற அருட்பெஞ்ஜோதி ஆண்டவரால் முடியும் என்று சொன்னதை சமானிய மக்கள் புரிந்து கொள்ளவில்லை. இன்றும் தமிழ் மண்ணில் செத்துப் போனவர்களை, ஆடு, மாடு, கோழி, எலி, பூனை போன்றவைகளை எல்லாம் வள்ளல் பெருமானின் அருள் பெற்றவர்கள் என்றும், அருள் அனுபவம் பெற்றவர்கள் என்றும் சிலர் சொல்லிக்கொண்டும், சன்மார்க்க சங்கங்களில் பேசிக் கொண்டும் உயிரோடு எழுப்பினேன் என்று பிதற்றிக் கொண்டும் வயிறு வளர்த்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

உலக மக்களை நல் வழிப்படுத்தி உண்மை நெறியில் வாழ வைக்கவேண்டும் என்று விரும்பிய வள்ளல் பெருமானுக்கு அவ்வளவு தொல்லைகள் கொடுத்தார்கள் இந்தச் சமயவாதிகள். இதற்குள் வள்ளல் பெருமான் எழுதி அன்பர்களால் வெளியிடப்பட்ட முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய திருவருட்பா பகுதி நம் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்று விட்டது . இந்த நான்கு திருமுறைகளிலும் வள்ளல் பெருமான் அறுவகை சமயத்தின் தலைவர்களையும் , தலைவிகளையும் , சாரங்களையும், தேவாரம் இயற்றிய மூவர்களையும் , அறுபத்து மூன்று நாயன்மார்களையும் , மாணிக்கவாசகரையும் , சித்தர் பெருமக்களையும் , ஏன் அரிச்சந்திரனையும் கூட பாடியிருக்கின்றார்கள் . ஆக இந்த நான்கு திருமுறைக்கு திருவருட்பா என்று பெயரிட்டதை இந்த சைவர்களால் பொருத்துக்கொள்ள முடியவில்லை. திருமுறை, திருஅருட்பா என்ற சொல்லை அவர்களால் ஏற்றுக்கொள்ள மனம் தரவில்லை . காரணம் இதுநாள் வரை சைவத்திருமுறை பன்னிரெண்டை வைத்துக்கொண்டு வயிறு வளர்த்த சமயவாதிகள் , எங்கே தாங்கள் இதுகாறும் அறியாத

மக்களுக்குச் சொல்லிவந்த சொர்க்கம் , நரகம் , கைலாயம் , பீடம் , மடம் , அந்தஸ்து எல்லாமே போயிவிடுமோ என்று பதறித்துடித்துப் போனார்கள் . எப்படி இருந்தாலும் வள்ளல் பெருமான் தமிழ் மண்ணில் தோன்றியவரல்லவா ! ஆகையால் இனிமேலும் பொருத்துக்கொண்டு இருக்கமுடியாது என்று நேருக்கு நேர் நின்று பேசமுடியாமல் வஞ்சகமாக புறமுதுகில் குத்திவிடவேண்டும் என்று ஒன்று கூடி திட்டத்தை வகுத்தார்கள் . திட்டம் நிறைவேற்றப்பட்டது . எல்லாம் தெரிந்த வள்ளல் பெருமான் அனைத்தையும் பார்த்துக்கொண்டு பொறுமையுடன் இருந்துவந்தார்கள் .

இந்திய நாட்டில் ஆரியர்கள் நுழைந்தவுடன் இங்குள்ள வசதிபடைத்தவர்களை தங்கள் பக்கம் சேர்த்து ஆரியர்களாக ஆக்கிக்கொண்டார்கள் . வெள்ளை நிறமும் பூனைக் கண்களையும் கொண்ட அவர்களை இந்நாட்டு மக்கள் கண்டு மயங்கிப் போனார்கள் . இதைக்கண்ட சித்தார்த்தன் என்னும் இந்நாட்டு இளவரசர் தன் அரச போகங்களைத் துறந்து கௌதம புத்தர் என்ற பெயருடன் ஏழை எளிய மக்களான ஆரியர்களால் புறக்கணிக்கப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து புத்த சமயம் என்ற ஒரு சமயத்தை ஏற்படுத்தினார் . இச் சமயத்தின் கொள்கைகள் அன்பும் இரக்கமும் ஆகும் . இதே காலத்தில் தமிழ் மண்ணின் கீழை நாடாகிய இலங்கையில் உள்ள கண்டியை ஆண்ட மன்னர்கள் நம் தமிழ் மரபைச் சார்ந்த தமிழர்களே ஆண்டார்கள் . சமணர்கள் தமிழ் மண்ணில் இருந்து வெளியேறும் சமயம் இலங்கையிலும் இதுபோன்ற நிலை ஏற்பட்டது . இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களும் மக்களும் பௌத்தர்களுக்கு கண்டியை விட்டு விட்டு இலங்கையின் வடபகுதிக்குச் சிலரும் இந்தோனேசியா , மலாக்கா (மலேசியா) , தாய்லாந்து , பர்மா போன்ற பகுதிகளுக்கு பலரும் இடம் பெயர்ந்து போனார்கள் . இலங்கையை ஆண்ட இராஜசிங்கன் என்ற மன்னன் வரலாறு இதைத் தெள்ளெனப் புலப்படுத்துகின்றது .

இலங்கையின் வடக்குப் பகுதியான ஈழநாட்டின் தீவுக் கூட்டங்களிலே சென்று வசித்த தமிழர்கள் , செல்வம் சேர்ப்பதிலேயும் உலகக் கல்வி கற்பதிலேயும் நாட்டம் கொண்டு அக்காலத்தில் தேவாரம் , பன்னிரு திருமுறை போன்ற சைவ நெறியில் பெரும் விளக்கம் பெற்றிருந்தார்கள் . பெரும்பாலும் சைவர்களாகிய இவர்கள் வாழுகின்ற பகுதியானது கடல் தீவும் காடுகளும் சேர்ந்த பகுதியான காரணத்தால் இவர்கள் மச்ச மாமிசப் பழக்கங்களையே உணவாகக் கைக்கொண்டிருந்தார்கள். தமிழ் ஆர்வமும் தமிழ் அறிவும் நிரம்ப விளங்கிக்கொண்ட இச்சைவர்கள் கற்ற கல்வியினால் வாதம் புரிவதிலும் வழக்குகள் புரிவதிலும் வித்துவத் தன்மையிலும் வெற்றி பெற்ற வண்ணம் இருந்தார்கள். அதாவது ஈழ நாட்டு புலவர்களுக்கு அக்காலத்தில் ஈடு இணை இல்லாத நிலை இருந்தது . இந்த ஈழ நாடாகிய இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம் நாகர்கோயில் என்னும் இடத்தில் தோன்றியவர் ஆறுமுகம் என்னும் பெரியார் . இவர் இல்லறத்தில் ஈடு படாமல் சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் வாழ்க்கையை அற்பணித்துக் கொண்டவர். யாழ்பாணத்து தமிழ் அறிஞர்களுள் சிறப்பிடம் பெற்றவர் . சென்னையில் சில காலம் தங்கி சைவப் பாடசாலைகளை ஏற்படுத்தி பன்னிரு திருமுறை போன்ற பகுதிகளை அச்சிட்டு அதற்கென தனியாக ஒரு அச்சகமும் நடத்தி மாணவர்களுக்கு ஏற்ற பாடங்களை உரை நடையில் பல தொகுதிகளாக வெளியிட்டு , பல உயர்ந்த சமய நூல்களை எழுதியும் வெளியிட்டும் சைவ சமயத்திற்கு பெரும் தொண்டு செய்து , நாவலர் என்றும் தமிழ் உரை நடையின் தந்தை என்றும் போற்றப்பட்டவர் .

இவருடைய சைவ சமயத் தொண்டைக் கண்ட ஆதீன கர்த்தர்களும் சமயவாதிகளும் இலங்கையிலிருந்து தமிழ் மண்ணிற்கு வந்து செய்யும் சைவத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் கண்டு பொறாமை அடைந்தனர் . இவர்களின் திட்டம் செயல்படத் தொடங்கியது . ஒரு தமிழனைக் கொண்டே தமிழனை ஒழிக்க வேண்டும் என்று திட்டமிட்டு இவர்களால் செய்யமுடியாத சைவத் தொண்டை செய்த நாவலர் ஆறுமுகம் என்பவருக்கும் மக்களின் அறியாமையைப் போக்கி அருள் அனுபவங்களைப் புகட்டிய வள்ளல் பெருமானுக்கும் இடையே பகையை ஏற்படுத்தினால் நாம் என்றும் வயிறு வளர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி இருவருக்கும் கருத்து மோதல்களை உருவாக்க வேண்டும் என்று எண்ணி தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள் . அக்காலத்தில் நடு நாடு

என்று சொல்லப்படும் விழுப்புரம் , புதுச்சேரி பகுதிகளில் செங்குந்தர் என்ற மரபினர் வாழ்ந்து வந்தார்கள் . இவர்கள் ஆதிக்கம் சென்னை முதல் தொண்டை மண்டலம் வரை பரவி இருந்தது . நம் முன்னோர்கள் , ஊர் கெட ஒரு நூலும், காடு கெட ஒரு ஆடும் , ஆறு கெட ஒரு நாணலும் , இம்மூன்றும் கெட ஒரு முதலியும் போதும் என்று பழமொழி சொல்லி இருக்கின்றார்கள் . இம்மரபிலே வந்த தியாகேச முதலியார் என்பார் மாமண்டூர் என்னும் ஊரில் வித்துவானாகவும் பொருள் உள்ளவராகவும் வாழ்ந்தர் . இவர் சமயத்திலும் , சைவத் திருமுறைகளிலும் ஆழ்ந்த பற்றுடையவர் . அதே சமயம் சமயத்தொண்டு செய்த இலங்கை யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் நெருக்கமான அன்புக்கும் உரியவராக இருந்தார் .

**ஆ**க சமயவாதிகள் அனைவரும் எதிபார்த்த தருணம் நிறைவேற நாள் குறிக்கப்பட்டது . தமிழனே தமிழனை முதுகில் குத்திய நாள் அன்று நிறைவேறியது . அதாவது வள்ளல் பெருமான் எழுதி வெளியிட்ட முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய அருட்பாக்களை , அருட்பா அல்ல என்றும் அதை திருமுறை என்று சொல்லக்கூடாது என்றும் வள்ளல் பெருமானை அருட்பிரகாச வள்ளல் என்று அழைக்கக்கூடாது என்றும் சமயவாதிகள் எல்லாம் ஆறுமுக நாவலரிடம் சென்று அவரைப் பலிகடாவாக்கி , போலி அருட்பா மறுப்பு நூல் என்னும் நூலை எழுதச் சொல்லி மாமண்டூர் தியாகேச முதலியார் பெயரால் டிசம்பர் 1868 ம் வருடம் பதிப்பித்து வெளியிட்டார்கள். இது கண்ட வள்ளல் பெருமான் எவ்விதமான சலனமும் இன்றி சும்மாயிருந்தார்கள் . அவர்களின் எண்ணம் எல்லாம் இந்த உலக மக்கள் அறியாமையினால் இது போன்ற சமயவாதிகளுக்கு அடிமையாகி இருக்கின்றார்களே என்று சிந்தனையில் உலக **உயிர்கள் என்று ஒருமையில் உயர்ந்து ஆன்ம நேய சம்பந்த தயா விசாரத்தால் மகிழ்வுறுமோ ?** அந்த நாள் என்று வருமோ என்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்கள் .

***அ***து நேரம் நம் கல்பட்டு ஐயாவும் தருமச்சாலை அன்பர் அமாவாசை பரதேசி என்ற சாதுவும் சமையல் காரர் வேலூர் சண்முகனார் என்பாரும் , சாலை பணியை நடத்திக் கொண்டிருந்தார்காள் . இருந்தும் என்ன காரணத்தால் தருமச்சாலையில் இது வரை யாரும் செய்யாத ஒரு காரியமான தினமும் இரண்டு வேளை பசித்தோர்க்கு சோறிடும் வேலையை வள்ளல் பெருமான் செய்தார்கள் என்ற கேள்வியானது பலருக்கு எழுந்தவண்ணம் இருந்தது . மனித தேகமே கடவுள் குடியிருக்கும் ஆலயம் என்பது அனைத்து மதங்களும் சமயங்ளும் கூறிக்கொண்டிருந்தாலும் வள்ளல் பெருமான் காலத்தில் வாழ்ந்த சமயத் தலைவர்கள் மடாதி பதிகள் எல்லாம் தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் தனக்கு உரியவர்களையும் ஆதரித்து , தான் மட்டும் சிவ வேடம் இட்டு எட்டு அடி நீளமான வாழை இலையில் பதினாறு வகையான பதார்த்தங்களை சுவைத்து உண்டார்களே அன்றி பசியால் வாடும் இல்லாத மக்களுக்கு சோறு போடவில்லை. இல்லாதவனுக்கும் ஏழை எளியோர்க்கும் அன்னமிட்டால் அவன் வினை நம்மை பிடித்துக்கொள்ளும் என்று கதவை தாழிட்டுக்கொண்டு உண்டு கொழுத்தார்கள் . இதையே தங்களைச் சார்ந்தவர்களுக்கும் சொல்லி அவர்களையும் தரும சிந்தனையிலிருந்து விலக்கி தம்மையே துதிபாடும் அடிமைகளாக ஆக்கி வைத்திருந்தனர் . அதாவது வயலில் உழைப்பவன் பட்டினி கிடக்க அவன் உருவாக்கிய தானியக்குவியலை உண்டவன் உறங்கி விழித்து உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான். இவை அனைத்தும் கடவுள் பெயரால் சமயவாதிகள் செய்த அநியாயங்கள் ஆகும்.

**வ**ள்ளல் பெருமான் அமைத்த தருமச்சாலையில் ஆரம்ப நாள் முதல் தொடர்ந்து மூன்று நாள் வரை ஒரு நாளைக்கு பதினாயிரம் பேர் உணவு உண்டார்கள் . இவர்கள் அனைவரும் வள்ளல் பெருமான் மேல் விசுவாசம் உடையவர்களாகவும் பற்று உடையவர்களாகவும் தங்களைக் காட்டிக்கொண்ட வெள்ளை வேட்டிக் காரர்கள் ஆவார்கள் . இதே நிலை தொடர்ந்து நீடிக்குமானால் பசித்தவர்களுக்கு சோறு போட முடியாது என்று கருதிய வள்ளல் பெருமான் ஜீவ காருண்ய ஒழுக்கம் என்னும் முதல் பாகத்தை அன்றே எழுதி வெளியிட்டார்கள் . ஏழை இல்லாதவர்கள், வறியவர்கள், நோயாளிகள் , முதியோர்கள் வழி நடை செல்பவர்கள் எம்மதம் எச்சமயம் எச்சாதியினர் ஆயினும் பசியால் வருந்தும் சமயம் சோறு உண்டு பசியை நீக்கிக் கொள்ளவேண்டும் என்றும் இவ் வுலகில் பசி என்ற நோயே மிகக்

கடுமையானது , கொடுமையானது என்று விளக்கம் செய்வித்தது மட்டுமின்றி தினமும் ***பசித்தோர் முகம் பார்த்து பசித்தோருடைய பசியை நீக்குவது தான் கடவுள் வழிபாடு*** என்று வள்ளல் பெருமான் இவ்வுலகுக்கு பெருமுழக்கம் செய்தார்கள் . அன்றைய தினம் தருமச்சாலை அன்பர்களுக்கு தருமச்சாலை தொடங்கியதன் நோக்கம் புரிந்துவிட்டது . அன்று புகைந்த நெருப்பு இன்று வரை புகைந்து கொண்டே இருக்கிறது.

**ஜீ**வ காருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்றும் உயிர்களுக்கு செய்யும் தொண்டே கடவுளுக்கு செய்யும் தொண்டு என்று முழக்க மிட்ட வள்ளல் பெருமானை தில்லையில் உள்ளவர்களும் ஆதீனத்தை சேர்ந்த சமயவாதிகளும் தருமச்சாலை சோறிடும் பணியை தடுத்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தார்கள் . தருமச்சாலை என்று வள்ளல் பெருமான் பெயர் வைத்தது கண்டு மனம் குலைந்து போனார்கள் .

**வ**ள்ளல் பெருமானுக்கு நேர் எதிரியாக யாழ்ப்பாணம் ஆறுமுகம் நாவலர் அவர்களை உருவாக்கிய சமயவாதிகள் தங்களின் தீய எண்ணத்தின் படி வள்ளல் பெருமான் பாடலுக்கு விரோதமாக போலி அருட்பா மறுப்பு என்று எழுதி வெளியிடப்பட்ட செய்திகளைக் கண்ட தில்லை வாழ் அந்தணர்கள் பெரும் களிப்பில் இருந்த சமயம் ஆறுமுக நாவலர் 1869 ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் நாள் சென்னையில் இருந்து நடராஜபெருமானை தரிசிக்க சிதம்பரம் வந்தார்கள் . நடராஜப் பெருமானைத் தொட்டுத் தீண்டி தினசரி வழிபாடு செய்யும் தீட்சிதர்களை நோக்கி ஆறுமுக நாவலர் நடராஜப் பெருமானை தொடும் நீங்கள் சிவ தீட்சை பெற்றது உண்டா என்று வினவ அவர்கள் மறுக்க , உங்களுக்கு நடராஜப் பெருமானை தொட்டு பூஜை மற்றும் வழிபாடு செய்யும் தகுதி இல்லை என்று சொல்ல தீட்சிதர்களுக்கும் ஆறுமுக நாவலரவர்களுக்கும் பெரும் சண்டை முற்றி வாக்குவாதம் நடந்து முடிவில் ஆறுமுக நாவலர் அவ்விடத்தை விட்டு அகற்றப்பட்டார் . வள்ளல் பெருமான் மீது தவறான எண்ணம் கொண்டிருந்த தில்லையில் வாழ்ந்த அந்தணர்கள் , ஆறுமுக நாவலரின் செய்கையும் வாக்குவாதமும் தங்களை அவமானப்படுத்தி விட்டதே என்று வருந்தி வள்ளல் பெருமானைக் கொண்டு ஆறுமுக நாவலரையும் ஆறுமுக நாவலரைக் கொண்டு வள்ளல் பெருமானையும் மோத விட்டு தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டார்கள் . ஊர் பேர் எது என்று தெரியாது ஆடு மாடு மேய்த்துகொண்டு வடக்கே இருந்து வந்த ஆரியர்கள் வழி வந்த தீட்சிதர்கள் எப்படிப்பட்ட நரித்தந்திரம் உள்ளவர்கள் என்பதை அறியாத நாவலர் வெகு அகங்காரத்துடன் சிதம்பரத்தில் பல சைவ சமய பாட சாலைகள் அமைத்து சமய வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். அது சமயம் வள்ளல் பெருமான் உடன் இருந்த அன்பர்கள் தொழுவூர் வேலாயுதம் என்பவரைக் கொண்டு ஆறுமுக நாவலர் எழுதிய போலி அருட்பா மறுப்புக்கு விளக்கமாக , போலி அருட்பா மறுப்பின் கண்டனம் (குதர்க்காரணிய நாச மஹா பரசு) என்று வெளியிடச் செய்தார்கள் .இது சமயம் வள்ளல் பெருமான் சிதம்பரத்தில் பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரசங்கம் செய்து கொண்டு இருந்தார்கள்.

**யா**ழ்ப் பாணம் ஆறுமுக நாவலர் எழுதிய கண்டனமான போலி அருட்பா மறுப்பு தமிழகம் எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது . சென்னையிலுள்ள வள்ளல் பெருமான் அன்பரான இறுக்கம் இரத்தினம் என்பவர் 1869 ம் வருடம் மார்ச் மாதம் 31 ம் நாள் (31.3.1869) தருமச் சாலை பணியில் இருக்கும் வேலூர் சண்முகம் என்பவருக்கு ஆறுமுக நாவலரின் செய்கையைப் பற்றி கடிதம் ஒன்றை எழுதி , மிகவும் மன வருத்தப்பட்டு தருமச் சாலை நடை முறைகளை கேட்டிருந்தார்கள் . இதை கேள்வியுற்ற கல்பட்டு சாமிகள் மிகவும் வருத்தமுற்றவராக உணவு கொள்ளாது இது போன்று இச் சமய வாதிகள் செயல் இருக்கின்றதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயம் வள்ளல் பெருமான் அங்கு தோன்றி ஏன் கவலைப் படுகிறீர்கள் எய்தவர் எங்கோ இருக்க அம்பைப் பற்றி நாம் ஏன் கவலைப் படவேண்டும் . நம் சமயவாதிகள் எல்லாம் ஜீவ காருண்யம் என்ற மிகப் பெரிய தயவு என்றால் என்னவென்று தெரியாதவர்கள் . பாவம் உண்மை அறியாதவர்கள் என்று கல்பட்டாரிடம் சொல்லிவிட்டு அன்றே ஜீவ காருண்ய ஒழுக்கத்தின் இரண்டாம் மூன்றாம் பாகங்களை

எழுதி வெளியிட்டார்கள் . ஆக தருமச்சாலைப் பணிகளைப் பற்றியும் , அருட்பா மறுப்புக் கண்டனங்களைப் பற்றியும் இறுக்கம் இரத்தினம் பல கடிதங்களை சாலை பணியாளர் சண்முகம் பிள்ளைக்கு எழுதிக் கொண்டிருந்தார் . வள்ளல் பெருமான் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவர் இறுக்கம் இரத்தினம் என்பவர் ஆவார் . 1869ம் ஆண்டு மே மாதம் கருங்குழியில் இருந்த ஆடூர் சபாபதியார் தருமச் சாலைக்கு வந்து பார்த்து விட்டு பெரும் முனுமுனுப்புடன் வடலூரில் இருந்து கொண்டு தருமச்சாலைக்கு உரியவர் போன்று பெரும் பணிவுடன் இருப்பது போன்று பாவனை செய்து கொண்டு வாழ்ந்து வந்தார் .

ஆடூர் சபாபதியின் நடவடிக்கைகளைக் கண்ட நம் வள்ளல் பெருமான் எந்த விதமான சலனமும் இன்றி சத்திய தருமச் சாலைக்கு வடக்குப் புறம் தங்க இடமும் , கல்பட்டு ஐயாவின் மூலம் உணவுக்கான அரிசி , பருப்பு , காய்கறிகளும் கொடுத்து ஆதரித்து வந்தார்கள் . கருணையே வடிவான நம் வள்ளல் பெருமானால் உருவாக்கப்பட்ட நம் கல்பட்டு சாமியும் ஆடூர் சபாபதிக்கு வேண்டிய அத்துனை வசதிகளையும் செய்து கொடுத்தார்கள் . இதற்குள்ளாக ஆறுமுக நாவலர் அடுத்தடுத்து வள்ளல் பெருமான் எழுதிய அருட்பா திருமுறைக்கு கண்டனங்கள் எழுதிய வண்ணம் இருந்தார் . அந் நாளில் இன்றைய யாழ்ப்பாணம் என்ற ஈழம் சமயக் கல்வியில் சிறந்து விளங்கியது . ஈழ நாட்டு புலவர்கள் கண்டனங்கள் எழுதுவதிலும் வாதம் புரிவதிலும் வல்லவர்கள் . தமிழ் மண்ணில் ஆறுமுக நாவலர் எழுதிய அருட்பா மறுப்புக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலுள்ள புலவர்கள் நிறையக் கண்டனங்களை எழுதி கா.பொ.இரத்தினம் என்பாரைக் கொண்டு இலங்கை பத்திரிக்கையில் வெளியிட்டார்கள் . தமிழனுக்கு தமிழனே எதிரியானது கண்டு அந்தணர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

இந்நாளில் 1869 ம் ஆண்டு ஜூன் மாதம் சிதம்பரத்தில் வள்ளல் பெருமான் பேரம்பல பிரசங்கம் என்ற பெயரில் ஒரு மிகப் பெரிய பிரசங்கம் செய்தார்கள் . அந்நிகழ்ச்சியில் ஆறுமுக நாவலர் ஆட்கள் வள்ளல் பெருமானிடம் சென்று நாவலர் என்ற சொல்லுக்கு விளக்கம் என்ன என்று கேட்டார்கள் . எல்லாம் அறிந்த நம் வள்ளல் பெருமான் , நாவலர் என்றால் நாவன்மை படைத்தவர் என்று ஒரு பொருளும் , நாவலர் என்றால் (நா+அலர்) நாவில்லாதவர் (வாயில்லாதவர்) என்றும் மற்றொரு பொருளும் சொன்னார்கள். இதைக் கேட்ட ஆறுமுக நாவலர் ஆட்கள் உடன் சென்று அவரிடம் உண்மைக்கு மாறாக நா அலர் என்று சொன்னதை நாய் அலர் என்றும் (மிருதுவான மலர் போன்ற நாய் என்றும்) மாற்றி சொல்ல பெரிய கோபத்தை உண்டாக்கி விட்டார்கள் .

உடனே ஆறுமுக நாவலர் தானே தன் கைப்பட சைவதூஷன பரிகாரம், சுப்பிர போதம் , மித்திய வாத நிரசனம், இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் , திராவிடப் பிரகாசிகை , நல்லறிவு சுடர் கொளுத்தல் போன்ற பல பகுதிகளை எழுதி வெளியிட்டார் .

வள்ளல் பெருமான் அன்பர்களோ குதர்கரணிய நாச மகா பரசு , திருவருட்பா தூஷன பரிகாரம் இராமலிங்கம் பிள்ளைப் பாடல் ஆபாச தர்ப்பண நியாய வச்சிரக் குடாரம் , பிரார்த்தனைப் பத்திரிக்கை விஞ்ஞானப் பத்திரிக்கை , பேரம்பல பிரசங்கம் முதலியவைகளை எழுதி வெளியிட்டார்கள். ஏறத்தாழ ஒரு வருட காலம் , வாத பிரதி வாதங்கள் , கண்டன கடிதங்கள் சொற்போர் நடைபெற்றது . இதைக்கண்ட சமயவாதிகளும் ஆதீனங்களும் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள் . இருந்தும் அவர்கள் மனம் அமைதி அடையவில்லை . ஆறுமுக நாவலருக்கு நேரடியாகவே துணை போக வேண்டும் என்று எண்ணி பெரும் திட்டம் ஒன்று வகுத்தார்கள் .

1869 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ம் நாள் வள்ளல் பெருமான் மீது கடலூர் மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் ஆறுமுக நாவலர் வழக்குத் தொடர்ந்தார். வழக்கின் நோக்கம் அருட்பா மருட்பாவைப் பற்றிய வாத பிரதிவாதங்கள் அல்ல . வள்ளல் பெருமான் தன்னை இழிவாக பேசியதாகவும் அதற்காக மான நஷ்ட ஈடு தரவேண்டும் என்பதே வழக்கின் முக்கியமான நோக்கம் . இந்த வழக்கு ஏற்பட காரணமாக இருந்தவை வள்ளல் பெருமான் எழுதிய திருவருட்பாத் திருமுறைகள் ஆகும் . ஒன்று வள்ளல் பெருமான் சார்ந்த அருட்பா அணியினர் , மற்றொன்று

ஆறுமுக நாவலர் சார்ந்த மருட்பா அணியினர் . இவ்வணியில் மிக முக்கியமானவர்கள் திருவாடு துறை மகாசந்நிதானம் சுப்ரமணிய தேசிக சாமிகள் , வேதாரண்ய ஆதீனம் சற்குரு நாத சாமிகளான உதயமூர்த்தி தேசிக சாமிகள் , திருவண்ணாமலை ஆதீனம் சண்முகத் தம்பிரான் சாமிகள், திருவாடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோர்களாவார்கள் .

இத் தமிழ் மண்ணில் ஜீவர்களை நித்திய மெய் வாழ்வில் வாழ்வித்து என்றும் இறவா நிலையைப் பெறும் சாகாக் கல்வியை போதித்துக் கொண்டிருந்த வள்ளல் பெருமானுக்கு நேர் எதிரானவர்கள் இந்த தமிழ் மண்ணில் தவறாக தோன்றியவர்களும் இவர்களுக்கு துணை போன சமயவாதிகளும் அந்தணர்களுமே ஆவார்கள் . இத் தன்மையைக் கண்டு வள்ளல் பெருமான் சிறிதும் கவலை கொள்ள வில்லை ஆனால் வள்ளல் பெருமான் மீது சுமத்தப்பட்ட களங்கங்கள் , வீண் பழிகள் வதந்திகள் வாத பிரதிவாதங்கள் அனைத்தினையும் கண்டு வேதனை உற்ற ஒரு இஸ்லாமியர் , அருளே வடிவான பெரும் கருணை தயாவடிவாக மனித உருவத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் ஒரு உத்தமரை இந்த சமயவாதிகளும் மத வாதிகளும் என்ன பாடு படுத்துகின்றார்கள் என்று வேதனைப் பட்டு வள்ளல் பெருமானுக்கு நாம் பெரும் துணையாக இருக்க வேண்டும் என்று கூறி சென்னையிலிருந்து வடலூர் நோக்கி தருமச் சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

***ஒ***ரு உச்சிப் பொழுது நீண்ட அங்கி, விரிந்து பரந்த மார்பு , வசீகரம் பொருந்திய கண்கள் , தலைப்பாகை , காலில் பாத குரடு , நிமிர்ந்த நடை இத்தனையும் சேர்ந்த நெடிய உருவம் ஒன்று வெகு கம்பீரமாகவும் அதே சமயம் பணிவான சிரத்துடனும் , கனிவான குரலுடனும் இராமலிங்கம் என்று மூன்று முறை வள்ளல் பெருமான் பெயரை திருவாய்மொழிந்தது. தருமச் சாலையிலுள்ள நம் வள்ளல் பெருமான் அன்பர்களிடம் , அனைத்தையும் விட்டு விட்ட ஆன்மா ஒன்று நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்று சொன்னதின் பொருள் விளங்காத அன்பர்கள் வெளியே பார்த்த சமயம் கண்களில் கண்ணீர் ததும்ப வள்ளல் பெருமானும் வந்திருந்தவரும் ஒருவரை ஒருவர் அன்பால் திளைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டுப் போனார்கள் அவரே இஸ்லாமியரான சதாவதானம் செய்குத் தம்பி பாவலர் என்ற உயர்ந்த உத்தம மாமனிதராவார் . இவர் இஸ்லாம் சமயத்தவராதலால் தமிழ் உலகமும் , தமிழ் மக்களும் இவரை கண்டு கொள்ளவே இல்லை . இவர் தமிழ் உலகத்திற்கு பெரும் தொண்டு ஆற்றியவர். இன்று கவனகங்கள் செய்யும் சிலரை நாம் பார்க்கின்றோம் . எட்டு கவனகங்கள் , பத்துக் கவனகங்கள் , பதினாறு கவனகங்கள் செய்பவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள் . படித்ததையும் , பார்த்ததையும்,கேட்டதையும் சொல்லுவது கவனகங்கள் (அவதானம்) என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம் . இது சரியானது அல்ல என்று இவர் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள் . அதாவது நூறு நபர்களை அழைத்து அவர்கள் அனைவரும் ஏதாவது ஒன்றை மூன்று முறை நினைவில் வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அவர்கள் நினைத்ததை அப்படியே சொல்லும் மிகப்பெரிய அருளாற்றல் உள்ளவர் . இது போல நூறு கவனகங்கள் (சதாவதானம்) சொல்லும் வல்லமை உள்ளவர் .

***வ***ள்ளல் பெருமான் மீது வழக்குத் தொடர்ந்தவரையும் அதற்குக் காரணமாக இருந்தவர்களையும் இவர் பல முறை நேரில் சந்தித்து யாது காரணமாக இது போன்று அடாத காரியங்களை செய்கிறீர்கள் என்று கேட்ட சமயமெல்லாம் அவர்கள் , இவருடைய புலமையையும் நாவண்மையையும் கண்டு ஒடி ஒளிந்து கொண்டார்கள் . நேராக ஆறுமுக நாவலரை இவர் நேரில் சந்தித்து திருவருளின் சொரூபம் , ரூபம் , தன்மை என்ன என்று ஒரு கேள்வியைத் தொடுத்தார் . அதற்கு ஆறுமுக நாவலர் பதியாகிய இறைவனை பசுவாகிய உயிர் பாசம் நீங்கிய காலத்து சென்று அடையும் என்று சொன்னார் . அதற்கு ***செய்குத்தம்பிப் பாவலர் , அப்படியாயின் உயிர் இறைவனை அடையும் வரை எதை சார்ந்து இருந்தது*** என்று கேட்க , ஆறுமுக நாவலர் விழி பிதுங்கிப் போனார் . சைவம் என்ற சமயம் சமயங்களுள் மிகவும் உயர்ந்தது . அதை சார்ந்திருக்கின்ற அன்பர்கள் ஒரு போதும் உயர்ந்தவர்கள் அல்லர் என்றும் , சைவம் இருபத்தாறு தத்துவங்ளோடு நின்று விடுகிறது ஆனால் சன்மார்க்கம் தொன்னூற்றாறு

தத்துவங்களுக்கு மேலாகவும் செயல்படுகின்றது என்றும் அதை அடைந்தவர்களே திருவருள் வல்லபம் பெற்ற இராமலிங்க சாமியாகிய வள்ளல் பெருமான் ஆவார்கள் என்று எடுத்துரைத்தார்கள் . இதைக் கேட்ட ஆறுமுக நாவலர்களின் சார்புடையவர்கள் செய்குத்தம்பி பாவலரின் மேல் ஆத்திரம் கொண்டு நீதி மன்றத்தில் சந்தித்துக் கொள்வோம் என்று மார் தட்டினார்கள் . அதில் முதல் இடத்தை பெற்றவர் திருசிரபுரம் திருவாடுதுறை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் என்பவர் குறிப்பிடத்தக்கவர் . அறக் கைலாயப் பரம்பரையின் கடைசி அருளாளராகிய பரஞ்சோதி முனிவர் வான் வழியே வரும் சமயம் திருபெண்ணாகடம் (இன்றைய தென்னாற்காடு மாவட்ட பெண்ணாடம்) என்னும் சிற்றூரில் தமிழ் மரபில் வந்த மெய்கண்டார் என்பவருக்கு உயிர்கள் பெற வேண்டிய பேறுகளாகிய உண்மை நெறியைப் போதித்தார் . அந்த மெய்கண்டார் அவர்களே புறக்கைலாயப் பரம்பயின் முதல் உத்தம மனிதராவார் . இவர் வழிவந்தவர்களே இன்றைய தமிழ் மண்ணின் சைவ சமயவாதிகளாகிய மடாதிபதிகள் , ஆதீன கர்த்தர்கள் . இவர்கள் பெரும்பாலும் வேதாந்திகளாகவே இருந்தார்கள். இவர்கள் எப்போதும் நான் சாவதில்லை , நான் என்றும் இவ்வுலகில் இருப்பேன் , உடல் தான் அழியும் , உயிர் அழிவதில்லை என்று சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் . தமிழ் மக்களின் உழைப்பை பெரும்பாலும் இவர்களே அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார்கள் . இவ்வழி வந்த திருவாடுதுறை ஆதீனத்து வித்துவான் மீனாட்சி சுந்தரம் ஏற்கனவே வள்ளல் பெருமான் மீது பொறாமை கொண்டவர்கள் . காரணம் வள்ளல் பெருமான் ஒரு சமயம் ஒரு செய்யுளுக்கு உரை சொல்லும் சமயம் உடன் இருந்த மீனாட்சி சுந்தரமும் தொழுவூர் வேலாயுதமும் திரு திரு வென்று விழித்துக்கொண்டிருந்தார்கள் . அது சமயம் வள்ளல் பெருமான் இனிச் சொல்வது தொழுவூராருக்கும் புரியாது இங்குள்ள மற்ற யாவர்க்கும் புரியாது என்று உண்மை விளக்கத்தை உரைத்தார்கள் . உலகக் கல்வி கற்று பல பாடல்கள் பாடிய மீனாட்சிசுந்தரம் அதை கேட்டவுடன் மனம் குலைந்து போய் வள்ளல் பெருமான் மீது வஞ்சக எண்ணம் கொண்டார்.

ஆறுமுக நாவலர் அணியில் மீனாட்சி சுந்தரமும் சேர்ந்து கொண்டு பல வாத பிரதிவாதங்களை வெளியிட்டார் . ஆக வள்ளல் பெருமானுக்கு எப்படியாவது நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத்தரவேண்டும் என்பதில் சமயவாதிகள் , அந்தணர்கள், மதவாதிகள் அனைவருமே ஆறுமுக நாவலர் பக்கம் இருந்து கொண்டு நாவலரைப் பழிகடாவாக ஆக்கிவிட்டார்கள். பாவம் ஆறுமுக நாவலர் , வள்ளல் பெருமானை நேரில் பார்த்தது கூடஇல்லை. சைவ சமயக் கொள்கைகளின்பால் அவருக்கு உள்ள ஈடுபாட்டின் காரணமாக வள்ளல் பெருமானைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்ளாமல் வஞ்சகர்களாகிய சோம்பேறிச் சமயவாதிகளின் பேச்சை நம்பி வழக்குத் தொடர்ந்துவிட்டார். ஆங்கில ஏகாதிபத்தியம் என்னும் இங்கிலாந்து நாட்டின் எலிசபெத் மகாராணியாரிடம் அந்தணர்களும் , சைவர்களும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் . நீங்கள் இந்தியாவில் ஆளும் உரிமையைப் பெற்றிருந்தாலும் எங்களுடைய சமயச் சடங்குகளில் தலையிடக் கூடாது . நாங்கள் எல்லாவிதத்திலும் உங்களுக்கு துணை வருகின்றோம் என்று சொன்னதால் இங்கிலாந்து அரசுக்கு இந்திய மக்களை அடிமைப்படுத்தும் வழி மிகவும் சுலபமாயிற்று . அடிமைப்படுத்தப்பட்ட இந்திய மக்களுக்கு பிச்சை போடுவது போல அந்தணர்களுக்கும் சைவர்களுக்கும் ஆங்கிலேய அரசு உயர் பதவிகளை வழங்கியது . தமிழ் மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்க இந்த இரு சமயவாதிகளும் இங்கிலாந்து அரசிடம் உயர்ந்த அரசாங்க உத்தியோகம் என்ற பெயரில் அடிமையாகிப் போனார்கள். ஆக உயர்ந்த பதவிகளை எல்லாம் இந்த இரு வகுப்பினரே அனுபவித்து வந்து, மேலும் நம் மக்களை அடிமைப்படுத்தினார்கள்.

வள்ளல் பெருமான் மீது சுமத்தப்பட்ட வழக்குக்கு நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் முத்துசாமி . இவர் அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர் . வள்ளல் பெருமான் மீது வழக்குத் தொடர்ந்தவர் ஆறுமுக நாவலர் அவருடைய வழக்குரைஞர் சௌந்தர விநாயகம் . இவர் சைவர் வகுப்பைச் சேர்ந்தவர் . வள்ளல் பெருமான் தன் சார்பில் வழக்குரைஞர் வைத்துக் கொள்ளவில்லை. நீதி என்னும் உத்தமப் பொருளை தன் சிரமேல் தாங்கி வந்தவருக்கு மனிதர்களால் எவ்வாறு நீதி சொல்ல முடியும் ? தீர்ப்புச் சொல்லப்படும் நாள் வந்தது .

தருமச்சாலையில் எங்கும் அன்பர்கள் படபடப்புடன் காணப்பட்டார்கள் . கல்பட்டாரின் மனம் மட்டும் சிறிதும் சலனமற்று திருவருள் மயமாக இருந்தது . வள்ளல் பெருமானும் கல்பட்டு ஐயாவை நோக்கி , ஏங்காணும் ஒரே சிந்தனை என்று வினவ கல்பட்டு ஐயாவின் கண்களில் கண்ணீர் ஆறாக ஓடியது. அதுகண்ட நம் வள்ளல் பெருமான் வாட்டமடைய வேண்டாங்காணும் . எல்லாம் திருவருள் சம்மதப் படியே நடக்குங்காணும் என்று சொல்லி ஏதோ எழுதப்பட்ட ஓலை ஒன்றை தன் இரு கைகளாலும் இரண்டாகக் கிழித்துப்போட்டு அமைதியாக நம் அன்பர்களை நோக்கி நீதி மன்றத்திற்கு யாரும் வரவேண்டாங்காணும் . நாம் போகுதுங்காணும் என்று தருமச்சாலையிலேயே ஓர் அறையில் அமர்ந்து இருந்தார்கள். அறைக்கதவு திறக்கவே இல்லை . நீதிமன்றத்தில் அன்றையதினம் ஏகக் கூட்டம். ஆருமுகநாவலரின் சார்பைச் சார்ந்த திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரமும் அவர் அன்பர்களும் வெகு கொண்டாட்டத்துடன் பெருங்களிப்பில் உலாவிக் கொண்டிருந்தார்கள் . வள்ளல் பெருமான் சார்பில் சதாவதானம்செய்குத் தம்பிபாவலர் ஒருவர் மட்டுமே நின்று கொண்டிருந்தார் . யாருக்கு யார் நீதி சொல்வது தீர்ப்பு சொல்வது ! அங்கிருந்தவர்கள் பெரும் எதிபார்ப்புடன் இருந்தார்கள்.

**அ**ருட்சித்தர் மகனாகிய வள்ளல் பெருமானுக்கு, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடைய சொரூபத்திற்கு எது நியாயம் , நீதி என்று தீர்ப்பு வழங்கக் கூடிய நீதி அரசர் நீதிமன்றத்தில் வந்து அமர்ந்தார் . வள்ளல் பெருமான் பெயராகிய இராமலிங்கசாமிகள் என்று மூன்று முறை கூப்பிடப்பட்டது . சுமாரான உருவம் , மெலிந்த தேகம் , ஒளி வீசும் கண்கள் , வெள்ளாடையில் உடலைப் போர்த்தி கைகளைக் கட்டிக்கொண்டு வள்ளல் பெருமான் நீதி மன்றத்தின் வாயிலில் தோன்றினார் . இதைக் கண்ட வழக்குத் தொடர்ந்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் முதன்முதலில் இரு கைகளையும் சிரத்திற்கு மேல் தூக்கி வள்ளல் பெருமானுக்கு வந்தனம் செய்தார் . நீதிபதி உட்பட அங்கு கூடியிருந்த அனைவரும் வணங்கினார்கள் . ஆனால் ஆறுமுகநாவலரின் அணியில் இருந்த திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் உட்பட அவர் அன்பர்கள் அனைவரும் முகத்தை திருப்பிக் கொண்டார்கள்.

**நீ**திபதி ஆறுமுக நாவலரை நோக்கி குற்றம் சாட்டிய நீங்கள் குற்றம் சாட்டப்பட்டவரை ஏன் வணங்கினீர்கள் என்று கேட்க , **நாவலர் அதற்கு, மனிதர் என்று நினைத்தேன், மகான் என்று நேரில் கண்டு கொண்டேன்** என்று சொன்னார். அதற்கு நீதி அரசர் நீரே அவரை மகான் என்று ஒத்துக்கொண்டு அவரை வணங்கிய காரணத்தால் நீவீர் சுமத்திய ***குற்றத்திற்கு அவர் உரியவர் அல்லர் என்று வழக்கை தள்ளுபடி செய்தார்கள் .*** அப்போதுதான் ஆறுமுகநாவலர் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நாம் தவறு செய்துவிட்டோமோ என்று கலங்கிய பார்வையுடன் வள்ளல் பெருமானை நோக்க , வள்ளல் பெருமான் நாவலரை நோக்கி கவலை கொள்ள வேண்டாம் எல்லாம் திருவருட் செயல் போய் வாருங்கள் என்று சொல்ல ஆறுமுகநாவலர் அவ்விடத்தைவிட்டு அகன்றார் . அவர் அணியில் உள்ள புல்லுருவிகளும் தலையை தொங்கவிட்டுக் கொண்டு சென்றுவிட்டார்கள் . அன்றையதினம் இச்செய்தி தருமச்சாலைக்கு எட்டியது . வள்ளல் பெருமானோ தருமச்சாலையில் உள்ள அறையை விட்டு வெளியில் எங்கும் செல்லவில்லை. அறை சாத்தியே இருந்தது . அப்படியானால் நீதி மன்றத்துக்கு வள்ளல் பெருமான் உருவில் சென்றது யார் ? கல்பட்டு ஐயாவுக்கு மட்டுமே சென்றது வள்ளல் பெருமான் என்று தெரியும் . ஒரே நேரத்தில் வள்ளல் பெருமான் பல இடங்களில் தோன்றியது அன்றையதினம் அன்பர்களுக்கெல்லாம் வெட்ட வெளிச்சமாக தெரிந்து விட்டது .

**வ**ள்ளல் பெருமான் இவ்வுலக மாந்தர்களுக்கு என்றும் நித்தியமான பரிபூரண சுத்த சத்திய மெய்வாழ்வு பற்றி எடுத்துச் சொல்ல முனைந்த போது , சமயவாதிகளும் மதவாதிகளும் அந்தணர்களும் செய்த இடையூறு காரணமாக தம்முடைய அகச்சான்றாகிய அனுபவங்கள் , உயிர்களின் நிலை, அவைபடும் துன்பம் , தேகம் அழியும் விதம் திருவருள் விளக்கம் , திருவருள் செயல் அனைத்தையும் பல பகுதிகளாக எழுதி ஒரே கோர்வையாகச் செய்து அதற்கு

திருவருட்பா ஆறாம் திருமுறை என்று பெயர் வைத்து ஒரு துணியில் வைத்து கட்டி தம்முடன் வைத்திருந்தார்கள் . இதை கண்ணுற்ற காரணப்பட்டு கந்தசாமி என்ற அன்பர் வள்ளல் பெருமானிடம் அது என்னவென்று கேட்க , வள்ளல் பெருமான் இது பொன்மூட்டை என்றும் சாலை சம்பந்தம் உடைய அன்பர்களுக்கே இது சொந்தமாகும் என்றும் சொல்லிவிட்டார்கள். அது சமயம் சாலைக்கு உரியவர்கள் யார் , எப்படிப்பட்டவர்கள் என்பதை தெளிவு படுத்த விரும்பி , கல்பட்டு ஐயாவை அழைத்து சமையல்காரர் வேலூர் சண்முகனாரை கூட்டிவரச் சொன்னார்கள் .

***ச***மையல்காரர் சண்முகனாரை நோக்கி வள்ளல் பெருமான் , என்னங்காணும் அன்பர்களுக்கு சோறு ஆக்கிப் போட்டுப் போட்டுச் சலித்துவிட்டீரா, என்று கேட்க சண்முகனாரோ நடுங்கிவிட்டார். உடன் வள்ளல் பெருமான் நீர் செய்த தொண்டானது **அருள் உலகத்தையே குலுக்கி விட்டதுங்காணும் .** நீர் அவ்வளவு பெரிய பாக்கியசாலிங்காணும் என்று சண்முகம் கையை பிடித்துக் கொண்டு சோறு ஆக்கியது போதுங்காணும் , ஒய்வு எடுத்துக் கொள்ளுங்காணும் என்று கல்பட்டு ஐயாவை நோக்க கல்பட்டு ஐயா அவர்கள் வள்ளல் பெருமான் குறிப்பை உணர்ந்துகொண்டார்கள் . அடுத்த மூன்றாவது நாளில் **சமையல்காரர் வேலூர் சண்முகனார் உயிர் அடக்கம் கொண்டார்கள் .** அது கண்ட அன்பர்கள் அனைவரும் வள்ளல் பெருமான் அவர்களிடம் எங்களையும் கை விட்டுவிடாது காப்பாற்றுங்கள் என்று கதறி வள்ளல் பெருமானுக்கு அடிமைப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். திருப்பாதிரிப்புலியூரில் வாழ்ந்த இரத்தினம் என்பவர் அவர் தகப்பனார் காலம் முதல் வள்ளல் பெருமானுக்கு அடிமைப்பத்திரம் எழுதிக் கொடுத்த குடும்பத்தைச் சார்ந்தவர் . அதாவது உடல் , பொருள் , ஆவியை வள்ளல் பெருமானுக்கு ஒப்படைத்தவர் . இது போன்ற பலர் தங்களின் உடல் , பொருள் , ஆவியை வள்ளல் பெருமானுக்கு ஒப்படைத்துவிட்டோம் என்று பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்தார்கள் . தருமச் சாலையில் எப்போதும் மக்கள் வெள்ளம் அலை மோதிக் கொண்டே இருந்தது . வள்ளல் பெருமானைச் சுற்றி அன்பர்களும் மற்ற

ஏனையோரும் எப்போதும் உடன் இருந்தே பல நற்காரியங்கள் செய்துகொண்டு இருந்தார்கள் . சாலையில் பெரும் சலசலப்பு உண்டானதால் வள்ளல் பெருமான் சாலையை விட்டு வெளியேற முயற்சி செய்து , தருமச் சாலையின் நேரடிப்பார்வையை கல்பட்டு ஐயாவிடம் ஒப்படைத்தார்கள் . அன்றைய கால கட்டத்தில் வள்ளல் பெருமான் உடன் இருந்த அனைவருமே உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் . பெருமானிடம் பழகிக் கொண்டிருந்தாலும் , மற்ற மற்ற சமயப் பற்றுகளில் நம்பிக்கை வைத்துக்கொண்டு தங்களை உயர்ந்த சாதிக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டு வருவதும் போவதுமாக இருந்தனர் . இதைக் கண்ட வள்ளல் பெருமான் இவர்களின் தொடர்பு இல்லாத ஒரு இடத்தை தேர்வு செய்தார்கள் . அந்த இடம் தான் மேட்டுக்குப்பம் என்னும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லக்கூடிய உண்மைத்தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். தனது நாற்பத்து ஏழாவது வயதில் அமைதியான இயற்கைச் சூழலில் உள்ள சாமானிய மக்களாகிய மேட்டுக்குப்பம் மக்களிடம் பழகி பேசி வசிக்கத் தொடங்கினார்கள். இதை கண்ட உயர் சாதிக்காரர்கள் வள்ளல் பெருமான் உடன் செல்லவில்லை .

**க**ல்பட்டு ஐயா , அமாவாசைப்பரதேசி , காரணப்பட்டு கந்தசாமி போன்ற சிலரே மேட்டுக்குப்பம் செல்வதும் வருவதுமாக இருந்தார்கள் . தருமச்சாலையை ஆரம்பித்து சாலை சம்பந்தம் உடையவர்கள் எப்படிப்பட்ட நிலையை அடைய வேண்டும் ; அவர்களின் அறிவு விளங்கவேண்டும் ; தயவோடு அருளையும் பெற வேண்டும் என்று கருதிய நம் பெருமான் அருள் விளக்கமாக ஒரு அற்புதத்திருக்கோயில் என்னும் ஞான சபை என்ற ஒரு அமைப்பை தேகத்தின் உடலை மையமாகக் கொண்டு விளங்கும் சிரத்தையும் அதன் அமைப்பையும் சாதாரண மக்கள் புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணம் கொண்டார்கள். அதற்கான வேலைகளைச் செய்ய எண்ணம் கொண்ட காலத்தில் தான் உடன் இருந்த அன்பர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு வேதனையுற்றார்கள் .




**ச.மு. கந்தசாமிப்பிள்ளை**

**1870** ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ம் நாள் தருமச்சாலையில் உள்ள அன்பர்களுக்கு எப்படிப்பழக வேண்டும் ; சாலையை எப்படி நடத்த வேண்டும் என்று வள்ளல் பெருமான் ஒரு கட்டளை பிறப்பித்தார்கள் . அதன் கருத்து யாதெனில் :- ' எந்த மதமானாலும் , எந்த சமயமானாலும் , எந்த சாதியானாலும் , உயர்ந்தவர் , தாழ்ந்தவர் ஏழை பணக்காரர் என்ற பேதம் பாராட்டாமல் பசித்தோர் அனைவருக்கும் உணவு படைக்க வேண்டும்' என்பதே ஆகும். இது கண்ட அன்பர்கள் பலர் வள்ளல் பெருமானை விட்டு விலகிப் போய்விட்டனர் . எஞ்சியிருந்த சிலரும் ஒன்று சேர்ந்து தருமச்சாலையை நடத்த ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து வள்ளல் பெருமானிடம் சென்று இந்தக் கருத்தைச் சொன்னார்கள் . வள்ளல் பெருமானோ நீங்கள் யாரும் உங்கள் பொருளையோ தானியங்களையோ கொடுக்க வேண்டியதில்லை . தயவுள்ளம் கொண்ட அன்பர்கள் முயற்சியால் ஆண்டவரே தருமச்சாலையை நடத்துவார் என்று சொன்னதின் பேரில் அனைவரும் அகன்று விட்டனர் . கல்பட்டு ஐயாவும் , அமாவாசைப்பரதேசி என்ற சாதுவும் ஆனந்த நாத சண்முக சரணாலய சாமிகள் என்பவரும் , காரணப்பட்டு கந்தசாமி என்பாருமே உடன் இருந்தனர் . இவர்களே தருமச்சாலையை கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டார்கள் . இத் தருணம் வள்ளல் பெருமானின் தொண்டர்களில் ஒருவரான புதுச்சேரி சாமிகள் என்பார் தான் சமாதி அடையப் போகும் செய்தியை பெருமானுக்கு கடிதம் மூலம் குறிப்பிட , **அதற்கு வள்ளல் பெருமான் பதிலாக இப்படித்தான் சமாதியானது அமைக்கவேண்டும் என்று எழுத** அதன் படியே அந்த சாமிகள் சமாதி அமைத்து ஒரு நன்னாளில் ஜீவ சமாதி அடைந்தார்கள். அன்றைய தினம் வள்ளல் பெருமான் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள் .

***அ***தாவது நம் தமிழ் மக்கள் உயிர் அடக்கம் கொண்டவர்களை முற்காலத்தில் முதுமக்கள் தாழி என்ற ஒரு மட்கலத்தில் வைத்து புதைத்தார்கள் . அது நாளடைவில் மாறி அடக்கம் அடைந்தவர்கள் , இறந்தார் , செத்தார் , மரணம் உற்றோர் அனைவரையும் மண்ணிலே புதைக்கும் பழக்கம் உள்ளவர்களாய் இருந்தார்கள் . இன்று வரை நம் தமிழ் மக்கள் இறந்தவர்களை புதைக்கத்தான் செய்கின்றார்கள் . ஆனால் வடக்கே இருந்து வந்த ஆரியர் என்று சொல்லப்பட்ட அந்தணர்களும் , அவர்களைப் பின் பற்றிய சைவர்களும் உடலை எரிக்கும் பழக்கம் உள்ளவர்களாய் இருந்ததால் அதையே நம் தமிழ் மக்களிடத்தே சில பிரிவினரிடம் புகுத்தி விட்டார்கள் . கடவுள் குடி இருந்த இத்தேகத்தை நெருப்பில் வைத்து எரிப்பதை வள்ளல் பெருமான் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் தருமச் சாலைக்கு உரியவர்களுக்கு ஒரு குறிப்பை எழுதி அக்குறிப்புக்கு சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு சமாதிக்கட்டளை என்ற பெயரில் வெளியிட்டார்கள் . அதாவது தருமச்சாலைக்கு உரியவர்கள் தயவுடையவர்கள் ஆதலால் சிறிய தயவாகிய பசிக்கு சோறு போடுதல் மூலம் அருளாகிய ஆண்டவர் தயவைப் பெறுதல் வெகு சுலபம் என்பதால் ஆண்டவர் அருளைப்பெறத் இத்தேகம் முக்கியம் ஆதலால் இத்தேகத்தை அக்கினியில் எரிக்காது சமாதி செய்ய வேண்டும் என்று சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு 1871 ம் வருடம் மார்ச் மாதம் 30 ம் நாள் தெளிவுபடுத்தினார்கள் . இதனைக் கண்ட வள்ளல் பெருமான் கூட இருந்த சமயவாதிகளாகிய சைவர்கள் சிலரும் விலகிச் சென்றுவிட்டனர் . வள்ளல் பெருமான் தான் எழுதிய திருவருட்பா அனுபவப்பகுதியாகிய ஆறாம் திருமுறையாகிய பொன் மூட்டையுடன் மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கினார்கள்.

**1871** ம் வருடம் ஏப்ரல் மாதம் 12 ம் நாள் வரலற்றுச் சிறப்பு மிக்க தருமச்சாலை சம்பந்தம் உடைய அன்பர்களுக்காக மிகப்பெரிய **அனுபவ உண்மையாக சன்மார்க்க பெரும் பதி வருகை என்ற பத்திரிக்கையை வெளியிட்டார்கள்.**அடுத்த சில தினங்களில் அறிவுத் திருக்கோவிலாகிய ஞான சபையை கட்டத் தொடங்கினார்கள். ஆறுமுகம் என்பவரே சபைத்திருப்பணிகளை தலைமைப் பொறுப்பிலிருந்து கவனித்துக் கொண்டார். சபை கட்டிட வேலை செய்பவர்களுக்கு தினசரி கூலியாக பணம்

வழங்கப்பட்டது . வள்ளல் பெருமான் மேட்டுக் குப்பத்தில் ஞான சிங்காதனப் பீடம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அன்பர்கள் வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் . அதே சமயம் மேட்டுக்குப்பத்தில் ஓர் அறையில் தினசரி சபையின் வேலை ஆட்களுக்கான பணத்திற்காக தங்கம் செய்யும் முறையினை (வாதவித்தை) கையாண்டு அத்தங்கத்தை சிதம்பரம் அண்ணாமலை என்பவரிடம் விற்று பணம் பெற்று வந்து கூலி கொடுத்தார்கள் . சபைக்கு வேண்டிய சுண்ணாம்பு செங்கற்கள் சாந்து போன்றவைகளை சில அன்பர்கள் கொடுத்தார்கள் . அதற்கும் உரிய பணத்தை வள்ளல் பெருமான் கொடுத்து விட்டார்கள் . சபைக்கு வேண்டிய மற்ற மரங்கள் , உத்தரம் , ஜன்னல் கதவு போன்றவைகளை சென்னையில் இருந்து பணம் கொடுத்தே வாங்கி வந்தார்கள் . தருமச்சாலை விஷயத்தில் அன்பர்களின் மன நிலையை தெரிந்துகொண்ட நம் வள்ளல் பெருமான் ஞானசபைக்கு வேண்டிய அனைத்து செலவுகளையும் தன்னுடைய முயற்சியிலேயே செய்துமுடித்தார்கள் . இதை கண்ட வள்ளல் பெருமானை விட்டு விலகியவர்கள் மீண்டும் பொருள் ஆசையில் வள்ளல் பெருமானிடம் இருந்தால் தங்கம் செய்யும் வித்தையை கற்றுக் கொள்ளலாம் என்ற தவறான எண்ணத்துடன் சூழ்ந்து கொண்டார்கள் . வள்ளல் பெருமானோ இந்தச் சந்தர்ப்ப வாதிகளுக்காக ஆண்டவரிடம் விண்ணப்பித்துக் கொண்டே இருந்தார்கள்.

**ஞா**ன சபை **எட்டுக்கோண**மாகவும் , திறந்த **மூன்று வாயில்** உள்ளதாகவும் , பதினாறு அடி சுற்று வட்டத்தில் ஒரு **பாதாள அறை**யும், அதன் மேல்புறத்தில் **ஒரு மேடை**யும் , அதன் மேல் பகுதியில் ஒரு கல் **தூண்** போன்ற ஒரு கம்பமும் , அதில் ஒரு **பிறை** போன்ற அமைப்பையும் , அந்த பிறை போன்ற அமைப்பில் ஒரு **அகல்** போன்ற பகுதியும் , அதில் எண்ணை விட்டு திரிபோட்டு **விளக்கு**ப் போன்றும் , அதன் முன்பாக ஒரு ரசம் பூசிய **நிலைக்கண்ணாடி**யும் , அந்த நிலைக் கண்ணாடியின் நான்கு புறத்திலும் தரைப்பகுதியில் **இரத்தினக் கம்பளங்கள்** விரிக்கப்பட்டு , நான்கு புறத்திலும் **ஏழு வண்ணங்கள் உள்ள திரை**கள் தொங்கவிடப்பட்டு தெற்குப் பாகம் உள்ள திரைகளுக்கு முன்பாக விளக்கின் கீழ் புறத்தில் நீல நிறத்தில் பைண்டிங் செய்யப்பட்ட **எழுதப்படாத எழுதா மறை** என்ற புத்தகத்தை ஒரு **பெட்டியில்** வைத்திருந்தார்கள் .



## ஞானசபை - வடலூர்



## ஞானசபை- வடலூர்

ஞான சபையின் வெளிப்புறத்தில் வேதியல் முறையில் சுருக்குக்கொடுத்த **இரும்புச் சங்கிலி**யில் ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு ஓடும் சுவாசத்தை கணக்கிட்டு அதன் எண்ணிக்கையிலான வளையங்களையும் ஞான சபையை சுற்றி வேலிபோல் அமைத்து , சபைக்கு தென் கிழக்காக **ஒரு கிணறும்** , அதற்கு தெற்குப் பக்கதில் **ஒரு எழுவார் மேடை**யும் அதன் கிழக்குப்பக்கம் ஒரு **கொடி மரமும்** அமைத்தார்கள் . ஞான சபையின் மேற் **கூரை தாமிரத்தகடு**களால் போர்த்தப்பட்டது. ஞானசபையின் **கும்பம் பன்னீர் செம்பு வடிவத்தில்** அமைக்கப்பட்டு அதன் உள் பாகத்தில் **ஒன்பது வகையான இரச மணி**கள் வைக்கப்பட்டிருந்தன . இந்த அமைப்பைத் தவிர வள்ளல் பெருமான் வேறு எதையும் செய்யவில்லை. 1872ம் வருடம் ஜனவரி மாதம் 25 ம் நாள் முதல் தைப்பூச வழிபாடு ஞானசபையில் தொடங்கப்பட்டது . சமயவாதிகள் போல வள்ளல் பெருமான் குடமுழுக்கு செய்யவில்லை . ஞான சபை வாழிபாட்டின் முதல் நாள் அன்று சில விஷமிகள் ஞான சபையின் வழிபாட்டு விழாவுக்கு போடப்பட்ட பந்தலுக்கு தீ வைத்து விட்டனர் . அன்பர்கள் வள்ளல் பெருமானிடம் ஓடிச்சென்று முறையிட்ட சமயம் வள்ளல் பெருமான் புன்னகையுடன் ஆண்டவர் அருட்பெருஞ் ஜோதியாய் காட்சி தருகிறார் , கண்டு தரிசியுங்கள் என்று சொல்லி சற்று நேரம் கழித்து தன்னுடைய மேலாடையை எடுத்து விசிறி கொண்டு வீசுவதுபோல் வீசி நெருப்பை அணைத்தார்கள் . ஞான சபைக்கு எந்தவிதமான கேடும் நேரவில்லை . முதல் தை பூசம் வள்ளல் பெருமான் முன்னின்று நடத்தினார்கள் . ஞானசபையை பராமரிப்பது , சபை சுத்தம் செய்வது , தீபம் பார்த்துக்கொள்வது , திரை சுத்தம் செய்வது போன்ற பணிகளுக்காக வள்ளல் பெருமான் இரண்டு பேரை நியமனம் செய்தார்கள் . வள்ளல் பெருமானுக்கு அடிமை சாசன பத்திர வழிவந்த திருப்பாதிரிப்புலியூர் 8 வயது இரத்தினம் என்னும் சிறுவர் , திருநெல்வேலி என்னும் ஊரைச் சேர்ந்த மலைச்சாமி

என்னும் 72 வயதுப் பெரியவர் ஆவார்கள் . ஞான சபையில் வேறு எவரையும் வள்ளல் பெருமான் பணியில் அமர்த்தவில்லை. வள்ளல் பெருமான் மேட்டுக் குப்பம் சென்று வருவார்கள் . ஒரு நாளைக்கு ஒரு வேளையே உணவு அருந்தியவர்கள் ஒரு வேளை உணவையும் நிறுத்திவிட்டார்கள் . வடலூர் வருவதும், சாலையைப்பற்றி அறிவதும் , சாலை அன்பர்கள் , சாலையில் சன்மார்க்கக் கல்வி பயின்ற மாணவர்கள் , உணவுப் பணிகள் அனைத்தும் எப்படி நடக்கின்றன என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள் . அதே சமயம் ஞான சபையில் மற்றவர்கள் தலையீடு இருப்பதையும் கண்டார்கள் . காரணம் வள்ளல் பெருமான் 12 வயதுக்கு உட்பட்டவரையும் , 72 வயதுக்கு மேற்பட்டவரையும் சபை பராமரிப்புக்கு அமர்த்தியதால் சில அன்பர்கள் பொறாமை கொண்டு தினசரி திரை நீக்கி தீபம் தரிசனம் செய்யும் காலம் அந்த இருவருக்கும் சில சங்கடங்களை உருவாக்கி சலசலப்பை உண்டு பண்ணினார்கள் . அதற்கு காரணமாக இருந்தவர் ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் என்ற அந்தணர் . இவரால் சபை பராமரிப்பு முற்றிலும் தடைபட்ட வண்ணம் இருந்தது . இவைஎல்லாம் கண்ட வள்ளல் பெருமான் இந்த மக்களுக்கு எப்படிச் சொன்னாலும் தேற மாட்டார்கள் போல் இருக்கின்றது என்று எண்ணி வருத்தமுற்று ஞானசபையில் பணி புரிபவர்கள் சுக்கில விருத்தி ஏற்படாதவராய் உள்ள சிறுவரும் , சுக்கில விருத்தி இல்லாத பெரியவரும் ஞான சபையை பராமரிக்க வேண்டும் என்றும் தருமச் சாலையில் ஒழுக்கம் கைவரப் பெற்றவர்களே பணிபுரிய வேண்டும் என்றும் கட்டளை யிட்டார்கள் . தருமச்சாலை பொருப்பை ஏற்று இருக்கும் கல்பட்டு ஐயாவின் உயர்ந்த ஒழுக்கத்தை சாலை அன்பர்கள் புரிந்து கொண்டு தயவுடன் பணிபுரியவேண்டும் என்பதற்காகவே 1872 ம் வருடம் மே மாதம் 12 ம் நாள் போத நாச வந்தனம் செய்த விண்ணப்பம் என்ற ஒரு விண்ணப்பத்தை பிரார்த்தனைப் பத்திரிக்கையாக கல்பட்டு ஐயாவுக்காக வள்ளல் பெருமானே தம் திருக்கரத்தால் எழுதினார்கள் . அதன் விபரம் :- " **ஸ்ரீ பார்வதிபுரம் என்னும் உத்தர ஞான திருப்பதியின் கண்ணே அகில ஆதரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்து பெருந்தலைமைப் பதியாக வீற்றிருந்து அருளும்**

**அருட்பெருஞ் ஜோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யான் எனும் போதநாச வந்தனஞ் செய்த விண்ணப்பம் .**



## ஞானசபை - உட்தோற்றம்

எம் இறையவரே ,

இது பரியந்தம் யானாகத் தேடியதோர் பொருள் என்பது இல்லை ஆகவே ,

தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக் கொள்ள உபகரித்து அருளிய உடல் , பொருள் , ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்டதோர் சுதந்தரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றி இருந்தது ஒன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன் .

ஆதலால் அச் சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமூகத்து நிற்கப் பெற்ற விசேடத்தால் அத் தற் சுதந்திரப் பொருளை தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன் .

இனி தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னை அடுத்த சுற்றம் என்னோடு பழகிய நட்பினர் ஆதியரையும் உய்யக்கொண்டருளுக.

*இஞ்ஞனம்*
*அடிமை*
க . இராமலிங்கம் .

ஆங்கிரசவருடம் வைகாசிமாதம் முதல்நாள்,மேட்டுக்குப்பம் .

**வ**ள்ளல் பெருமான் பின்னால் சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணபப்பங்கள் எழுதுவதற்கு இந்த அடிமை சாசன பத்திரமே பெருங்காரணமாக இருந்தது .

**வ**ள்ளல் பெருமான் கல்பட்டு ஐயாவுக்காக எழுதப்பட்ட அடிமைப் பத்தர சாசனம் பல உண்மைகளை சன்மார்க்கிகளுக்கு விளக்கி வெளிப்படுத்துகின்றது .

அவைகள் :-

*1 . உலகங்கட்கு பற்றுக்கோடாய் விளங்குவது சமரச வேத சன் மார்க்க சங்கம் .*

*2 . அதன் ஒப்பற்ற தலைவராக வீற்றிருப்பவர் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரே.*

*3 . ஆண்டவர் திருச்சந்நிதிக்குத் தற்போதம் நாசமடைய விண்ணப்பிக்க வேண்டும் .*

*4 . நாமாகத் தேடியது உடலுமன்று , உயிருமன்று , உடமையும் அன்று .*

*5 . இறைவர் பெருங்கருணையினாலேயே அம்மூன்றும் நமக்கு அருளப்பட்டன .*

*6 . அவற்றில் நமக்கு எவ்வித உரிமையும் இல்லை . ஆண்டவர்க்கே அம்மூன்றும் உரிமையுடையன .*

*7 . அறியாமையால் அவற்றை நம்முடையவை என்று நம்புகிறோம் .*

*8 . வள்ளல் பெருமானை ஒத்த சன்மார்க்க சங்கத்து சாதுக்கள் திருமுன்பு பழக நேரின் நாமும் உரிமையில்லாத அப்பொருள்களை ஒப்படைக்க முன் வருவோம் .*

*9 . தற்சுதந்தரம் நீங்கியவிடத்துத் தான் திருவருள் சுதந்தரம் கைகூடும் .*

### *10 . தன்னை ஏற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும் போது தன்னை சார்ந்தவர்களையும் ஆட்படுத்தி உய்விக்க வேண்டுதல் வேண்டும் .*

மேற்கண்ட உயர்ந்த செய்திகள் அவ் விண்ணபத்தில் காணப்படுகிறது .

இவ்வாறு கல்பட்டு ஐயா உடல் பொருள் ஆவி மூன்றையும் தம் சற்குரு நாதருக்கு ஒப்படைத்தார் . இது காரணமாகவே வள்ளல் பெருமான் சாலையில் பணி புரியும் மற்ற அன்பர்களுக்கு ஒழுக்கக் கட்டளைகளை பிறப்பித்தார் .

இதன் சார்பாக வள்ளல் பெருமான் சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பங்களை எழுதி அருளினார்கள் . இக்கால சூழ் நிலையில் வள்ளல் பெருமான் தேகத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது . உடம்பெல்லாம் அக்கினி மயமாய் மாறிப் போனது இச் சூழ் நிலையில் வள்ளல் பெருமான் மேட்டுக்குப்பத்தில் இருந்துகொண்டே 1872 ம் வருடம் ஜூலை மாதம் 18 ம் நாள் தருமச்சாலைக்கு சத்திய தருமச் சாலை என்றும் சன்மார்க்க சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்றும் சபைக்கு சத்திய ஞான சபை என்றும் பெயரிட்டார்கள். அன்றையதினமே ஞான சபை வழிபாடு எப்படி நடத்தவேண்டும் என்றும் விதிமுறைகளை வகுத்தார்கள் .

அதாவது இன்று தொடங்கி அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரது அருட்பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞான சபைக்குள்ளே சபைவெளிச்சத்திற்கு தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும் . அந்த தகரகண்ணாடி விளக்கை 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர் அல்லது 72 வயதுக்கு மேற்பட்ட பெரியவர் இவர்களில் யாரிடமாவது கொடுத்து உட்புற வாசலுக்கு சமீபங்களில் வைத்துவரச் செய்யவேண்டும் .

நான்கு நாளைக்கு ஒரு முறை இருவரில் யாரையாவது விட்டு தூசு துடைப்பிக்கச் செய்யவேண்டும் . தூசு துடைப்பிக்கச் செய்யும் போது குளித்து சுத்த தேகத்தோடு கால்களில் துணியை சுற்றிக்கொண்டு உட்சென்று முட்டிக்காலிட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்யவிக்க வேண்டும். விளக்கு வைக்கச் செல்லும் போதும் இப்படியே செய்யவேண்டும் .

தூசு துடைக்கும் சமயமும் விளக்கு வைக்கும் சமயமும் வெளியில் நம்மவர்கள் மெல்லெனத் துதிசெய்தல் வேண்டும் . மற்ற யாரும் உள்ளே புகுதல் கூடாது . ஞான சபைத் திறவுகோள் யார் கையிலும் இருக்கக் கூடாது . அந்தத் திறவுகோளை ஒரு பெட்டியில் வைத்து பூட்டி அப்பெட்டியை ஞான சபையின் உட்புறம் தீபம் விளங்கும் நிலைக் கண்ணாடிக்கு வெளிப்புறத்தில் கிழக்கே உள்ள பெரிய அறையில் வைத்து அப்பெட்டித் திறவுகோளை ஞான சபையின் காவல்காரர் கையில் ஒப்புவிக்க வேண்டும் என்று ஞான சபை வழிபாட்டுப் பத்திரிக்கையில் எழுதினார்கள் .

இதை கண்ணுற்ற சில சைவப் பற்றுள்ளவர்கள் சமயவாதிகள் , உடன் இருந்த அன்பர்கள் சிலர் , வள்ளல் பெருமான் உடன் இருந்த ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் அனைவரும் பார்வதிபுரம் மக்களிடையே சில தவறான பிரச்சாரத்தை பரப்பி வள்ளல் பெருமான் எழுதிய வழிபாட்டுக்கு விரோதமாக மேளம் , நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளால் வழிபாடு செய்தும் அந்தணராகிய ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் ஞான சபைக்குள் சென்று விளக்கு வைத்தும் வள்ளல் பெருமானால் நியமிக்கப்பட்ட 8 வயது இரத்தினம் , 72 வயது மலைச்சாமியும் அந்தணர் அல்லாத தமிழ் மரபினர் என்று வெளியில் புறக்கணிக்கப்பட்டதையும் அறிந்த வள்ளல் பெருமான் ஞான சபையின் வெளிப்புற வாயிலைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு மேட்டுக்குப்பம் சென்று விட்டார்கள் . இந்த உலக மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்தாலும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்களே என்று வேதனை அடைந்து இனியும் இம்மக்களுக்கு யாது செய்தால் நன்மை அடைவார்கள் என்று சிந்தனையுடன் இருந்தார்கள் .

வள்ளல் பெருமான் , எங்கே ஞான சபையில் நடந்த செயல்கள் போலவே தருமச் சாலைகளிலும் சித்தி வளாகத்திலும் இச்சமயவாதிகள் தங்கள் அடாத செயல்களை புகுத்தி

விடுவார்களோ என்று எண்ணி சத்திய தருமச்சாலையிலும் சித்திவளாகத் திருமாளிகையிலும் பணி செய்பவர்கள் தங்குகின்றவர்கள் எப்படிப்பட்ட நடைமுறையில் பழக வேண்டும் என்று எச்சரிப்பு பத்திரிக்கை ஒன்றை வெளியிட்டார்கள் . வள்ளல் பெருமான் எவ்வளவு சொல்லியும் பேசியும் அன்பு பாராட்டியும் எச்சரித்தும் வடலூர்வாழ் மக்களும் சமயவாதிகளும் ஆடூர் சபாபதியும் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை . இவையெல்லாம் பார்த்த வள்ளல் பெருமான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள் . இவ்வுலக மாந்தர்கள் செய்கை ஒன்றும் வள்ளல் பெருமானை பாதிக்கவில்லை . பாதிப்பும் துன்பமும் உலக மாந்தர்க்கே என்று அவர்களுக்கே தெரியாமல் போயிற்று . மேட்டுக்குப்பம் சித்திவளாக திருமாளிகையின் ஞான சிங்காதன பெரும் பீடத்தில் வள்ளல் பெருமான் அமர்ந்து இருந்தார்கள் .

**அ**ன்ன ஆகாரமின்றி வெறும் நீரையே ஆகாரமாகக் கொண்ட வள்ளல் பெருமான் ஒரு நாள் முகத்திலுள்ள ரோமத்தைக் களைய வழக்கமாக வரும் நாவிதர் வராத காரணம் என்ன என்று வினவ கூடியிருந்த அன்பர்கள் நாவிதரின் துணைவியார் உயிர் அடக்கமாகிவிட்டார் என்ற செய்தியை சொன்னார்கள் . அதே சமயம் நாவிதர் அழுத கண்ணீருடன் வள்ளல் பெருமான் முன் நிற்க அந்த நிலை கண்டு இறங்கிய பெருமான் உடன் சென்று அடக்கமாகிய அந்த அம்மையின் வாயைத் திறந்து வெள்ளையான ஒரு பொருளை வாயில் இட அந்த அம்மையார் உடன் உயிர் பெற்று எழுந்தார்கள் . **வள்ளல் பெருமான் முதல் முறையாக இறந்தவரை எழுப்பினார்கள்.** இவ்வாறு இறந்தோரை எழுப்பும் முறையை நம் தமிழ் மக்களாகிய சித்தர் பெருமக்கள் முப்பூ என்று சொல்லக் கூடிய சாகாமூலிகையாகிய குருமருந்தான அமுதத்தை , கற்பத்தை கையாண்டிருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும் . வள்ளல் பெருமானும் அதே முறையில் வாத கற்பத்தை கையாண்டார்கள் . எந்த ஒரு பொருள் ஒரு உலோகத்தை வேதியல் மாற்றம் செய்கின்றதோ அதே பொருளை இந்த உடம்பில் கொடுத்தால் இந்த உடம்பும் வேதித்து சுத்த தேகமாக மாறிப்போய்விடும் . இதை உலோக வேதி, திரேகவேதி என்றும் நம் சித்தர் பெருமக்கள் சொல்லுகின்றார்கள் .

1873 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ம் நாள் ஒரு எச்சரிப்பு பத்திரிக்கையை வெளியிட்டார்கள் .அந்த எச்சரிப்புப் பத்திரிக்கையில் சித்திவளாகம் தருமச்சாலை சன்மார்க்க சங்க அன்பர்கள் என்ன நிலையில் இருந்தார்கள் , எப்படிப்பட்ட சூழ்நிலையில் செயல்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள் ஞான சபையைப்பற்றிக் குறிப்பிடவில்லை . காரணம் வள்ளல் பெருமானால் ஞான சபை பூட்டப்பட்டது . ஞான சபையில் எப்படி வள்ளல் பெருமானின் கொள்கைகளுக்கு விரோதமாக செயல்பாடுகள் வழிபாடுகள் நடந்ததோ அதேபோல தருமச் சாலையிலும் சித்திவளாகத்திலும் அன்பர்கள் என்று சொல்லக்கூடிய சில புல்லுருவிகள் தங்கள் ஈனச் செயலை செய்ய ஆரம்பித்தார்கள் . அதாவது சன்மார்க்க சங்கத்தின் செயல்பாடுகளிலும் தருமச் சாலையிலும் மேட்டுக்குப்பத்திலும் தங்கள் விஷமத்தனத்தை செயல்படுத்த முனைந்தார்கள். தருமச்சாலையை பசித்தோர்க்கு அன்னமிடும் விஷயத்தில் தடை செய்தல் , சோம்பேறிகளுக்கு துணை போதல் என்று சொல்லிவிட்டு தான் மட்டும் மூன்று வேளை உண்ணுதல் உண்ட பின்பு உறங்கி விழித்து வெட்டி பொழுது போக்கிக்கொண்டு சங்க வழிபாடு விஷயத்தில் கருத்து வேறுபாடுகளை உருவாக்குதல் , தன்னைச் சார்ந்தவர்களுக்கு உபகாரம் செய்தல் , ஜீவகாருண்யம் என்பது சோறு போடுதல் இல்லை என்று உண்மைக்கு புறம்பாகப் பேசுதல் போன்ற சலசலப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருந்தனர் . இவை அனைத்தும் அறிந்த கல்பட்டு ஐயா அவர்களும் பொறுமையுடனும் தயவுடனும் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். வள்ளல் பெருமானோ தருமச்சாலை விஷயத்தில் இந்த உலகத்தார் செய்யும் சங்கடங்களை பார்த்துக் கொண்டு இருக்காமல் தருமச் சாலையில் இருக்கும் அன்பர்களை நோக்கி , இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம் , அதே சமயம் உயிருக்கு உபகாரமான அன்னமிடும் விஷயத்தில் குரோதம் தவறு உண்டாகிற விஷயமாக இருந்தாலும் அதை மறந்து விட்டால் மேற்கொண்டு விளைவுகள் ஏற்படாத வண்ணம் இருக்கும் என்றும் இனிமேல் ஒருவரை ஒருவர் தவறான கடுமையான வார்த்தைகளால் சண்டை வரக்கூடிய அளவுக்கு வைதாலும் அப்படி வைதவர்களும் அதை கேட்டவர்களும் மனக்கசப்பை

மறந்துவிட்டு மனம் ஒத்து பழக வேண்டும் என்றும் அவ்வாறு சண்டையிட்டு மனக்கசப்புடன் இருந்து வருபவர்களை தருமச் சாலையிலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் அவர்களை கடுமையாக பேசவோ செயல்படவோ கூடாது அங்கிருக்கும் ஒருத்தர் இரண்டுபேரிடம் தெரிவித்தல் வேண்டும் என்றும் அப்படி செய்யாது , ஒருவரோடு ஒருவர் மனக்கசப்புடன் அக்கிரம , அதிக்கிரம வார்த்தைகளால் பேசியும் வைதும் இருந்துகொண்டு இருப்பவர்கள் இங்கிருத்தல் அனாவசியம் என்றும் அப்படி ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டி மனக்கசப்புடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்களை மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து தருமச்சாலை மேட்டுக்குப்பம் போன்ற இடங்களிலிருந்து போய்விடத்தக்க முயற்சியாக அவர்களை எப்படியாவது அப்புறப்படுத்தி விடவேண்டும் என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எச்சரிப்பு பத்திரிக்கையை வெளியிட்டார்கள். பத்திரிக்கை வெளியிடப்பட்ட அன்றைய தினமே தருமச்சாலையின் உணவு இடும் பணி கல்பட்டு ஐயாவின் நேரடிப்பார்வைக்கு வந்தது . மேட்டுக்குப்பம் , சித்திவளாக திருமாளிகையையும் , தருமச்சாலையையும் கல்பட்டு ஐயாவே கவனித்துக் கொண்டார்கள் .

அடுத்த சில தினங்களில் ஒரு முறை நாவிதர் தன் மகனை வள்ளல் பெருமானுக்கு முக சவரம் செய்ய அனுப்பும் சமயம் வள்ளல் பெருமான் வெளியில் சென்றிருந்தர்கள் . அந்த பையன் அங்கு புகைந்து கொண்டிருந்த வகார வித்தைப்புடத்தை ஆறுவதற்கு முன் என்ன என்று ஒரு குச்சியால் திறந்து பார்த்த சமயம் அதிலுள்ள வேதியல் புகையானது அவன் கண்ணில் தாக்கி கண்கள் ஒளி இழந்து விட்டது . வள்ளல் பெருமான் இச் செய்தி அறிந்து உரியவர்களிடத்தில் அந்த பையனை ஒப்படைத்து விடுங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள் . இது நடந்த மூன்றாவது நாள் பையனின் தந்தையான நாவிதர் வள்ளல் பெருமானிடம் அவனை அழைத்து வந்து என் மனைவிக்கு உயிர் கொடுத்ததுபோன்று என் ஒரேமகனையும் காப்பாற்றுங்கள் என்று வேண்ட வள்ளல் பெருமான் நாவிதர்மகன் கண்களில் இரு துளிகள் விட்டவுடன் **கண்கள் உடனே பிரகாசமாக வெளிச்சத்தைப் பெற்றது** . அன்றைய தினம் முதற்கொண்டு வள்ளல் பெருமான் நம் இடத்தில் இனிமேல் நாவிதர் வேண்டியதில்லை என்றும் முகச்சவரமும் , சிரசு ரோமம் போன்றவைகளை அகற்றாமல் அப்படியே விட்டு விட்டார்கள் . நீண்ட தலைமுடியுடனும் முகத்தில் குறுந்தாடி மீசையுடனும் காட்சிதந்தார்கள் . இன்றுவரை மேட்டுக்குப்பத்தில் நாவிதர்கள் வாழ முடிவதில்லை .

மேட்டுக் குப்பத்தில் , வள்ளல் பெருமான் இயற்றிய பொன்முட்டை என்று சொன்ன ஆறாம் திருமுறை பதிகங்களை அன்பர்கள் வெளியிடவேண்டும் என்ற எண்ணம் கொண்டு வள்ளல் பெருமானை அனுகினார்கள் . வள்ளல் பெருமான் முதல் நான்கு திருமுறைகள் வெளியிட்டதற்கே நீதிமன்றத்திற்கு அழைத்த இந்த சமய வாதிகள் இந்த ஆறாம் திருமுறையை வெளியிட்டால் என்ன பாடு படுத்துவார்கள் என்று எண்ணிக்கொண்டு , அனுபவப் பகுதியான இந்த ஆறாம் திருமுறை தொகுப்பானது ஞானிகளுக்கு மட்டுமே உரியது . சாமான்ய மக்களுக்கும் சாதகர்களுக்கும் இது ஒரு போதும் அனுபவத்திற்கு வராது என்று சொல்லி சன்மார்க்க பெரும் பதி வரும் சமயம் இந்த ஆறாம் திருமுறை வெளிப்படும் என்று சொல்லி தன்னுடனேயே வைத்துக் கொண்டார்கள் .

இருந்தும் வள்ளல் பெருமான் இவ்வுலகத்தார்க்கு தாம் வந்த வேலையை உணர்த்தவேண்டும் என்ற நியதியின் காரணத்தால் 1873 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ம் நாள் புதன் கிழமை காலை எட்டு மணிக்கு வாழையடி வாழையாக வந்தவர்களுக்கும் வழி வழி தொண்டர்களுக்கும் குரு சீடர் பாரம்பரியத்துக்கும் , ஆசாரியான் , மாணாக்கர் வழி வந்தவர்களுக்கும் மட்டுமே நடைமுறைப் படுத்திய பிரம்ம ரகசியமான மரணமில்லா பெருவாழ்வு பெற வேண்டிய நிலையை மிக எளிமையாக சாதரண பாமரர்களும் புரிந்து கொள்ளும் படியாக கொடிகட்டிக்காட்டி அனுபவ அறிவான பேருபதேசத்தை திருவாய் மலர்ந்தருளினார்கள் .

இந்த பேருபதேசம் சிறு பிரதியாக வெளியிடப் பட்டிருக்கின்றது . அதன் முக்கியமான சாரம் என்ன வென்றால் சன்மார்க்க அனுபவமான மரணமில்லா பெருவாழ்வாகிய நித்திய

மெய் வாழ்வு பெற்று என்றும் இயற்கை உண்மைப் பெரும் பதியை அடைய பெருந்தயவான ஜீவ காருண்யத்தைப் பெற்றுக் கொண்ட சாத்தியர்களுக்கு மட்டும் இது ஆகும் என்று வள்ளல் பெருமான் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் . என்றும் இது சத்தியம் சத்தியம் சத்தியம் இது ஆண்டவர் கட்டளை என்றும் வள்ளல் பெருமான் ஆணை யிட்டார்கள் . விறு விறுவென்று வெகுதுரிதமாக வள்ளல் பெருமான் செயல்பட ஆரம்பித்தார்கள் திருவாசகத்தில் தோய்ந்த வள்ளல் பெருமான் மாணிக்க வாசக சாமிகளின் அனுபவ விளக்கமாக அருட்பெருஞ் ஜோதி அகவலை எழுதினார்கள் . வள்ளல் பெருமான் மீது அளவில்லாத பணிவுள்ளம் கொண்ட இரண்டு பெண்கள் செட்டிநாடு என்ற பகுதியிலிருந்து மேட்டுக்குப்பத்தில் தங்கியிருந்தார்கள் . அவர்களில் ஒருவர் வயதான மூதாட்டி , பெயர் வள்ளியம்மை . இன்னொருவர் அவருடைய மகள் இளவயதுபெண், அவர் பெயர் கண்ணம்மை . இந்த இருவரும் வள்ளல் பெருமானிடம் சென்று நாங்கள் கடைத்தேறுவதற்கு வழி செய்யுங்கள் என்று வேண்ட வள்ளல் பெருமான் தாம் தம் திருக்கரத்தால் எழுதிய அருட்பெருஞ் ஜோதி அகவலை அந்த பெண்கள் இருவர் கையிலும் கொடுத்து படித்து வாருங்கள் என்று சொல்லி , அதைப் படிக்கும் முறையையும் சொல்லி அனுப்பினார்கள் . ஆனால் இன்றைய அன்பர்களோ அருட் பெருஞ் ஜோதி அகவலை , அகவல் ஓதுதல் , அகவல் பாராயணம் என்று சொல்லிக் கொண்டு வள்ளல் பெருமான் சொன்னதற்கு நேர்மாறாக செய்து கொண்டிருக்கின்றனர் .

**வ**ள்ளல் பெருமான் இதுவரை எவ்வளவோ அற்புதங்களை நிகழ்த்தியிருக்கின்றார்கள் . அது கண்டவர்கள் பலர் போற்றினார்கள் , பலர் பொறாமை அடைந்தார்கள் , பலர் ஓடிப்போனார்கள் , பலர் விலகியிருந்தார்கள் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமை உணர்வுடன் ஆன்ம லாபத்தைப் பெற்று என்றும் நித்திய வாழ்வு வாழ மிகப் பெரிய அருள் அற்புதத்தை வள்ளல் பெருமான் நிகழ்த்த தயாரானார்கள்.1873 ம் வருடம் நவம்பர் மாதம் கார்த்திகை புனர்பூசம் நட்சத்திரம் கூடிய நாளில் ஞான சிங்காதனப் பெரும் பீடப்பகுதியில் இருந்த விளக்கை சித்திவளாகத் திருமாளிகைப் புறத்தில் வைத்து கூடியிருந்த அன்பர்கள் அனைவரையும் நோக்கி தடைபடாது ஆராதியுங்கள் , இந்தக் கதவை சாத்தி விடப் போகிறோம் . இனி கொஞ்சகாலம் எல்லோரும் , ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிற படியால் உங்களுடைய காலத்தை வீணிற்கழிக்காமல் தெய்வ பாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள் , நாம் இப்போது இந்த உடம்பில் இருக்கின்றோம் , இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள்வோம் என்று கூடியிருந்த அன்பர்களுக்கு அறிவுருத்தினார்கள்.

**மே**ட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையின் புறத்தே எந்நேரமும் இரண்டு அடுப்பு எரிந்து கொண்டிருக்கும் ஒரு அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கும் , அடுத்த அடுப்பில் அந்த நீர் சற்று ஆறியிருக்கும் . முதல் அடுப்பில் கொதித்து சுண்டக்காய்ச்சிய நீர் அடுத்த அடுப்பில் மாற்றப்பட்டு சற்று ஆறியவுடன் வள்ளல் பெருமான் அந்த நீரை உட்கொண்டார்கள் . வள்ளல் பெருமான் ஆரம்ப காலத்தில் இருந்தே , அதாவது 12 வயது தொடங்கி ஒருவேளை உணவில் சில கவளங்களே உண்டு வந்தார்கள் . அதே சமயம் நம் தமிழ் மண்ணில் தோன்றிய சித்தர் பெருமக்களால் சொல்லப்பட்ட மெய்ப் பொருளாகிய கற்பத்தை கைக் கொண்டார்கள் என்பது உடன் இருந்த சில அன்பர்களுக்கே தெரியும் . அதில் ஒருவர் தான் கல்பட்டு ஐயா அவர்கள் , மற்றவர் காரணப்பட்டு கந்தசாமி என்பார் . இந்த உடல் தோன்றியதற்குக் காரண காரியமாக இருந்த சிரசில் விளங்கும் மெய்ப் பொருளாகிய அக்கினி , தேகத்தை வள்ளல் பெருமான் கற்பம் என்று சொல்லக் கூடிய மெய்ப்பொருளை கொண்டு ஒன்றில் ஒன்றாக இணைத்து தன் தேகத்தை அழியாத தேகமாக ஆக்கிக் கொண்டார்கள் .

**1873** ம் வருடம் , நவம்பர் மாதம் சித்தி வளாக மாளிகையில் உட்புகுந்த வள்ளல் பெருமான் மூன்று மாதகாலம் வெளியே வரவில்லை . கல்பட்டு ஐயாவும் அவருக்குத் துணையாக , கட்டமுத்துப் பாளையம் நாராயணர் என்பவரும் தருமச்சாலைக்கு செல்வதும் வருவதுமாக இருந்தார்கள் . வள்ளல் பெருமானின் மேல் உண்மை அன்புள்ளவர்களும் , தயவுள்ளம் கொண்ட தருமச்சாலை அன்பர்களும் மேட்டுக் குப்பத்திலும் , தருமச் சாலையிலும் வள்ளல் பெருமான் இட்ட

கட்டளையின் படி பணி புரிந்து கொண்டிருந்தார்கள் . வள்ளல் பெருமானிடம் மிக நெருக்கமாக இருந்ததாகச் சொல்லப்பட்ட பல அன்பர்கள் சித்தி வளாகத் திரு மாளிகையின் உட்புறம் கதவு தாழிடப்பட்டு வள்ளல் பெருமான் வெளியில் வராதது கண்டு அவநம்பிக்கைப் பட்டு பிரிந்து சென்று விட்டனர். வள்ளல் பெருமானிடம் பல காலம் உடனிருந்த மற்ற சில அன்பர்களும் அற்ப விசுவாசம் உடையவர்களாக இருந்த காரணத்தால் அவரவர்கள் தங்கள் வேலைகளைப் பார்க்கச் சென்று விட்டார்கள் . வள்ளல் பெருமான் தனித்திருந்து இவ்வுலக மாந்தார்கள் அனைவரும் பெரும்பேறாகிய சன்மார்க்கப் நிலையைப் பெற தாம் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் சித்திவளாகத் திருமாளிகையின் உட்புறத்திலிருந்து செய்ய ஆரம்பித்தார்கள். சாகாதவனே சன்மார்க்கி என்னும் சாகா நிலையைப் பெற ஒழுக்கம் என்பதே உண்மை மார்க்கம் என்றும் அந்த ஒழுக்கம் எதனால் பெறப்படுவது என்றால் ஜீவகாருண்யத்தினால் தான் பெற முடியும் என்றும் ஒரு உயிர் மேல் இரக்கம் , தயவு , கருணை அன்பு உள்ளவர்கள் எந்த நேரத்திலும் ஒழுக்கம் தவறி நடக்க மாட்டார்கள் என்றும் , ஆகையால் ஜீவகாருண்ய ஒழுக்கமே உண்மை ஒழுக்கம் என்றும் வள்ளல் பெருமான் தம் அன்பர்களுக்கு போதித்ததை நினைவுபடுத்திக் கொண்டு அதை எப்படி எந்த சூழ்நிலையில் எல்லோரும் காண வெளிப்படுத்துவது என்று அதற்குரிய தருணத்தை முடிவு செய்து தன் சார்பாக வழிவழியாக வந்த கல்பட்டு ஐயா , மற்றும் காரணப்பட்டு கந்தசாமி இருவரையும் அழைத்து தெரிவிக்க வேண்டியதை தெரிவித்தும் உண்மையை சொல்ல வந்தேன் என்று உண்மை சொன்னாலும் கேட்டுக்கொள்வார் இல்லை என்ற நிலையில் இவ்வுலக மாந்தர்களிடத்தே சகோதரதத்துவத்தை பற்றி எடுத்துச் சொல்ல உலகம் எங்கும் செல்வோம் , இங்கும் இருப்போம் , எங்கும் இருப்போம் , எப்படியும் இருப்போம் என்றும் , தருமச்சாலையை ஆண்டவர் நடத்துவார் என்றும் தாங்கள் இடை விடாது உயிர்க்கு உபகாரமாகிய ஜீவகாருண்யப் பணியை நடத்துங்கள் என்று கட்டளை இட்டார்கள் .

**வ**ள்ளல் பெருமானின் திரு உள்ளத்தை அறிந்த கல்பட்டு ஐயாஅவர்கள் முகத்தில் கவலை ரேகை படரலாயின . ஆக ஒரு பெரிய செயல் நடக்கப் போகிறது என்பதை மட்டும் பலர் புரிந்துகொண்டார்கள் . இச் செய்தி சென்னையில் இருந்த தொழுவூர் வேலாயுதனாருக்கும் எட்டியது . ஆக வள்ளல் பெருமானின் குறிப்பு அறிந்த கல்பட்டு ஐயாவின் மூலம் அனைவரும் சித்திவளாகத் திருமாளிகையின் முன் புறம் பல நாட்கள் கூடியிருந்தார்கள் .

**1873** ம் வருடம் நவம்பர் மாதம் சித்திவளாகத் திருமாளிகையில் உட்புகுந்த வள்ளல் பெருமான் 1874 ம் வருடம் ஜனவரி மாதம் 30 ம் நாள் ஏறத்தாழ மூன்று மாதம் கழித்து (ஸ்ரீமுக வருடம் தை மாதம் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை) திடீரென்று சித்திவளாகத் திருமாளிகையின் முன்புறம் கூடியிருந்த அன்பர்கள் நடுவே தோன்றினார்கள் .

**வ**ள்ளல் பெருமான் இவ்வுலக மாந்தர்களிடத்தே கடைசி முறையாக தான் வந்த விதத்தையும் , தான் பெற்ற பேறுகளையும் தான் அடைந்த அனுபவங்களையும் இவ்வுலக மாந்தர்களாகிய நீங்களும் பெற வேண்டும் என்று இரங்கி , அருளை அன்பை அற்புதத்தை அன்பர்களுக்கு அருளத்தொடங்கினார்கள் .

**உ**லகத்தினிடத்தே பெறுவதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே ,

**அ**றிவு வந்த காலம் முதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும் , அடைந்து அறியாத அற்புத குணங்களையும் , கேட்டு அறியாத அற்புத கேள்விகளையும் , செய்து அறியாத அற்புத செயல்களையும் , கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், அனிபவித்து அறியாத அற்புத அனுபவங்களையும் இது தருணம் தொடங்கி கிடைக்கப் பெறுகின்றேன் என்று உணருகின்ற ஓர் சத்திய உணர்ச்சியில் பெருங்களிப்புடையேன் ஆகி இருக்கின்றேன்.

**நீ**ங்களும் அவ்வாறு பெற்று பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனது சுத்த சன்மார்க்க லட்சியமாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டு உரிமை பேராசை பற்றியே இதனைத்

தெரிவிக்கின்றேன். இயற்கையில் தானே விளங்கு கின்றவராயும், இயற்கையில் தானே உள்ளவராக விளங்குகின்றவராயும் , இரண்டு படாத பூரண இன்பமானவர் என்றும் எல்லா அண்டங்கள் , எல்ல உலகங்கள் , எல்லா மதங்கள், எல்லா சக்திகள், எல்லா சத்தர்கள் ,எல்லா கலைகள் , எல்லாபொருள்கள் , எல்லா தத்துவங்கள் , எல்லாத் தத்துவிகள் எல்லா உயிர்கள் எல்லா செயல்கள் , எல்லா இச்சைகள் , எல்லாஞானங்கள், எல்லா பயன்கள் , எல்லா அனுபவங்கள் , மற்றை எல்லாவற்றையும் தமது திருவருள் சக்தியால் தோற்றுவித்து , வாழ்வித்து , குற்றம் நீக்குவித்து , பக்குவம் வருவித்து , விளக்கம் செய்வித்தல் முதலான பெருங்கருணை பெருந்தொழில்களை இயற்றுவித்து , எல்லாம் ஆனவராயும் , ஒன்றும் அல்லாதவராயும், சர்வ காருண்யராயும் , சர்வ வல்லபராயும் , எல்லாம் உடையவராயும் , தமக்கு ஒருவாராகிலும் ஒப்பு உயர்வில்லா தனிபெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதியார் என்றும் , சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்க மின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும் பூரணப் பொது வெளியில் , அறிவார் அறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார் .

**அ**வ்வாறு விளங்குகின்ற ஒருவராகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளை அடைந்து அழிவில்லாத சத்திய சுக பூரண பெரு வாழ்வைப் பெற்று வாழாமல் பல்வேறு கற்பனைகளால் பல் வேறு சமயங்களிலும் , பல்வேறு மதங்களிலும் பல் வேறு மார்க்கங்களிலும் பல்வேறு லட்சியங்களைக் கொண்டு நெடுங்காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகி சிற்றறிவும் இன்றி விரைந்து விரைந்து பல் வேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் அழுந்தி இறந்து இறந்து வீண் போகின்றீர்கள் . இனி இச் ஜீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண் போகாமல் , உண்மை அன்பு , உண்மை அறிவு , உண்மை இரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று நற் செய்கை உடையவராய் எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று பேரின்ப சித்திப் பெருவாழ்வில் பெரும் சுகத்தையும் , பெருங்களிப்பையும் அடைந்து வாழுதல் பொருட்டு மேற் குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளம் கொண்டு இக் காலம் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் , அளவு குறிக்கப் படாத அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம் என்று திருக்குறிப்பை வெளிப்படுத்தி அருட்பெருஞ் ஜோதியராய் அமர்ந்து இருக்கின்றார் . ஆதலில் இது தருணம் தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெருவீர்களாயின் கருதிய வண்ணம் பெற்று களிப்படைந்து இறந்தவர்கள் உயிர் பெற்று எழுதல் , மூப்பினர் இளமை பெற்று நிற்றல் முதலிய பல வகை அற்புதங் களைக் கண்டு பெருங்களிப் படைவீர்கள் என்று பெரும் முழக்கம் செய்வித்தார்கள் .

**க**ல்பட்டு ஐயாவும் , காரணப்பட்டாரும் , கண்களில் நீர் மல்க ஓர்புறத்தே நின்றிருந்தார்கள் . தொழுவூர் வேலாயுதமும் உடன் இருந்தார்கள் . கடைசியாக ஒரு முறை வள்ளல் பெருமான் தன் திருவருள் நோக்கத்துடன் அனைவரையும் நோக்கி **'ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமைச் சகோதரர்களே நாம் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் ஆணைப்படி இனி இரண்டரை கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்கு தோன்ற மாட்டோம். நீங்கள் இந்த தீபத்தினை கடவுள் எனக் கொண்டு ஜீவகாருண்ய நெறியில் வழிபட்டு உய்யுங்கள். பிறகு அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் வருவார் . அப்போது பல அற்புத சித்திகளை நிகழ்த்துவார் . திருவருள் செங்கோலாட்சி செலுத்துவார். அகவினத்தார் சாகாவரமும் , ஏனையோருக்கு பரிபாக பக்குவ நிலையும் அளிப்பார் '** என்று உபதேசித்து தாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத்தினர் திறக்கும்படி உத்தரவு இட்டால் ஆண்டவர் அருள் செய்வார் என்று கட்டளை இட்டு எல்லோருக்கும் மன அமைதியை உண்டு பண்ணி இரவு மணி 12 அளவில் புனர்பூசம் முடிந்து பூச நட்சத்திர தொடக்கத்தில் ***நாற்பத்தீராயிரம் வருடம் ஞான சித்தராய் அமர்ந்திருப்போம்***. அதன் பிறகு பிரணவ தேகியாய் வெளிப்படுவோம் , இது சத்தியம்,சத்தியம் , சத்தியம் என்று சொல்லி மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையின் உட்புறத்தில் உள்ள ஞான சிங்காதன பெரும் பீடத்தில் அமர்ந்து கொண்டார்கள் . திருமாளிகையின் திருக்கதவு கல்பட்டு

ஐயாதிருக்கரங்களால் திருக்காப்பிடப்பட்டது. **தமிழ் மண்ணின் தந்தை திருவருட் பிரகாச வள்ளல் சிதம்பரம் இராமலிங்க சாமிகள் பேரானந்த நித்திரை செய்துகொண்டிருக்கிறார்கள் .**




*வள்ளலார் பிறந்த இடம்- மருதூர்*

# நிறைவுரை

**வ**ள்ளல் பெருமான் தொடங்கிய தருமச்சாலையில் பணிபுரிந்த **கல்பட்டு ஐயா** , 25 ஆண்டு காலம் தன்னுடைய நேர்பார்வையில் **சுப்புராயப்பரதேசி** என்பவர் மற்றும் **கட்டமுத்துபாளையம் நாராயணர்** என்பவர்களின் உதவியுடன் சோறிடும் பணியை சிறப்புடன் நடத்தி வந்தார்கள் . இவ்வாறு தருமச்சாலையில் பணியாற்றிய ஜீவகாருண்யம் மிக்க தயவுடையவர்களாகிய வழி வழித் தொண்டர்கள் சார்பாகவே இன்று வரை சன்மார்க்க கொள்கைகள் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றது . இவர்கள் அனைவருடைய ஜீவ சமாதியும் தருமச் சாலையின் கிழக்குப் பகுதியில் இருக்கின்றது

**வ**ள்ளல் பெருமான் நிருவிய **ஞான சபை , வள்ளல் பெருமானால் பூட்டப்பட்டு** , பெருமான் சித்தி பெற்ற பின்பு , நான்கு ஆண்டுகள் கழித்து 1878 ம் வருடம் ஏப்ரல் மாதம் 12 ம் நாள் ஆடூர் சபாபதியார் தலைமையில் ஆறு பேர் சேர்ந்து திறந்து வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள் . ஞான சபையில் சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்ளும் அன்பர்கள் தாங்கள் அணியும் ஆடைகளை மேல் புறம் உள்ள அறையிலும் , ஞான சபையின் ஆராதனைப் பொருட்கள் கீழ்ப்புறம் உள்ள அறையிலும் இருக்கும் .

**த**ருமச்சாலை , ஞான சபை போன்ற அமைப்புகளின் அறங்காவலரான வேட்ட வலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியார் 1883 ம் வருடம் மார்ச் மாதம் 5 ம் நாள் இறந்தவுடன் ஆடூர் சபாபதியின் நடவடிக்கைகள் மிகவும் மாறுபாடாகத் திகழ்ந்தது . 1884 ம் வருடம் டிசம்பர் மாதம் 6 ம் நாள் மேட்டுக் குப்பத்தில் வள்ளல் பெருமான் பயன்படுத்திய சில பொருட்கள் , உயிர் காக்கும் மருந்தான கற்பம் என்னும் குருமருந்து , ஞான வெட்டி 1500 , திருமந்திரம் 8000 , திருவாசகத்தின் ஞானத்தாழிசை போன்ற நூல்கள் , இரண்டு இரும்புப் பெட்டி மற்றும் ஒலைச் சுவடிகள் அனைத்தையும் ஆடூர் சபாபதி தன் சகாக்களுடன் சென்று எடுத்து வந்து ,

இரும்புப் பெட்டியைத் திறக்க முயன்று , அது திறக்க முடியாமல் போகவே தனது வீட்டில் வைத்துக் கொண்டார் .

**இ**றந்து போன வேட்டவலம் ஜமீன்தார் , அப்பாசாமி பண்டாரியார் பெயரிலிருந்த வடலூர் பட்டாவை அவர் மகன் சர்க்கரையா பண்டாரியார் பெயருக்கு மாற்றக்கூடாது என்று சிலர் ஆட்சேபிக்க 1889 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ம் நாள் சர்க்கரையா பண்டாரியார் தன் அறங்காவலர் பதவியை ஆடூர் சபாபதிக்கு எழுதிக் கொடுத்து , தன் பதவியை விட்டுக்கொடுத்தார் . சபாபதி சிவாச்சாரியாருக்கு உரிமை கைவரப்பெற்றதும் தன் விஷமத் தனமான வேலைகளை வடலூர் பெருவெளியில் பகிரங்கமாக செய்ய ஆரம்பித்தார் . 1889 ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் நாள் ஞானசபையின் உட்புறமுள்ள , இரண்டு அறைகளில் மேற்புற அறையில் வினாயகரையும் , கீழ்புற அறையில் முருகப் பெருமானையும் பிரதிஷ்டை செய்ய ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் முயற்சி செய்யும் சமயம் , சிலர் ஆட்சேபனை செய்ய பலத்த எதிர்ப்புகளுக்கிடையே கைவிட்டார் . 1890 ம் வருடம் ஜூன் மாதம் 3 ம் நாள் மேட்டுக்குப்பத்தில் இருந்து எடுத்து வந்த பொருட்களில் உள்ள **இரண்டு இரும்புப் பெட்டிகளை திறக்க முயற்சி செய்து திறக்காமல் போகவே** அவைகளை ஞான சபைக்கு முன் இருந்த இரண்டு அறைகளையும் திறந்து அதற்குள் மேல் அறையில் ஒரு பெட்டியையும் கீழ்புறம் உள்ள அறையில் ஒரு பெட்டியையும் வைத்து அதற்கு சிற்சபை பொற்சபை என்று பெயரிட்டு அழைத்தார் .

**1892** ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 6 ம் நாள் சத்திய ஞானசபையின் பெயரை கருணாநந்த வல்லி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் தேவஸ்தானம் என சபாபதி சிவாசாரியார் அழைக்கத் தொடங்கிய சமயம் பல அன்பர்கள் எதிப்புத் தெரிவித்தும் பயனற்றுப் போயிற்று . 1893 ம் வருடம் ஜூன் மாதம் 30 ம் நாள் சத்திய ஞான சபையின் உட்புறம் சிவலிங்கம் வைக்கப்பட்டு ஞானசபையின் மேல்புறம் வள்ளல் பெருமானால் வைக்கப்பட்ட கலசத்தை அகற்றிவிட்டு சமய நெறிப்படி ஒரு கும்பத்தை நிறுத்தி ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் முதல் குட முழுக்குச் செய்தார் . அன்றே வள்ளல் பெருமான் தன் வழி வழித் தொண்டர்களுக்கு வைத்திருந்த பொருட்கள் கொள்ளை போய் வள்ளல் பெருமான் சுட்டிக்காட்டிய ஞானசபை வழிபாட்டு முறையும் காற்றில் பறந்து போனது . தமிழ் மக்கள் அன்றைய தினம் ஆடூர் சபாபதி சிவாச்சாரியாரால் ஏமாற்றப்பட்டார்கள் . அடுத்த 5 ம் நாள் 1893 ம் ஆண்டு ஜூலை மாதம் 4 ம் நாள் தானே வடலூர் தருமச் சாலைக்கும் ஞான சபைக்கும் அறங்காவலர் என்று சபாபதிச் சிவாச்சாரியார் டிரஸ்டியாக விளம்பரம் வெளியிட்டார்கள் . எங்கிருந்தோ வந்த ஒரு வேதியர் , **ஒரு தமிழராக வள்ளல் பெருமான் தோன்றியதை ஏற்றுக் கொள்ளாததால் அவருடைய கொள்கைக்கு நேர் மாறாக தன் உஞ்சவிருத்திக் கொள்கையை நியாயப்படுத்திக்கொண்டு** வஞ்சக வேலையில் இறங்கியதை சைவர்கள், மடாதிபதிகள் அனைவரும் ஆதரித்ததை அப்பாவித் தமிழன் ஏற்றுக் கொண்டுவிட்டான் .

**வ**ழி வழியாக வந்த தமிழ் மண்ணின் சித்தர் பெருமக்களின் பிள்ளைகளுக்கும் உலக மக்களில் உள்ளன்பு உள்ளவர்களுக்கும் உயிர் இரக்கம் உள்ளவர்களுக்கு மட்டுமே உரியது என்று வள்ளல் பெருமான் வெளியிடாது இரகசியமாக பாதுகாக்கப் பட்ட பொன் மூட்டை என்று வள்ளல் பெருமானால் பெயரிடப்பட்டு வைக்கப்பட்ட மிகப்பெரிய அறிவு விளக்கமாகிய அனுபவ நூலான ஆறாம் திருமுறையை திருச்சியைச் சேர்ந்த உலகநாதன் என்பார் பொருளுதவியுடன் வேலூர் பத்மனாபன் , பெங்களூர் இராகவேலு , சுப்புராயர் என்பார்கள் முதல் முறையாக வெளியிட்டார்கள் .

**இ**தைக் கண்ட சைவர்கள் மீண்டும் போர் தொடுக்க ஆரம்பித்தார்கள் . இதுவரை அவர்களால் அடிமைப் படுத்தப்பட்ட உண்மைத் தமிழ் மக்கள் விழிக்கத் தொடங்கினார்கள் . ஸ்தூல பஞ்சாச்சரம் , சூட்சம பஞ்சாச்சரம், காரண பஞ்சாச்சரம் , அஷ்டாச்சரம்,சடாட்சரம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டால் நாம் வயிறு வளர்க்க முடியாது போய்விடும் என்று பயந்த மடாதிபதிகள் , சைவர்கள் , அந்தணர்கள் , மீண்டும் நாவலரின் உறவினரான கதிர்வேல் என்பவரை தூண்டி விட்டு மருட்பா போரை ஆரம்பித்து அது

மிகப் பெரிய தோல்வி அடைந்தது .

**இ**வை அனைத்தையும் வள்ளல் பெருமானின் முதல் தொண்டராக இருந்த கல்பட்டு ஐயா அவர்கள் அமைதியுடன் பார்த்துக்கொண்டு இருந்தார்கள் . அவர்கள் நோக்கம் எல்லாம் உயிர்களுக்கு உபகாரமும் , சோறிடும் பணியும் வள்ளல் பெருமானின் நெறி முறைகளிலும் மட்டுமே மூழ்கியிருந்தார்கள் . **1902** ம் வருடம் பிப்ரவரி மாதம் 8 ம் நாள் தன் மாணவராகிய சுப்புராய பரதேசியிடம் தருமச் சாலையை கல்பட்டு ஐயா ஒப்படைத்து விட்டு வள்ளல் பெருமானிடம் தஞ்சம் புகும் தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தார்கள் . உடன் இருந்தவர்களுக்கோ இது என்ன விந்தை ! வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டு 25 ஆண்டுகள் கழித்து இவர் எப்படி வள்ளல் பெருமானிடம் தஞ்சமடைவார் என்று சந்தேக நோக்குடனும் அவனம்பிக்கையுடனும் இருந்ததை அறிந்த கல்பட்டு ஐயா அவர்கள் என்னை வள்ளல் பெருமான் ஆதியில் நேரில் வந்து ஆட்கொண்டு வடலூருக்கு அழைத்து வந்ததுபோல் மீண்டும் என்னை அழைத்துக் கொள்ள நிச்சயம் வள்ளல் பெருமான் வருவார்கள் என்று பகிரங்கமாகவே சொல்லி வந்தார்கள் . அற்ப விசுவாசிகள் எல்லாம் அதிசயிக்க அந்த அற்புதம் சரியாக 48 நாட்கள் கழித்து 1902 ம் வருடம் ஏப்ரல் மாதம் 26 ம் நாள் வள்ளல் பெருமான் தருமச் சாலையில் கல்பட்டு ஐயா முன் தோன்றினார்கள் ,வள்ளல் பெருமான் கல்பட்டாரை நோக்க கல்பட்டாரோ நித்திய மெய்வாழ்வு பெற்றார்கள் .

**கல்பட்டு ஐயாவின்** எண்ணம் நிறைவேறியது . ஆம் தன் திருக்கரங்களில் அள்ளி அள்ளிக் கொடுத்து பசியை நீக்கிய அந்த உத்தமரின் அழியாத **நித்திய தேகத்தை** தருமச் சாலையின் கீழ்புறத்தில் **வள்ளல் பெருமானே நல்லடக்கம் செய்தார்கள்.** இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு பின்பு முதல் முறையாக வள்ளல் பெருமான் தருமச் சாலைக்கு வருகை புரிந்தார்கள் இது வரலாற்று உண்மை . இதை எல்லாம் பார்த்த ஆடூர் சபாபதிச் சிவாச்சாரியார் அப்போது தான் வள்ளல் பெருமானைப் பற்றி முழுமையாய் புரிந்து கொண்டார் . தன் அற்ப விசுவாசத்தால் செய்த அடாத செயல்களை நினைத்து வருந்தி படுத்த படுக்கையாகி நோய்வாய்ப் பட்டு **1903** ம்



ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் இறந்து போனார் .

## கல்பட்டார் சமாதி - வடலூர்

வள்ளல் பெருமானின் வழி வழித் தொண்டர்களில் முதன்மை பெற்றவர்களில் **கல்பட்டு ஐயா , கட்டமுத்துபாளையம் நாராயணர் , சுப்புராய பரதேசி , காரணப்பட்டு கந்த சாமி , நெல்லூர் ஐயர் கொண்டாரெட்டியார், பிறையாறு நளச் சக்கரவர்த்தி , இவர் சகோதரர் பிறையாறு சிதம்பரம் சாமிகள்** இவர்கள் அனைவரும் சன்மார்க்கத்தின் களங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர்கள் . காரணம் இவர்கள் அனைவரும் தருமச் சாலை சம்பந்தம் உடையவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும் . இவர்களில் நளச் சக்கரவர்த்தி சாமிகளும் , சிதம்பர சாமிகளும் மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையின் பொறுப்பாளர்களாக இருந்து வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்ட அறையை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தவர்கள் ஆவார்கள்.பிறையாறு சிதம்பரசாமிகளின் அன்பர்களே இன்றுவரை தருமச் சாலையை பல இடங்களில் நடத்தி வருகின்றார்கள் . இவர் வைத்தியத்திலும் வாத வித்தையிலும் மகா வல்லவராகத் திகழ்ந்தார்கள் . பல காலம் மேட்டுக் குப்பத்தில் தங்கி மக்களுக்கு தயவு நெறியையும் சன்மார்க்க வழிமுறைகளையும் வள்ளல் பெருமான் கையாண்ட கற்ப முறைகளையும் அன்பர்களுக்குபோதித்தவர் ஆவர் .

மேலும் சிவகிரி சாது தவத்திரு **முருகானந்த சாமிகள்** வள்ளல் பெருமான் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு குமரி முதல் இமயம் வரை 108 சன்மார்க்க சங்கங்களை ஏற்படுத்தி , சன்மார்க்கத்தையும் தயவு நெறியையும் போதித்தார்கள் . இவர் வழியில் வந்த **வல்ல நாட்டு சாமிகளும், இராமனாதபுரம் அழகன் குளம் சித்திர முத்து சாமிகளும்** சன்மார்க்கத்திற்கு பெரும் தொண்டு செய்தார்கள் . தஞ்சை மாவட்டத்தில் பல சன்மார்க்க சங்கங்களை நிறுவி தொண்டு செய்து பெரும் புலமை பெற்ற **செம்பிய நல்லூர் கோவிந்த சாமியும்** குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அனைவருமே சன்மார்க்கத்திற்கும் தயவு நெறிக்கும் சான்றாக வள்ளல் பெருமான் வழியில் வந்து பல அற்புதங்களை நிகழ்த்தி உண்மை தொண்டர்களாக இருந்து வந்தவர்கள் . ஆக வள்ளல் பெருமான் சாலை சம்பந்தம் உடைய வழி வழித் தொண்டர்களுக்கே முதலிடம் கொடுத்தார்கள் என்பது இதிலிருந்து புலனாகின்றது. வள்ளல் பெருமான் சித்திவளாகத் திருமாளிகையில் இருந்த சமயம் பல சன்மார்க்க சங்க சாதுக்கள் உருவாகி இருக்கின்றார்கள் . அதில் குறிப்பிடத் தக்கவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் **வடுகபட்டி மகா சுருளி சாமிகள் , பொள்ளாச்சி புரவிப்பாளையம் கோடிச் சாமிகள் , நாகர்கோவில் சாமித்தோப்பு முத்துகுட்டி சாமிகள்** போன்றவர்கள் வள்ளல் பெருமான் வழி வந்தவர்கள் ஆவார்கள் .

**வ**ள்ளல் பெருமான் மீது அற்ப விசுவாசம் உள்ளவர்களும் சமயவாதிகளும் ஆசாரம் உள்ளவர்களும் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்ட பின்பு தங்கள் வேலைகளை மீண்டும் செயல் படுத்தத் தொடங்கினார்கள் . அதாவது வள்ளல் பெருமான் தங்கள் இனத்தவர் , தங்கள் சாதிக்காரர் என்றும் தங்கள் சைவ நெறி வந்தவர் என்றும் சொல்லிக் கொண்டு ஆங்காங்கு சன்மார்க்க சங்கங்களில் ஊடுருவிக் கொண்டு உண்மை சன்மார்க்கிகளை வெளியில் தள்ளி விட்டு தாங்களே தங்கள் மதச் சடங்கு , மற்றும் சமயச் சடங்கு இவைகளை சன்மார்க்கம் என்ற பெயரில் நடத்தத் துவங்கினார்கள் . கடவுளை மனிதனாக உருவாக்கிக் காட்டி வைணவத்தை வளர்த்த வைணவர்கள் தங்கள் சமய நெறிகளை சன்மார்க்கம் என்ற பெயரில் வளர்க்கத் தொடங்கினார்கள் . பெரும்பாலும் சமயவாதிகள் வள்ளல் பெருமான் எழுதி வெளியிட்ட முதல் நான்கு திருமுறைகளில் எதையும் புகுத்தாமல் , **ஐந்தாம் ஆறாம் திருமுறை போன்ற பாடல்களில் தங்களின் சொந்த சமய கருத்துக்கள் அடங்கிய பாடல்களை புகுத்தி வெளியிட்டார்கள்** . வள்ளல் பெருமான் எழுதிய விண்ணப்பம் , உபதேசம் போன்ற உரைநடைக் கருத்துக்களில் பல பல சமயக் கருத்துக்களையும் புகுத்தினார்கள் .

**ச**பாபதிச் சிவாச்சாரியார் தன் மகன் சபா நடேசன் , மற்றும் மகள் சிவகாமியின் கணவர் மு . பஞ்சாபகேசன் இவர்களுக்குத் தன் அறங்காவலர் பதவியை மாற்றிக் கொடுத்தவுடன் இவர்கள் இருவரும் தருமச்சாலை பணியில் ஈடுபடாமல் , சோறிடும் பணியைப் புறக்கணித்து ஞான சபையின் பின் புறம் ஒரு விநாயகர் கோயில் கட்ட முயன்று அது முற்றுப்பெறாமல் வெறும் அடித்தளத்துடன் இன்றும் காணப் படுகின்றது . இன்று வரை ஞான சபையின் வழி பாடு சமய சடங்குகளுடன் ஆலய வழிபாடு போன்றே நடந்து வருகின்றது . வள்ளல் பெருமான் நிறுவிய அனுபவ விளக்கமாகிய அறிவுத் திருக்கோயில் சாதாரண சமயவாதிகளின் கூடாரமாக போய்விட்டது . காரணம் அந்தணர்களும் அவர்களுக்குத் துணை போகும் சைவர்களுமே இதற்கு காரணம் என்பதை மறுக்க முடியாது .

**வ**ள்ளல் பெருமான் இந்த உலகத்திற்கு வருகை புரிந்ததின் நோக்கம் இவ் வுலக மக்கள் நித்திய மெய் வாழ்வாகிய மரணம் இல்லாப் பெரு வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகவே வந்தார்கள் . அந்த சாகா கலையை நம் தமிழ் சித்தர்கள் உபதேசித்த முறையிலேயே சற்று எளிதாக சன்மார்க்கத்திற்கு முதல் சாதனம் தயவு என்றும் , அதைப் பெற ஒழுக்கம் தேவை என்றும் அந்த ஒழுக்கத்தின் முடிவே அருளாகும் என்றும் அந்த அருளே அன்பாக மாறி உயிரும் உடலும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது , உடல் அழியாது விளங்கிடும் **சாகாக்கலை** என்றும் அறிவுறுத்தி அதை நடைமுறைப் படுத்தி அதைத் தம் வழி வழித் தொண்டர்கள் யாவரும் கடைப்பிடித்து நன்மை அடையச் செய்தார்கள் . ***தயவு முதற் காரணமாக*** இருப்பதால் தருமச் சாலையையும் , ***அருள் அடுத்த காரணமாக*** இருப்பதால் ஞான சபையையும் , ***அன்பு முடிவாக*** இருப்பதால் சித்தி வளாக திரு மாளிகையையும் வள்ளல் பெருமான் அமைத்தார்கள். இதையே நம் சித்தர் பெருமக்கள் அறம் பொருள் இன்பம் என்றும், சத் சித் ஆனந்தம் என்றும் , அகாரம் உகாரம் மகாரம் என்ற பிரணவம் என்றும் சுட்டிக் காட்டினார்கள் .

**வ**ள்ளல் பெருமான் 12 வயதுக்கு உட்பட்டசிறுவர் , 72 வயதுக்கு மேற்பட்ட பெரியவர் இவர்களையே அறிவு விளக்கமாகிய ஞான சபைக்கு பணி செய்ய நியமித்தார்கள் . காரணம் 12 வயதுக்குள் ஒரு சாதகன் உண்மை விளக்கமாகிய ஆன்ம சொரூபத்தை தெரிந்து கொள்ள வேண்டும் , 12 வயது கடந்தால் சுக்கில விருத்தி உண்டாகி விடும் , சுக்கில விருத்தி உண்டானவர்கள் ஒரு போதும் உண்மை நெறியில் நடக்க முடியாது என்றும் , 72 வயதுக்கு மேற் பட்டவர்கள் என்றால் சுக்கில உற்பத்தி இல்லாதவர் , இவர் மனத்தளவில் அசுத்த நெறி காரியப்பட்டாலும் , செயல் அளவில் ஒன்றும் செய்ய இயலாதவர் என்றபடியால் , இவர் சன்மார்க்கமாகிய உண்மை நெறிக்கு அருகதை அற்றவர் என்று தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் . அப்படி என்றால் ,12 வயதுக்கு மேற் பட்ட மற்றும் , 72 வயதுக்கு உட்பட்டவர்களும் நிலை என்ன என்று பார்க்கும் சமயம் சுக்கில விரயம் செய்பவர்கள் , அதாவது குடும்பம் மனைவி மக்கள் போன்ற சகல சம்பத்துக்களைப் பெற்றேன் என்று சொல்லக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் சன்மார்க்க நெறிக்கு அருகதை அல்லாதவர்கள் என்று குறிப்பிடுகின்றார்கள் . அதே சமயம் நம் சித்தர் பெருமக்கள் அறிவுறுத்திய 12 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் சுக்கில விரயம் இல்லாது இருப்பவர்களுக்கு , அதாவது சுக்கிலத்தை வீணில் விரயம் செய்யாது தயவு நெறியோடு வாழ்பவர்களுக்கு வள்ளல் பெருமான் மிகப் பெரிய அருளமுதமாகிய நல்ல மருந்து என்று ஒரு கற்ப மருந்தை தெள்ளத் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள் . அந்த மருந்தே இந்த உடலை விட்டு உயிர் நீங்கா வண்ணம் , உடல் அழியா வண்ணம் உத்தம சித்தியான மரணமிலாப் பெருவாழ்வு பெற காரணமாக இருக்கிறது . நல்ல மருந்து இம்மருந்து என்று இராகம் போடும் சோம்பேறிகள் இது வரை அதைக் கண்டுகொள்ள வில்லை . காரணம் அவர்கள் நோக்கம் எல்லாம் வயிறு வளர்ப்பதிலேயே காலம் முழுதும் செலவாயிற்று . 12 வயதுக்குள் உண்மை தெரிந்தவர்கள் சுக்கிலத்தை விரயம் செய்யாததனால் அவர்கள் எந்த ஒரு சாதனமும் செய்யாவேண்டியதோ கற்பங்கள் போன்ற மருந்தோ தேவையில்லை .இதற்கு மேற்பட்ட வயதுடைய தயவுள்ள சாமான்யர்கள் ஒழுக்கத்துடன் இருந்து இம் மருந்தை

கைக்கொள்வார் களேயானால் நிச்சயமாக இந்த தேகத்தை அழியாத தேகமாக்கிக் கொள்ளலாம் என்று வள்ளல் பெருமான் சத்தியம் சத்தியம் சத்தியம் என பெருமுழக்கம் செய்திருக்கின்றார்கள் .

**ஆ**னால் இன்றைய சன்மார்க்கிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பெரும்பாலும் சமயவாதி களாகவே இருப்பதனால் இவர்கள் அருட்பாக்களை பாடுவதும் , அகவல் ஓதுவதும் , வள்ளல் பெருமான் எனக்கு காட்சி கொடுத்தார் என்று சொல்வதும் , எனக்கு சாகா வரம் தந்து விட்டார் என்று சொல்வதும் , எனது உடலில் புகுந்து கொண்டார் என்று சொல்வதும், எனது வீட்டில் அடைக்கலம் புகுந்தார் என்று சொல்வதும் , இன்னும் சிலர் வள்ளல் பெருமான் தருமச் சாலையை ஆரம்பிக்கவே இல்லை என்றும் , அது சோம்பேறிகளின் கூடாரம் என்றும் , சோறு போடுவதால் எந்த நன்மையும் இல்லை என்றும் , சோறிடுவதால் சாகாவரம் பெற முடியாது என்றும் , இவையெல்லாம் வள்ளல் பெருமானே என்னிடம் நேரடியாக வந்து பேசி விட்டுப் போனார் என்றும் , தியானம் , மந்திரம் , தவம் உபதேசம் போன்றவைகளால் தான் சாகாவரம் பெற முடியும் என்று வள்ளல் பெருமான் சொல்லி விட்டுப் போனதாகவும் , இந்த உடல் ஒரு போதும் நிலைக்காது என்றும் , உயிர்தான் அழியாது என்றும் , இந்த உடல் சன்மார்க்கத்தை பெற முடியாது , இதன் உள் இருக்கும் சூட்சும உடல் தான் சாகாவரம் பெறும் என்றும் வேதாந்திகள் கூற்றை சொல்லிக்கொண்டு , உடலில் அனைத்து நோய்களுடனும் , ஐந்து வேளையும் உணவு உண்டு , மனைவிகள் , மக்கள் , குடும்பம் , வீடு , செல்வம் எல்லாவற்றையும் சம்பாதித்து , தன் குடும்பம் சுற்றத்தார் போன்றவர்கள் என்றும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய அழியும் பொருளாகிய காசு பணம் இவைகளுக்கு தியானம் சொல்லிக் கொடுப்பது , மந்திரம் சொல்லி உபதேசம் கொடுப்பது , பல விதமான தீட்சை செய்து வைப்பது ,வைத்தியம் செய்வது போன்ற அடாத காரியங்களில் ஈடு பட்டு , குடில் ஆசிரமம் , அறக்கட்டளை , மன்றம் சங்கம் போன்ற பல அமைப்புகளை ஏற்படுத்தி , கண்ணும் கெட்டு , அறிவு தடுமாறி , வள்ளல் பெருமான் எனக்கு காட்சி கொடுத்தால்த் தான் நான் சாப்பிடுவேன் என்று சொல்லி பிறரை ஏமாற்றி தானும் தன் குடும்பமும் வாழும் அற்ப வாழ்வுக்காக நித்தயமாய் விளங்கும் இந்த உடலை மண்ணுக்கோ , நெருப்புக்கோ இரையாக்கி விடுகின்றார்கள் . இன்றும் சிலர் வள்ளல் பெருமானை உலோகத்தால் செய்து , அதற்கு அபிசேகம் , திருநீறு அலங்காரம் செய்து அவருக்கு மிகப் பெரிய இழுக்கை தேடிக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள் .

**சி**லர் கரிசாலை , தூதுளை , முசுமுசுக்கை போன்ற தாவரங்களை பறித்து காயவைத்து இடித்து சூரணம் லேகியம் போன்றவைகளைச் செய்தோ அல்லது உணவில் தினம் உண்டோ , எந்த வகையாலும் அதை உட்கொண்டால் இத்தேகம் அழியாது விளங்கும் என்றும் , கரிசாலையை மிகப் பெரிய கற்ப மூலிகை என்று சொன்னதாகச் சொல்லி அதைத் தின்று வயிற்றில் நோய் ஏற்பட்டும் ,புழுக்காத வஸ்து என்று நட்டுச் சர்க்கரை என்ற சுண்ணாம்புச் சத்துள்ள கரும்பின் பாகில் இருந்து எடுக்கின்ற இனிப்பை உண்டு , நட்டுச் சர்க்கரையில் உள்ள சுண்ணாம்புச் சத்தும் , கரிசாலையில் உள்ள இரும்புச் சத்தும் சேர்த்து கொதிக்க வைத்த நீரில் உடலில் உள்ளே செல்லும் சமயம் அது சிறுநீரகத்திற்குச் சென்று அங்கு சுத்தம் செய்யப்படும் இரத்தத்திலே கலந்து அந்த இரத்தமானது இதயத்திற்கு செல்லும் சமயம் அதிலுள்ள இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு , இன்று பல சன்மார்க்கிகள் என்னும் சைவ உணவு உண்ணும் பழக்கம் உள்ளவர்களும் மார்புநோயால் துன்பப்படுவதை பார்க்க முடிகிறது .இதில் இன்னும் பல திறமை சாலிகள் வைத்தியம் என்ற போர்வையில் முறையாக குருபாரம்பரியத்தில் வராது புத்தகத்தைப் படித்து வைத்தியர் என்று சொல்லிக் கொண்டு இந்த இதய நோயான மார்பு நோய்க்கு மருந்து கொடுக்கின்றேன் என்று சன்மார்க்கிகள் மற்றும் சைவ உணவுப்பழக்கம் உள்ளவர்களிடத்தில் உள்ள காசு பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கின்றார்கள் . இதில் மிகப்பெரிய விந்தை என்னவென்றால் இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டு அப்பாவி மக்களின் பணத்தை மருந்து என்று சொல்லி விற்கின்றவர்களும் தங்களை வள்ளல் பெருமான் வழிவந்தவர்கள் என்றும் சித்தர்களின் வாரிசுகள் என்றும் சொல்வதுதான் மிகப்பெரிய கேலியாக இருக்கின்றது . பாவம் மக்களும் தங்கள் உணவுப் பழக்கவழக்கத்தால் ஏற்படும்

நோய்களை முறையான மருத்துவர்களிடம் அணுகிப் போக்கிக் கொள்ளாமல் இதுபோன்ற வேடதாரிகள் கையில் சிக்கி வருகின்றார்கள் . **கரிசாலையை திண்ணச் சொல்கின்றவர்களும் இவர்களே , அதனால் ஏற்படும் மார்பு நோய்க்கு மருந்து கொடுப்பவர்களும் இவர்களே .** இது போன்ற ஈனச் செயலை தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் செய்ததில்லை . இத் தமிழ் மண்ணுக்கு வடக்கே தெலுங்குதேசத்தில் இருந்து வந்தவர்களே இந்த தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் . பாவம் தமிழன் இதிலும் ஏமாந்து போய்விட்டான் . வள்ளல் பெருமான் எல்லாப் பிணிக்கும் இதுவே மருந்து என்று ஒரே ஒரு மருந்தை நல்ல மருந்து என்றும் அது ஞான மருந்தாகி என்னவெல்லாம் செய்யும் என்று திருவருட்பாவில் பல இடங்களிலும் ஞான மருந்து என்ற பாடல் தொகுப்பிலும் சொல்லியிருக்கின்றார்கள் .இதிலும் மாறுபட்ட சிலர் தங்கள் புகழை வளர்த்துக்கொள்ளவும் ,பலரால் பாராட்டுப்பெறவும் , கலியுக ஆசான் , சிவராஜயோகி என்ற பல புனைப்பெயர்கள் வைத்துக்கொண்டு சித்தர்கள் பெயரால் அவர்களின் வாாசு என்று சொல்லி அவர்களின் பெயரை மந்திரம் போல் உச்சரிக்கச் செய்தும் சித்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஓலைச்சுவடியில் முற்பிறவி , பாவம் , புண்ணியம் நன்மை தீமை இவையெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்கள் என்றும் , **சில நாடி ஜோதிடமாகிய ஓலை சுவடி ஜோசியத்தில் இமக்களை நம்பவைத்து** , ஓலைச் சுவடிபடிப்பவர்களுக்கும் தங்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு பணம் , பொருள் , நகை , வைரம் , பட்டு மற்றும் தங்க ஆபரணங்கள் இவைகளைக் கொடுத்து நாடிஜோதிடம் படிப்பவர்களையும் தன்னையும் வணங்கினால் முற்பிறவியில் நீங்கள் செய்த பாவம் எல்லாம் போய்விடும் என்று சொல்லி உணவு தானியங்களைப் பெற்று பசித்த அழுக்காடை உடுத்திய ஏழைகளுக்கு சோறு போடாது அவர்களை ஆசிரமத்திற்கு வெளியே தள்ளிவிட்டு பணக்கார வெள்ளை வேட்டிக்காரர்களுக்கு சோறுபோட்டு அவர்களுக்கு தீட்சை , மந்திரம் , உபதேசம் போன்றவைகளையும் செய்து , தங்களையும் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் வாழ வைக்கப் பாடுபட்டு கண்ணும் கெட்டு உடம்பும் கெட்டு வினையைச் சம்பாதித்து , பாவம் நம் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் . மிகப்பெரிய மோசடியான இந்த நாடி ஜோதிட வித்தையானது மகான்களின் பெயரால் நடந்து வருகின்றதைப் பார்க்கும் சமயம் அற்பவாழ்வுக்காகவும் அரைச்சான் வயிற்றுக்காகவும் ஏன் இந்தக் கயவர்கள் மக்களை இப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதே பெரிய புதிராக உள்ளது . இந்த காரியத்திற்கும் தமிழ் மண்ணிலே பிறந்தவர்கள் , தமிழ் பாரம்பரியத்திலே தோன்றியவர்கள் இன்று வரை அடிமையாகி தன் சொத்துக்களை அன்னதானம் என்று செலவு செய்து மேலும் மேலும் பிறவிக்கு ஏதுவான வல்வினையை இந்த மோசடிப்பேர்வழிகள் மூலம் பெருக்கிக்கொள்கிறார்கள் . இதில் மிகப்பெரிய விந்தை என்னவென்றால் இவ்வளவு பெரிய கட்டுக்கதையான மோசடியும் வள்ளல் பெருமான் பெயரை வைத்தே நடைபெற்றுவருகின்றது .

இதற்கெல்லாம் காரணம் என்ன வென்றால் வள்ளல் பெருமான் சித்தி பெற்று ஜோதி மயமாக மாறிப் போய்விட்டார் அவர் ஐம்பத்தொன்று வயதிலேயே சித்தி பெற்று விட்டாரே , இனி மேல் எங்கு வர போகின்றார் என்று ஒரு அசட்டுத் தைரியத்துடனும் , அவநம்பிக்கையுடனும் இவர்கள் அனைவரும் வள்ளல் பெருமான் கொள்கைகளை காசுக்கும் வயிற்றுக்கும் பயன்படுத்தி வள்ளல் பெருமானை இன்றும் விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் . சிலர் வள்ளல் பெருமான் பெயரைச் சொல்லி வீணுக்கு அழுது காசு பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் . ஆக இவர்கள் யாருக்கும் ஒரு கடுகளவேனும் தயவோ , இரக்கமோ , உயிர்கள் மேல் அன்போ , ஜீவகாருண்யமோ , பசித்தவர்களுக்கு உணவு அளிப்பதோ இன்றுவரை இல்லை . இவர்கள் ஓரளவு அருட்பாக்களை மனப்பாடம் செய்து கொண்டிருப்பதால் அப்பாவி தமிழ் மக்கள் இவர்களை நம்பி , தம் சொத்து , காசு பணத்தை இழந்து ஏமாந்து போகின்றார்கள் . ஆக இப்படிப்பட்ட வள்ளல் பெருமான் பெயரைச் சொல்லி ஏமாற்றி பிழைக்கும் இவர்கள் ஒரு போதும் தமிழ் மண்ணுக்கு உரியவர்கள் அல்லர் . தமிழகத்திற்கு வடக்குப் பகுதியில் இருந்து வந்த அந்தணர்களும் , வைணவர்களுமே ஆவார்கள் . காரணம் ஒரு காலத்தில் வடக்கே தோன்றிய பௌத்தமும் சமணமும் கிழக்கே

பரவியது . கிழக்கே தோன்றிய சைவமும் வைணவமும் வடக்கே பரவியது . காரணம் வடக்கே தோன்றிய பௌத்தம் சமணம் இரண்டுமே உயிர் இரக்கத்தைப் பற்றிப் பேசியது . கிழக்கே தோன்றிய சைவமும் வைணவமும் கொஞ்சம் கூட இரக்கத்தைப் பற்றிப்பேசாது அப்பாவி மக்களை ஏமாற்றியது . **இன்றுவரை வடக்கே சைவத்திற்கும் வைணவத்திற்கும் மக்கள் அடிமையாகிக் கிடக்கின்றார்கள் .**

**வ**ள்ளல் பெருமான் முதல் நான்கு திருமுறைகளை தன் அன்பரைக்கொண்டு வெளியிட்டார்கள் . அடுத்த ஐந்தாவது திருமுறை வெளியிடுவதற்கு அன்பர்கள் அனுமதி கேட்கும் சமயம் ,வெளியிட அனுமதி கொடுக்கவில்லை . மிகப்பெரிய அருள் அனுபவமான ஆறாம் திருமுறையை தன்னுடனேயே வைத்திருந்தார்கள் . ஆறாம் திருமுறை , சாகாக்கல்வி சம்பந்தப்பட்ட சன்மார்க்க சாதுக்கள் ஆகிய ஞானிகளுக்கும் தருமச்சாலை சார்புடைய உண்மை இரக்கம் உண்மை தயவுடைய ஜீவகாருண்ய ஒழுக்கம் உள்ளவர்களுக்குமே உரியது ஆகையால் இது குருபாரம்பரியத்தில் வந்த நம் சித்தர் பெருமக்கள் வழியில் மேன்மையுடைய சாத்தியர்களுக்கே புரியும் அல்லாது மற்ற சாதகர்களுக்கும் சாமானியர்களுக்கும் இது ஒருபோதும் விளங்காது என்று அறுதியிட்டுக் கூறியது மட்டுமின்றி அந்த ஆறாம் திருமுறையின் அற்புதத்தை தருமச்சாலை சம்பந்தம் உடைய கல்பட்டு ஐயாவுக்கே உபதேசித்து அருளினார்கள் . **இன்று வரை தருமச்சாலை சம்பந்தம் உடைய வள்ளல் பெருமானின் முதல் தொண்டராகிய கல்பட்டு ஐயாவின் வழிவந்தவர்களுக்கு அந்த ஆறாம் திருமுறையின் இரகசியமும் அற்புதமும் விளங்கிவருகின்றது** . ஆனால் சபாபதி சிவாச்சாரியார் வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டதற்குப் பின்பு மேட்டுக்குப்பத்தில் வள்ளல் பெருமானால் பாதுகாக்கப்பட்டு ஞானிகளுக்கே உரியது என்று கருதிய ஆறாம் திருமுறையையும் மற்றப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு வந்து தன்னுடைய வீட்டில் வைத்திருந்து பின்னாளில் திருச்சி உலகநாதன் பெங்களூர் ராகவலு போன்றவர்கள் இதை வெளியிட்டார்கள் . இவர்களுக்கு அந்த ஆறாம் திருமுறையைப் பற்றி ஒன்றும் தெரியாது . இன்றும் மேட்டுக்குப்பத்தில் இருந்து எடுத்து வந்த பல பொருட்கள் , ஒரு சில பெட்டிகளில் ஆடூர் சபாபதியினர் வாரிசுகளாகிய ஞானசபையை பராமரித்து வரும் சிவாச்சாரியார் வீட்டிலிருந்து வருகின்றது .

**வ**ள்ளல் பெருமான் வெளியிடாது வைத்திருந்த ஆறாம் திருமுறையின் பதிகங்களை பின்னாளில் வந்த சன்மார்க்க சங்க அனுபவம் பெற்ற பல சாதுக்கள் தொடவோ படிக்கவோ அஞ்சியதை , இன்று ஒன்றுமே தெரியாத எந்த விதமான அக அனுபவமோ , புற அனுபவமோ ஜீவதயவோ கொஞ்சம் கூட இல்லாத பலர் படிக்கவும் ,பார்க்கவும் , சத்விசாரம் என்ற பெயரில் ஒன்றுகிடக்க ஒன்றை உளறவும் , தங்களுடைய சுயநலத்திற்காக அதை பயன்படுத்துவதையும் காணும் போது இவர்கள் மீது மிகுந்த அனுதாபமே ஏற்படுகின்றது . இன்னும் வள்ளல் பெருமான் ஒரு உரை நடை நூல் எழுதியிருப்பதாகவும் அதில் நிறைய கருத்துக்கள் வள்ளல் பெருமான் சொல்லியிருப்பதகவும் பொய்சொல்லி அதில் சமயவாதிகள் தங்கள் எண்ணம் போல் பல சைவ சமய கொள்கைகளை புகுத்தி **வெளியிட்டிருக்கின்றார்கள்** . வள்ளல் பெருமான் எழுதிய பல பத்திரிக்கையிலும் , விண்ணப்பங்களிலும் தங்களின் இடைச் செருகல்களை எழுதி புகுத்தியிருக்கின்றார்கள் . வள்ளல் பெருமான் இது போன்று ஒரு உரைநடைநூலை எழுதவே இல்லை . வள்ளல் பெருமானைப் பற்றிநாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் சொல்லிய ஜீவகாருண்ய ஒழுக்கம் மற்றும் விண்ணப்பங்கள் , கட்டளைகள் , எச்சரிப்புப் பத்திரிக்கைகள் கொடிகட்டிக் கொண்டதன் விளக்கம் போன்றவைகளே .இதிலும் சிலர் பிற்காலத்தில் சமயக்கருத்துக்களைப் புகுத்திவிட்டார்கள் . **வள்ளல் பெருமான் தம் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்களாகிய திருமுகங்களே ஓரளவு இன்றுவரை பல உண்மைகளை நமக்கு புரியவைக்கின்றது** . ஆக ஞானிகளுக்கே உரிய ஆறாம் திருமுறையை இன்று இசைக் கச்சேரியாகவும்,பட்டிமன்றம் , வழக்காடுமன்றம் , கருத்தரங்கம் சத்விசாரம் என்றும் பலர் எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் ஒலிநாடாக்களிலும் புத்தகங்களிலும் எழுதி சன்மார்க்கிகள் என்று போலிவேசமிட்டும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் .

**வ**ள்ளல் பெருமான் சித்திவளாகத் திருமாளிகையின் உட்புறத்தில் ஞான சிங்காதன பெரும் பீடத்தில் அமர்ந்து பேரானந்த நித்திரை செய்து கொண்டிருந்தாலும் **அவ்வப்போது தம் அன்பர்களிடம் தோன்றுவது உண்மைதான்** . முதன் முதலாக சித்தி பெற்று 25 ஆண்டுகள் கழித்து கல்பட்டு ஐயா உயிர் அடக்கமாகிய ஜீவ சமாதி ஆகும் சமயம் தோன்றினார்கள். அடுத்து உலகம் எங்கும் சென்று உயிர் இரக்கமும் பசி தவிர்த்தல் உடைய உண்மை அன்பர்களாகிய **தருமச் சாலையின் வழி வழித் தொண்டர்களுக்கே கண்ணால் காணுகின்ற தேகத்துடன் தோற்றம் அளிக்கின்றார்கள்** என்பது அனுபவ ரீதியான உண்மை . ஆனால் இதை விஷமிகளும் போலிச் சன்மார்க்கிகளும் பயன்படுத்திக் கொண்டு தங்கள் அற்ப வாழ்விற்காக வள்ளல் பெருமான் வெளியிட்ட உண்மை நெறியை சாகாக் கலையை பிறருக்கு உபதேசிக்கின்றேன் என்று அப்பாவி தமிழ் மக்களை ஏமாற்றி முடிவில் கடவுள் தரக் கூடிய தண்டனையாகிய மரணத்தை ஏற்று தனக்கென ஒரு சமாதியைக் கட்டி அதற்கு வருடாவருடம் , மாதா மாதம் குரு பூசை என்று தன்னை வழிபடவும் செய்து வருகின்றார்கள் .

**வ**ள்ளல் பெருமான் இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் . பாவம் இவர்கள் உண்மை தெரியாது தானும் ஏமாந்து தன்னைச் சார்ந்தவர்களையும் ஏமாற்றிக் கொண்டு முடிவில் ஆடு மாடு போன்று செத்து நாறிப் போவதை சகிக்காமல் மீண்டும் இவர்கள் நன்மை அடைய நல்ல பிறவியான மனிதப் பிறவி கிடைக்க வேண்டுமே என்று சதா ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கின்றார்கள் . அவ்விண்ணப்பத்தின் விளக்கமாக அவருடைய கண்களில் தாரைதாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருக்கின்றது . **தமிழ் மண்ணின் மக்களுக்காக நம் வள்ளல் பெருமான் இராமலிங்க சாமிகள் அழுத வண்ணம் இருக்கின்றார்கள் .** தமிழ் மண்ணின் தந்தை நம்மை நித்திய மெய் வாழ்வு வாழ வைக்க முயன்று உலகமெல்லாம் போற்ற ஒளி வடிவம் பெற்று அழியாப் பொருளான அறிவு விளக்கத்தைக் கொடுத்து அன்புருவாக அருளுருவாகி ஞான சிங்காதனப் பெரும் பீடத்தில் திருவருட் செங்கோல் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

**தமிழ் மண்ணின் தந்தையின் (வரலாற்று) சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.**